உதயன்

விலை ரூபா 20

பக்கங்கள் 28

சுடர் 31 | கதிர் 148 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 09, வெள்ளிக்கிழமை 22.04.2016

35°c - 29°c
தெளிவான வானிலை

**உழவு இயந்திரம் தடம்புரண்டதில் தூக்குக் காவடி எடுத்தவர் சாவு**

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு அருகே பரிதாபச் சம்பவம்

பக். 02

# அதிகாரப் பகிர்வைப் பெறுவதில் தமிழர், முஸ்லிம்கள் ஓரணியில்

## கிழக்கில் இரு தரப்பும் நேற்று அறிவிப்பு

மட்டக்களப்பு, ஏப்ரல் 22

புதிய அரசமைப்பை உருவாக்குவதிலும், அதனூடாக முழுமையான அதிகாரப் பகிர்வைப் பெற்றுக் கொள்வதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றிணைந்து நிற்கின்றன. அத்துடன், அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்கு தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து முழுமையான ஆதரவை வழங்கத் தயாராகவுள்ளனர்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன், அமைச்சர் ரவூக் ஹக்கீம் ஆகியோர் நேற்று ஒரே மேடையில் தெரிவித்தனர் .



புதிய அரசமைப்புத் தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த முழுநாள் செயலமர்வு நேற்று மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் விடுதியில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரதான கட்சிகளின் உறுப்பினர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தனது உரையில்,

அதிகாரம் அர்த்தமுடையதாகப் பகிரப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலும், அரசமைப்புத் தொடர்பான நிலைப்பாட்டிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றிணைந்து நிற்கின்றன. இந்த நிலைப்பாடுதான் எம் இரண்டு இனங்களுக்கும் வெற்றியைக் கொண்டு வரும் - என்றார்.

இந்த நிலையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தனது உரையில்,

புதிய அரசமைப்பு ஊடாக வரப்போகும் பக். 23

# சமஷ்டி அதிகாரப் பகிர்வே அர்த்தமுடைய தீர்வாகும்

### ஒற்றையாட்சி சிறுபான்மையினருக்கு சிக்கலைத் தரும் என்கிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஏப். 22

ஒற்றையாட்சி முறைமை நீக்கப்பட்டு, முழுமையான சமஷ்டி முறைமையின் கீழ் வழங்கப்படும் அதிகாரப் பகிர்வுதான் அர்த்தமுள்ள தீர்வாக அமையும். தற்போதைய அரசமைப்பைக் கொண்டு இதைச் செய்ய முடியாது. ஆகவே, புதிய அரசமைப்புத் தேவைப்படுகின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது முஸ்லிம்களின் சம்மதத்துடன்தான் நடக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசமைப்பு பக். 23

# போர்க்குற்ற விசாரணைக்கு 44.2 வீதமானோர் எதிர்ப்பு

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22

இறுதிப் போர் தொடர்பில் எந்தவொரு விசாரணைப் பொறிமுறையும் தேவையில்லை என்று 44.2 சதவீதமானவர்களும், விசாரணைப் பொறிமுறை தேவை என்று 42.2 சதவீதமானவர்களும் தெரிவித்துள்ளதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

போருக்குப் பின்னரான காலப் பகுதியில் ஜனநாயகம் தொடர்பில் பக். 23

# இலங்கையின் மனித உரிமை நிலைவரம்; பிரிட்டன் கவலை

கொழும்பு, ஏப். 22

மனித உரிமை நிலைவரம் குறித்துப் பிரிட்டன் ஆழ்ந்த கவலை கொண்டுள்ள நாடுகளில் இலங்கையும் காணப்படுகிறது என்று, அந்த நாட்டின் வெளிவிவகார மற்றும் பொது நலவாய அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அச்சுறுத்தல்கள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் போன்றன இன்னும் தொடர்கின்றன என்றும் அந்த அலுவலகம் சுட்டிக் காட்டியுள்ளது.

2015ஆம் ஆண்டில் உலக நாடுகளில் மனித உரிமை நிலைவரம் குறித்த பிரிட்டனின் வருடாந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை நிலைவரம் குறித்து பிரிட்டன் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதுடன்,

அந்த நாடு பக். 24




பேரினவாதிகள் துள்ளிக் குதிக்கப் போயினம் பாருங்கோ...

# புலிகளின் பாடலைக் கேட்ட இளைஞன் குருநகரில் கைது

யாழ்ப்பாணம், ஏப்.22

விடுதலைப் புலிகள் அமைப்பின் பாடலைக் கைபேசியில் பதிவு செய்து கேட்டார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ். குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை யாழ். பொலிஸ் நிலைய சிவில் பொலிஸார், குருநகர்ப் பகுதியில் கடமை நிமிர்த்தம் சென்றுகொண்டிருந்தபோது, குறித்த இளைஞர் , விடுதலைப் புலிகள் அமைப்பின் பாடலைத் தனது கைபேசியில் பதிவு செய்து காணொலி மூலம் கேட்டுக் கொண்டிருந்துள்ளார்.

பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்த இளைஞரின்அருகே சென்ற பொலி பக். 24

# மரங்கள் அழிக்கப்படுவதாலேயே குடாநாட்டில் அதிக வெப்பநிலை

### திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி கருத்து

யாழ்ப்பாணம், ஏப். 22

மரங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்படுவதாலும், வாகனங்களின் அதிகரித்த பாவனையாலுமே வெப்பநிலை அதிகரித்துள்ளது என்று யாழ்.திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி எஸ்.பிரதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மார்ச் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 15 ஆம் திகதி வரை சூரியன் உச்சத்தில் இருந்தது. பின்னர் படிப்படியாக வெப்பநிலை நீங்கிவருகிறது. எனினும் வெப்பநிலை உயர்வாகவே பக். 23

# ஏற்றுமதித் தடையை நீக்கியது ஐரோ. ஒன்றியம்

கொழும்பு, ஏப். 22

இலங்கையின் கடலுணவுப் பொருள்களை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை ஐரோப்பிய ஒன்றியம் விலக்கிக் கொண்டுள்ளது.

இலங்கை அரசுடனான நீண்ட பேச்சுக்களின் பின்னர், தடையை நீக்குவதற்கான பக். 23

# பயங்கரவாதச் சட்டத்துக்கு பதிலாக வலுவான சட்டம்

### நிபுணர்கள் தயாரிப்பதாக பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக, இன்னும் கூடுதல் வலுவான சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு, அரசு முடிவு செய்திருப்பதாகப் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் குறிப்பிடுகையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாகக் கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டம், தேசிய பாதுகாப்பு மற்றும் சட்டம் - ஒழுங்கு தொடர்பான கூடுதல் அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.

பிரிட்டனில் உள்ள தீவிரவாதத் தடுப்புச் சட்டம், இலங்கையில் இப்போதுள்ள பயங்கர வாதத் தடுப்புச் பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உழவு இயந்திரம் தடம்புரண்டதில் தூக்குக் காவடி எடுத்தவர் சாவு

## ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு அருகே பரிதாபச் சம்பவம்



முல்லைத்தீவு, ஏப்.22

தூக்குக் காவடி கட்டப்பட்ட உழவு இயந்திரம் தடம் புரண்டதில் நேர்த்திக் கடனுக்காக தூக்குக் காவடி எடுத்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் ஒட்டு சுட்டான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு அருகில் நடந்துள்ளது.

முத்தையன்கட்டு -இடதுகரையைச் சேர்ந்த வசந்தகுமார் கஜதீபன் (வயது-26) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார், இரண்டு பிள்ளைகளின் தந்தையான கனகராசா பகிரதன் (வயது-38) என்பவர் காயமடைந்த நிலையில் ஒட்டு சுட்டான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள அம்பகாமம் மம்மில் பிள்ளையார் கோவில் சித்திரைப் பெளர்ணமி உற்சவத்தின் போது நேர்த்திக் கடன் கழிப்பதற்காக ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து தூக்குக் காவடி எடுக்கப்பட்டுள்ளது.

உழவு இயந்திரத்தில் கட்டப்பட்ட தூக்குக் காவடி மூலம் நேர்த்தி கடனை முடிப்பதற்காக அம்பகாமம் மம்மில் பிள்ளையார் கோவிலை நோக்கி சுமார் 50 மீற்றர் தூரம் செல்லும் போது பாரம் தாங்காது உழவு இயந்திரம் தடம் புரண்டுள்ளது. அதனால் தூக்கு காவடி எடுத்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தை அடுத்து உடனடியாக இருவரும் ஒட்டு சுட்டான் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், கஜதீபன் உயிரிழந்து விட்டார் என்று வைத்திய சாலை வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ஐ-21,ரி7)

## பொலிஸ் சுற்றிவளைப்பில் 5 பரல்கள் கசிப்பு சிக்கியது

முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு -மன்னாகண்டல் பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 5 பரல்கள் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் அணியொன்று குறித்த காட்டுப் பகுதிக்குள் வாகனத்தில் சென்று சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையை மேற்கொண்டுள்ளது. இதன் போது விற்பனைக்குத் தயாரானநிலையிலிருந்த ஐந்து பரல் கசிப்பையும், கசிப்பு வடிப்பதற்கான பெருமளவு உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ற-ஐ-102)

## வட மாகாண வெள்ள நிவாரண நிதி தமிழ்நாடு முதலமைச்சர் நிதியத்தில்

யாழ்ப்பாணம்,ஏப்.22

வடக்கு மாகாண சபையினால் திரட்டப்பட்ட தமிழ்நாடு வெள்ள நிவாரண நிதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் தமிழ் நாட்டில் கொட்டித் தீர்த்த கன மழையின் காரணமாக பாதித்த மக்களுக்கு உதவும் வகையில் வடக்கு மாகாண சபையால் திரட்டப்பட்ட தமிழ்நாடு வெள்ள நிவாரண நிதியே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபையால் வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் நிதி சேகரிக்கப்பட்டது.

இதன் மூலம் 11 லட்சத்து 20 ஆயிரம் இலங்கை ரூபா சேகரிக்கப்பட்டது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் இலங்கைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு பயணி கொண்டு செல்லக் கூடிய 5 லட்சம் ரூபா வீதம் அமெரிக்க டொலராகக் கொண்டு செல்லப்பட்டது.

குறித்த பணத்தைக் கொண்டு சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடளுமன்ற உறுப்பினர், அந்தப் பணத்தை மீண் டும் இந்திய நாணயமாக மாற்றி 4 லட்சத்து 96 ஆயிரத்து 900 இந்திய ரூபாவாக தமிழ்நாடு முதலமைச்சர் நிதியத்தில் வைப்புச் செய்துள்ளார்.

(ற-ஐ-105)

## ஊடக சுதந்திர தரவரிசையில் முன்னேறியுள்ளது இலங்கை

கொழும்பு,ஏப்.22

ஊடக சுதந்திர தரவரிசைப் பட்டியலில் இலங்கை 165 ஆவது இடத்திலிருந்து 141 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது என்று எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. அந்த அமைப்பால் சர்வதேச ஊடக சுதந்திர தர வரிசைப் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

180 நாடுகள் வரிசைப்படுத்தப் பட்டுள்ள இந்தப் பட்டியலில், முதலிடத்தில் பின்லாந்து உள்ளது. தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகளாக பின்லாந்து இந்த இடத்தை தக்க வைத்திருக்கிறது. அடுத்த இடங்களில், நெதர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகள் உள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக 165 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இந்த முறை 141 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. எனினும் தெற்காசிய நாடுகளான இந்தியா 133 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 120 ஆவது இடத்திலும், நேபாளம் 105 ஆவது இடத்திலும், பூட்டான் 95 ஆவது இடத்திலும் உள்ளன.

அமெரிக்கா 44 ஆவது இடத்திலும், ரஷ்யா 148 ஆவது இடத்திலும், சீனா 176 ஆவது இடத்திலும் உள்ளன.

துர்க்மெனிஸ்தான், வட கொரியா, எரித்ரியா ஆகிய நாடுகள் கடைசி மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.

(ற-ஐ-5)

## மன்னார் நகர சபைப் பகுதிகளில் அதிக விலையில் மாட்டு இறைச்சி

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

மன்னார்,ஏப்.22

மன்னார் நகரசபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாட்டு இறைச்சி விற்பனை நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலைப் பட்டியலுக்கு மேலாக அதிக விலையில் மாட்டு இறைச்சி விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அத்துடன் சுகாதார சீர்கேடான முறையில் இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றது- என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மன்னார் சந்தை மற்றும் மூர்வீதி ஆகிய பகுதிகளில் உள்ள மாட்டு இறைச்சி விற்பனை நிலையங்களிலே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இது பற்றிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும், தற்போது மாட்டு இறைச்சி கடைகளுக்கு முன்பாக விலைப்பட்டியல் ஒட்டப்பட்டுள்ளன என்றும் மன்னர் நகர சபையினர் தெரிவித்தனர்.

மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட மாட்டு இறைச்சி விற்பனை நிலையங்கள் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. குறித்த இறைச்சிக் கடைகள் மன்னார் நகர சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடத்தப்பட வேண்டும். அந்த வகையில் மன்னார் நகர சபையால் மாட்டு இறைச்சி விற்பனை ஒரு கிலோ தனி இறைச்சி 450 ரூபாவுக்கும், ஒரு கிலோ முள்ளுடன் கூடிய இறைச்சி 400 ரூபாவுக்கும், ஒரு கிலோ ஈரல் 600 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும்.

ஆனால் இறைச்சிக் கடைகளில் எவ்வித விலைப்பட்டியல்களும் காட்சிப்படுத்தப்படுவதில்லை. தற்போதைய நிலவரங்களின் படி மன்னாரில் உள்ள மாட்டு இறைச்சிக் கடைகளில் ஒரு கிலோ தனி இறைச்சி 600 ரூபாவுக்கும், முள்ளுடன் கூடிய இறைச்சி 500 ரூபாவுக்கும், ஒரு கிலோ ஈரல் 1000 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன் இறைச்சி நிறுவையில் மோசடிகள் இடம் பெறுகின்றது. 1 கிலோ இறைச்சியைப் பெற்றுக்கொள்ளும்போது 750 கிராம் தொடக்கம் [illegible] கிராம் மாத்திரமே காணப்படுகின்றது என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் குற்றம் சாட்டினர்.

அத்தோடு மன்னார் -மூர்வீதியில் உள்ள மாட்டு இறைச்சி விற்பனை நிலையம் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வருகின்றது என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட்டிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது-

மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட மாட்டு இறைச்சிக் கடைகள் குறித்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக மன்னார் -மூர் வீதியில் உள்ள மாட்டு இறைச்சிக் கடை சுகாதாரமற்ற முறையில் நடத்தப்படுகின்றது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

குறித்த இறைச்சிக் கடை உரிய முறையில் ஒழுங்கமைப்புச் செய்யப்படாத நிலையில் இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றது. [illegible] எச்சங்களின் மத்தியில் இறைச்சி காட்சிப்படுத்தப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. உடனடியாக குறித்த பிரச்சினைகள் தொடர்பாக இறைச்சி விற்பனை நிலைய உரிமையாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. உரிய முறையில் சுகாதாரத்துடன் குறித்த இறைச்சிக்கடை தயார் படுத்தாது விட்டால் இந்த இறைச்சி கடைகள் சில தினங்களில் மூடப்படும் என்றார்.

மன்னார் நகர சபையின் செயலாளரிடம் இது குறித்துக் கேட்டபோது-

இது தொடர்பான முறைப்பாடுகள் ஏற்கனவே கிடைத்துள்ளன. தற்போது மன்னார் நகர சபையால் அனைத்து மாட்டு இறைச்சி விற்பனை நிலையங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட மாட்டு இறைச்சியின் விலை தொடர்பான விலைப்பட்டியல் ஒட்டப்பட்டுள்ளது. இறைச்சிகள் அதிகரித்த விலைக்கு விற்பனை செய்யப்படும் பட்சத்தில், பொதுமக்கள் மன்னார் நகர சபையிடம் முறையிட்டால் உடனடியாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

(ற-ஐ-21,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியைப் பிடிப்பதற்கு ஏதுவாக தேர்தல் முறையை மாற்ற முயற்சி

## பிரதான கட்சிகளைச் சாடுகிறார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு, ஏப். 22

தேசிய அரசு ஒன்று உள்ள நிலையில், அந்தத் தேசிய அரசில் உள்ள பிரதான இரண்டு கட்சிகளும் தனித் தனியாக ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகவே, தேர்தல் முறைமையையும் மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் நாம் அதனை கடுமையாக எதிர்த்திருதோம்.

இவ்வாறு தெரிவித்தார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

புதிய அரசமைப்பு தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த முழுநாள் செயலமர்வு நேற்று மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் விடுதியில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது தனது உரையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம்:-

1988ஆம் ஆண்டு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்கீகரிக்கப்பட்டதில் இருந்து, அதன் அரசியல்செயற்பாட்டை முடுக்கியது. தெற்கில் சிங்கள இளைஞர்களும் வடக்கில் தமிழ் இளைஞர்களும் போராட்டத்தில் குதித்திருந்த ஒரு சூழ்நிலையில்தான், எமது கட்சியின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அப்போது முதல் இப்போது வரை நாம் அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பில் பெரியளவில் பங்களிப்பைச் செய்து வருகின்றோம். பலசர்வகட்சிக் கூட்டங்களிலும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்களிலும் நாம் பங்கேற்று மிகவும் காத்திரமான பங்கை வகித்திருக்கின்றோம்.

அதேபோல், 17 ஆவது, 18 ஆவது மற்றும் 19 ஆவது ஆகிய அரசமைப்பின் திருத்தங்கள் தொடர்பிலும் நாம் காத்திரமான பங்களிப்பை வழங்கி இருந்தோம். அதில் 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு நாம் வழங்கிய ஆதரவானது கண்ணைத் திறந்து கொண்டு குழிக்குள் வீழ்ந்ததற்கு சமமாகும். அரசியல் ரீதியாக நான் எதிர்கொண்ட சவால்கள், சிக்கல்கள் போன்றவற்றை எதிர்காலம் ஆவணப்படுத்தும்.

மக்களின் அனைத்துப் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் புதிய அரசமைப்பு ஒன்று உருவாகப் போகின்றது என்ற மகிழ்ச்சியில் மக்கள் இப்போது உள்ளனர்.

இன்று தேசிய அரசு ஒன்று உள்ள நிலையில், அந்தத் தேசிய அரசில் உள்ள பிரதான இரண்டு கட்சிகளும் தனித் தனியாக ஆட்சியைப் பிடிப்பதைப் பற்றிப் பேசுவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. தங்களின் கட்சி ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகவே, தேர்தல் முறைமையையும் மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இதைக் கடுமையாக எதிர்த்திருந்தேன்.

அரசமைப்பு சபையும் இன்று அரசியல்வாதிகள் நிறைந்த சபையாக மாறிவிட்டது. அதில் சிவில் பிரதிநிதிகள் மூவர்தான் உள்ளனர் - என்றார். (த-வ-5)

# ராஜீவ் வழக்குக் குற்றவாளிகள் தொடர்பில் முடிவெடுக்கவில்லை

## இந்திய மத்திய உள்துறை அமைச்சின் உயரதிகாரி தெரிவிப்பு

புதுடில்லி,ஏப்.22

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட முருகன், நளினி, சாந்தன், பேரறிவாளன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ரவிச்சந்திரன் ஆகிய 7 பேரின் விடுதலை தொடர்பாக, இந்திய மத்திய அரசு இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று மத்திய உள்துறை அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஆங்கில நாளிதழில் நேற்று வெளியான செய்தி ஒன்றை மேற்கோள்காட்டி பல்வேறு ஊடகங்கள் "ராஜீவ் காந்தி கொலைத் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்ய தமிழ்நாடு அரசு விடுத்த கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்து விட்டது என்று செய்திகளை வெளியிட்டன.

இது குறித்து புதுடில்லியில் மத்திய உள்துறை அமைச்சின் உயரதிகாரி தெரிவித்துள்ளதாவது-

ராஜீவ் காந்தி கொலைக் கைதிகள் விடுதலை விவகாரத்தில் தமிழ் நாடு அரசும், சம்பந்தப்பட்ட கைதி களும் தொடுத்துள்ள வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த விடயத்தில் மத்திய அரசு எடுக்க வேண்டிய நிலைப்பாடு குறித்து மத்திய சட்டத்துறையின் கருத்தை உள்துறை கேட்டுள்ளது. சட்டத்துறை தெரிவிக்கும் கருத்து தொடர்பாக மத்திய அரசு ஆலோசனை நடத்திய பின்னரே அதன் முடிவை உச்ச நீதிமன் றத்தில் தெரிவிக்கும்.

தற்போதைய் நிலவரப்படி மத்திய சட்டத் துறை, அதன் கருத்தை உள்துறைக்கு அனுப்பி வைக்கவில்லை. தமிழ்நாட்டில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, தேர்தலுக்குப் பிறகு இந்த விடயத்தில் முடிவு எடுக்க மத்திய உள்துறை தீர்மானித்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலைக் கைதிகளை விடுவிக்கும் தமிழ்நாடு அரசின் முடிவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு மனு தாக்கல் செய்துள்ளது. அதன் மீதான விசாரணை விரைவில் வரும் என எதிர்பார்க்கிறோம். அப்போது தமிழ்நாடு தேர்தலுக்குப் பிறகு இந்த விவகாரத்தை விசாரிக்கக் கேட்டுக் கொள்ளப்படும். இந்த விடயத்தில் உச்ச நீதிமன் றம் அளிக்கும் தீர்ப்புக்கு மத்திய அரசு கட்டுப்படும் - என்றார். (ற-ஜ)

### வைத்தீசுவரக் குருக்களின் முதலாமாண்டு நினைவு

யாழ்ப்பாணம் ஏப்.22

சிவத்தமிழ் வித்தகர் பண்டிதமணி கலாநிதி சிவத்திரு க.வைத்தீசுவரக்குருக்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 5 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தில் காரைநகர் மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள், சிம்மயாமிஷன் ஜாக்ரதசைதன்யா சுவாமிகள், பேராசிரியர் இ.குமாரவடிவேல், சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் உள்ளிட்ட பலர் நினைவுரைகளை ஆற்ற உள்ளதுடன், "ஆலய வழிபாடு" என்னும் நூலும் வெளியிடப்படவுள்ளது. நூலின் நயவுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்தவுள்ளார். (ற-ஐ-250)

# ஆதிவாசிகளது அம்பை திருடிய இளைஞர் மீது தாக்குதல் முயற்சி

கொழும்பு,ஏப்.22

ஆதிவாசிகளின் அம்பு மற்றும் வில்லைத் திருடிய இளைஞர் ஒருவர் ஆதிவாசிகளின் தாக்குதலில் இருந்து அதிர்ஷ்டவசமாகத் தப்பியுள்ளார்.

புத்தாண்டு தினத்தில் விடுமுறையைக் கொண்டாடும் வகையில் சிங்கள இளைஞர்களின் குழுவொன்று மகியங்கனை பிரதேசத்துக்கு சுற்றுலா சென்றுள்ளது.

அதன்போது தம்பானை ஆதிவாசிகளின் பிரதேசத்துக்குள் சென்றிருந்த குழுவில் இருந்த இளைஞன் ஒருவர், ஆதிவாசியொருவரின் வில் மற்றும் அம்புகளைத் திருட்டுத்தனமாக எடுத்து தமது வாகனத்துக்குள் மறைத்து வைக்க முயன்றுள்ளார்.

எனினும் இந்தச் சம்பவத்தை நேரடியாகக் கண்ணுற்ற ஆதிவாசிகள் குழுவொன்று இளைஞனை ஆத்திரத்துடன் தாக்க முயன்ற போதும் இரு தரப்பு சமாதானப்படுத்தல்கள் காரணமாக இளைஞன் தப்பித்துக் கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்த காணொலி தற்போது சமூக வலைத் தளங்களில் வைரலாகப் பரவிக் கொண்டிருக்கின்றது. (ற-ஐ-5)

# உலகிற்காக மரங்கள் செயற்றிட்டம் மருதங்கேணி பிரதேசத்தில் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.22

உலகிற்காக மரங்கள் எனும் தொனிப்பொருளில் 2016 ஆம் ஆண்டுக்கான உலக புவி தினம் கொண்டாடப்படுகின்றது.

இதை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் நட்புறவுச் செயற்றிட்டங்களின் ஊடாக சமூக ஒன்றிணைவும், அடைவு மட்டங்களும் (2015 - 2030) எனும் செயற்றிட்டம் அனைத்துப் பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மணற்காடு, சவுக்கங்காட்டுப் பகுதியை அபிவிருத்தி செய்யும் நோக்காக இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

உயிர் பல்வகைத்தன்மையைப் பாதுகாத்தலும், அதை ஆபத்துக் குறைப்பினூடாக அபிவிருத்தியை நோக்கிச் செல்லலும் கட்டம் - 1எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தச் செயற்றிட்டத்தில், இடர் முகாமைத்துவ மத்திய நிலையம், மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பு அலகு, மருதங்கேணி பிரதேச செயலகம் ஆகியவற்றுடன் இணைந்து பிரன்லி ஏசியா, புவியியல் துறை பட்டதாரிகள் சங்கம் மற்றும் குறித்த செயற்றிட்டத்தின் பங்குதாரர்களையும் ஒன்றிணைத்து மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த நிகழ்வுக்கு இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்திலிருந்து மேலதிக பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் உட்பட பல பிரதிநிதிகள் வருகை தரவுள்ளதுடன், யாழ். மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் படையினர், கடற்குழுவினர், மாணவர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள், ஆர்வலர்கள் எனப் பலதரப்பட்டோர் தொண்டு அடிப்படையில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பங்குபெற ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஆர்வலர்களுக்கு இன்று காலை 5.30 மணி தொடக்கம் 7 மணி வரை மாவட்டச் செயலகத்திலிருந்தும் ஏனைய பிரதேச செயலகங்களில் இருந்தும் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பங்கு பற்றுபவருக்கான உணவு, குடிதண்ணீர், சிற்றுண்டிகள், போக்குவரத்து என்பன பல சமூக ஆர்வல நிறுவனங்களின் பங்களிப்புடன் வழங்கப்படவுள்ளன.

இந்தச் செயற்றிட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 1500 இற்கும் மேற்பட்ட ஆர்வலர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பங்குகொள்ளும் ஆர்வலர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (வ-ரி5)

வெற்றி வாரம்: 2759 திகதி: 2016-04-20
10 44 45 63 x 70
ரு. 14,682,425/-

Galaxy Star
வெற்றி வாரம் 051 திகதி 2016-04-20
03 03 16 36 55
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரு.2,726,520/-

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1255
சீட்டிழுப்பு திகதி 2016.04.21
வெற்றி இலக்கங்கள்
45 46 49 58 D
ரூ. 13,223,060/=

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 488
சீட்டிழுப்பு திகதி 2016.04.21
வெற்றி இலக்கங்கள்
01 12 22 66 I
ரூ. 51,755,880/=

SPOKEN ENGLISH
இளைஞர் யுவதிகள், O/L, A/L எழுதியோர், தொழில் தேடுவோர்
அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்.
"அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
3 மாத சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
பாடப்புத்தகங்கள் சான்றிதழ் மற்றும் Video DVD என்பன முழுவதும் இலவசம்.
23.04.2016 இற்குமுன் அலுவலகத்தில் பதிவுசெய்தல்வேண்டும்.
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேருக்குமட்டுமே அனுமதி உண்டு.
SAMSON
021 320 3313
077 1570 486

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு உரிய தீர்வு பெற்றுத்தரவும்

## வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஏப்.22

துரதிர்ஷ்டவசமாக 1990 ஆம் ஆண்டில் வடக்கு முஸ்லிம்களின் மீது முன்னெடுக்கப்பட்ட இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையை வடக்கு முஸ்லிம் மக்கள் பொறுத்துக் கொண்டு மன்னிக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் அதனால் ஏற்பட்ட இழப்புக்களுக்கும் உரிய தீர்வைத் தமிழ் மக்களிடமும், அவர்களின் தலைவர்களிடமும் இலங்கை அரசிடமுமே அந்த மக்கள் வேண்டி நிற்கின்றனர்.-

இவ்வாறு வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் சார்பில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையால் முன்மொழியப்பட்டுள்ள தீர்வுத் திட்ட வரைவு தொடர்பில் முஸ்லிம் சமூகத்தின் ஆலோசனைகள் முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த ஆலோசனைகளிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வடக்கு மாகாண மக்களின் அபிலாசைகளைப் பிரதி பலிக்கின்றவகையில் வடக்கு மாகாண சபையால் முன்வைக்கப்பட்டிருக்கின்ற அரசியல் தீர்வு மற்றும் அரசமைப்புக்கொள்கை வரைவு முன்மொழிவுகள் ஆவணத்தை வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் சார்பாக நாம் வரவேற்கின்றோம்.

ஜனநாயக ரீதியில் விடயங்களைக் கையாளும் முயற்சியாகவே இதனை நாம் நோக்குகின்றோம். அதில் முன்மொழியப்பட்டிருக்கின்ற அம்சங்கள் மக்கள் நலன் சார்ந்தவை என்பதும், அது வடக்கு மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கின்றன என்பதிலும் எமக்கு முழுமையான நம்பிக்கையுண்டு. அவற்றுக்கு மேலதிகமாக பின்வரும் விடயங்களைத் தங்களின் மேலான கவனத்துக்கு முன்வைக்கின்றோம்.

இலங்கைத் தீவின் மக்களாகிய நாம் சிங்கள , தமிழ் , முஸ்லிம் மக்கள் என்கின்ற இனத்துவங்களைக் கொண்டிருக்கின்ற போதும் ஒன்றுபட்ட இலங்கை நாட்டுக்குள் தேசிய நலன்களையும், பிராந்திய நலன்களையும் முன்னிறுத்தி எமக்கான புதிய அரசமைப்பை வேண்டிநிற்கின்றோம்.

வடக்கில் தொன்று தொட்டு வாழ்ந்து வருகின்ற வடக்கு முஸ்லிம் மக்கள் இலங்கைத் தீவில் வாழுகின்ற முஸ்லிம்கள் தேசிய இனத்துவத்தின் ஒரு அங்கமாக இருக்கின்ற போதிலும், அவர் கள் வாழ்கின்ற வடக்குப் பிர தேசத்து மக்களோடு சமத்துவத் தோடும், சகவாழ்வோடும் வாழ் கின்ற விருப்பையுடையவர்கள்.

வடக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் அடிப்படை உணர்வுகளை என்றென்றும் புரிந்து கொண்டவர்களாகவும், அவர்களது உரிமைப் போராட்ட முயற்சிகளை மதிப்பவர்களாகவும் விடுதலை இலக்கை நன்கு அறிந்தவர்களாகவும் இருக்கின்ற அதே சந்தர்ப்பத்தில், அத்தகைய அரசியல் விடுதலைக்கான முயற்சிகளில் தமிழ் மக்களோடு தோளோடு தோள் நின்ற வரலாற்றையும் கொண்டவர்கள்.

துரதிர்ஷ்டவசமாக 1990 ஆம் ஆண்டுகளில் வடக்கு முஸ்லிம்களின் மீது முன்னெடுக்கப்பட்ட இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை வடக்கு முஸ்லிம் மக்கள் பொறுத்துக் கொண்டு மன்னிக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் அதனால் ஏற்பட்ட இழப்புகளுக்கும் உரிய தீர்வை

> வடக்கு மாகாண மக்களின் அபிலாசைகளைப் பிரதி பலிக்கின்றவகையில்வடக்குமாகாண சபையால் முன்வைக்கப்பட்டிருக்கின்ற அரசியல் தீர்வு மற்றும் அரசமைப்புக்கொள்கை வரைவு முன்மொழிவுகள் ஆவணத்தை வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் சார்பாக நாம் வரவேற்கின்றோம்.

தமிழ் மக்களிடமும், அவர்களின் தலைவர்களிடமும் இலங்கை அரசிடமுமே அந்த மக்கள் வேண்டிநிற்கின்றார்கள்.

முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று 'வெளியேற்றம் என்பது ஒரு துன்பியல் நிகழ்வு' என்பதை அங்கீகரித்து, மீண்டுமொரு தடவை இத்தகைய துர்ப்பாக்கிய நிலை ஏற்படாமல் இருப்பதைத்தமிழ் மக்களும், அவர்களது தலைவர்களும், இலங்கை அரசும் உறுதி செய்தல் அவசியமாகும். அத்தோடு அதற்குப் பதிலீடாக அம்மக்களின் முழுமையான, மீள்வருகை, மீள் குடியேற்றம் மற்றும் சகவாழ்வும் உறுதி செய்யப் படுதல் வேண்டும்.

வடக்கின் சகல மக்களையும் போல முஸ்லிம் மக்களும் சமத்துவமாகவும், நீதியாகவும், நடத்தப்படுதல் என்பதே எமது விருப்பும், எதிர்பார்ப்புமாகும்.

வடக்கு முஸ்லிம் மக்களின் விவகாரங்களைக் கையாள்வதற்கு, விசேட அதிகாரங்களை உள்ளடக்கிய 'முஸ்லிம் விவகார கலாசாரத்துறை' அமையவிருக்கும் புதிய மாநில அமைப்புக்குள் உள் வாங்கப்படுதல் அவசியமாகும்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பெரு விருப்பாக 'வடக்கும் கிழக்கும் இணைக்கப்படுதல்' என்ற விடயம் அமைகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கு விரோதமாக இருப்பதானது வடக்கு முஸ்லிம்களுக்கு எவ்விதத்திலும் நன்மையளிக்காது. அத்தோடு, கிழக்கு மாகாண முஸ்லிம்கள் இதுவிடயத்தில் தமது விருப்பை வெளிப்படுத்தும் பூரணசுதந்திரமுடையவர்கள் என்பதையும் அவர்களது சுயாதீனமான கருத்து இதில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் நாம் அறிவோம்.

வடக்கு கிழக்கு இணைப்பில் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் பேசும் தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் சாதகமான விடயங்கள் இருப்பதைப் போல ஒருசில பாதகமான விடயங்களும் இருக்க வாய்ப்பிருக்கின்றது. அத்தகைய பாதகமான விடயங்களை தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் கலந்தாலோசிப்பதன் மூலம் தீர்த்துக்கொள்ள முடி யும் என்பது எமது எதிர்பார்ப்பாகும் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-ஜ-5)

# மாலைதீவு–மலாக்கா கடற்பாதை திட்டத்துக்கு உதவி கோர முடிவு

கொழும்பு, ஏப்.22

மாலைதீவுக்கும், மலாக்கா நீரிணைக்கும் இடைப்பட்ட கடற்பகுதியைப் பாதுகாப்பான கடற்பாதையாக மாற்றும் கடற்படையின் சிறப்புத் திட்டத்தைச் செயற்படுத்தப் பல்வேறு நாடுகளின் உதவியைக் கடற்படை பெற்றுக் கொள்ளவுள்ளது.

அடுத்த பத்தாண்டுகளுக்குள், மாலைதீவுக்கும், மலாக்கா நீரிணைக்கும் இடைப்பட்ட கடற்பகுதியை கடற்கொள்ளை, போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோதச்செயற்பாடுகளில் இருந்து விடுவித்து, பாதுகாப்பான கடற்பாதையாக மாற்றும் செயற்திட்டத்தைக்கடற்படை நடைமுறைப்படுத்தவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முன்மொழிவில் இந்தத்திட்டத்தை கடற்படை செயற்படுத்தவுள்ளது. இந்த திட்டத்துக்குத் தேவைப்படும், இரண்டு ஆழ் கடல் ரோந்துப் படகுகளை இந்தியாவிடம் கடற்படை வாங்கவுள்ளது. அத்துடன், அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகளிடம் இருந்தும் உதவிகளைப் பெற்றுக் கொள்ள கடற்படை திட்டமிட்டுள்ளது.

அதேவேளை, இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைக்கான பயிற்சிகளைக் கடற்படை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

சுரனிமல என்ற அதிவேக ஏவுகணைக் கப்பல், மற்றும் சக்தி என்ற துருப்புக்காவிக் கப்பல் என்பன, மாலைதீவில் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

அதேவேளை, சமுத்திர என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல், இந்தோனேசியாவில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

பிராந்தியக் கடற்படைகளிடம் இருந்து தொடர்ந்து உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்என்றும்கடற்படை நம்பிக்கை தெரிவித்துள்ளது. (ஐ-ஜ-5)

# ஏழு பேருக்கு ஒரு நேர உணவுக்கு ரூ.21 லட்சம்

கொழும்பு,ஏப்.22

முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரத்னவின் பதவிக் காலத்தில் அவரது இல்லத்தில் ஏழு பேருக்கு வழங்கப்பட்ட ஒருநேர உணவுக்கு இருபத்தியொரு லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரத்ன பிரதமராகப்பதவி வகித்த காலத்தில் ப்ளவர் வீதியில் உள்ள விசும்பாயவை உத்தியோகபூர்வ இல்லமாகப்பயன்படுத்தியிருந்தார். அவரது அலுவலக மற்றும் இல்லத்தில் நடைபெறும் விருந்து வைபவங்களுக்கான உணவு, பானம் என்பவற்றை வழங்கும்பொறுப்பு ஹில்டன் ஹோட்டலுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அவரது பதவிக் காலத்தின் கடைசி ஐந்து மாதங்களில் நடைபெற்ற விருந்து வைபவங்களுக்கான உணவு, பான வகைகளுக்கு மட்டும் 40 லட்சம் ரூபா வரையான நிலுவைத் தொகை இருக்கின்றது என்று ஹில்டன் ஹோட்டல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அதில் ஏழு இலங்கையருக்கு அவர் அளித்துள்ள ஒரு நேர உயர்தர உணவுவகைகளுக்கு மட்டும் 21 லட்சத்து 74 ஆயிரம் ரூபா செலவாகியுள்ளது.

அத்துடன் இன்னொரு நாள் தேநீர் விருந்துக்காக மூன்றரை லட்சம் ரூபாவுக்கும், பிறிதொரு நாளில் வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு விருந்தளிப்பதற்காக 17 லட்சம் ரூபாவுக்கும் உணவு, பான வகைகள் பெறப்பட்டுள்ளன.

எனினும் இது குறித்த நிலுவைத் தொகையை செலுத்துமாறு பிரதமர் அலுவலகத்திடம் பலதடவைகள் வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும், ஆட்சி மாற்றத்தின் காரணமாகத் தங்களுக்குரிய நிலுவைத் தொகை இதுவரை செலுத்தப்படவில்லை என்றும் ஹில்டன் நிர்வாகம் தொடர்ந்தும் தெரிவித்துள்ளது. (ஐ-ஜ-5)

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES

மஜெஸ்டிக் ப்ளாட்டினம் / சில்வர் / ப்ரொன்ஸ்
10.00 / 1.00 / 7.00 / 4.00
Fri/Sat/Sun 9.30 p.m
மஜெஸ்டிக் ப்ளாட்டினம் THE JUNGLE Book 3D 4.00 p.m
விசாரணை 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ் பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் (J/83 கிராம அலுவலர் பிரிவு) பிரபானந்தன் அவர்களின் தந்தையார்

**சின்னப்பு வேலாயுதபிள்ளை**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ் பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய

**தியாகராசா ஸ்ரீநாகேஸ்வரன்**

இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

**நாகநாதர் சிவசுப்பிரமணியம்**
(ஓய்வூதியர் - மண்டைதீவு கிராமசபை)

கடந்த 20.04.2016 புதன்கிழமை உதயன் பத்திரிகையில் 28 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய நாகநாதர் சிவசுப்பிரமணியம் என்பவரின் மரண அறிவித்தலில் மதிபாலன்(ஆசிரியர்- யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), -அன்பரசி (ஆசிரியை- யா/ கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். என்பது தவறவிடப்பட்டிருந்தது எனவே இதனையும் சேர்த்து வாசிக்கவும்.

(சி.2123)(12.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி கைது

## தாஜுதீனின் படுகொலை தொடர்பில்

கொழும்பு, ஏப்.22
பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் படுகொலை தொடர்பான சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவித்து வரும் தாஜுதீன் கொலை வழக்கில் முன்னாள் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளமையானது அடுத்த கட்ட விசாரணைகளில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தாஜுதீன் கொலை தொடர்பாக அடுத்தகட்ட விசாரணைகளில் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் கைது செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரான நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேராவை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி நாரஹேன்பிட்டி சாலிகா மைதானத்தின் அருகிலுள்ள பார்க் வீதியில் தீப்பற்றி எரிந்திருந்த காருக்குள் இருந்த தாஜுதீனின் சடலம் மீட்கப்பட்டது.

இவரது உயிரிழப்பு விபத்து என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்ட நிலையில், தாஜுதீன் உயிரிழப்பு விபத்து அல்ல, கொலை என்பதை உறுதிசெய்த நீதிமன்றம் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்து முன்னிலைப்படுத்துமாறு கடந்த மாதம் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது.

அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்கள் மூடி மறைக்கப்பட்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க பெரேரா கைது செய்யப்பட்டுள்ளார். (ற-ஜ-5)

## அகதிகள் 20 பேர் மீள இலங்கைக்கு

கொழும்பு, ஏப்.22
இந்திய அகதி முகாம்களில் வாழும் 20 அகதிகள் மீண்டும் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை அகதிகள் எதிர்வரும் ஏப்ரல் 26 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்துவரப்பட இருக்கின்றனர் என்று அமைச்சின் செய லாளர் வி.சிவஞானசோதி தெரி வித்துள்ளார்.

தற்போது சென்னை அகதி முகாம்களில் திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியாப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக உள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-ஜ-5)

## மின்னேரியா முகாமின் எரிபொருள் பதிவேடுகளைச் சமர்ப்பிக்க பணிப்பு

### பிரகீத் கடத்தப்பட்ட வழக்கில்

கொழும்பு, ஏப். 22
மின்னேரியா இராணுவ முகாமின் எரிபொருள் விநியோகம் தொடர்பான பதிவேடுகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு இராணுவத் தளபதிக்கு ஹோமகம பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டுக்காணாமற்போகச் செய்யப்பட்ட வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ஹோமகம நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மின்னேரியா இராணுவ முகாமில் இருந்து 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி, சந்தேக நபர்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டது தொடர்பான பதிவேடுகளை ஒப்படைக்குமாறு இராணுவத் தளபதிக்கு உத்தரவிடுமாறு, குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கோரிக்கை விடுத்தனர்.

அதையடுத்து, எரிபொருள் விநியோகம் தொடர்பான பதிவேடுகளை ஒப்படைக்குமாறு இராணுவத் தளபதிக்கு பதில் நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன், இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சந்தேக நபர்கள் ஒன்பது பேரையும், எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார். (ற-5)

## வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட 43 குடும்பங்களுக்கு இழப்பீடு

கிளிநொச்சி, ஏப்.22
கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட் 43 குடும்பங்களுக்கு, அவர்களது வீடுகளுக்கான இழப்பீடுகள் முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு இறுதிப் பகுதியில் நாட்டில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தின்போது கிளிநொச்சி மாவட்டத்திலும் அதிகளவான பாதிப்புகள் ஏற்பட்டன. அதன்போது வெள்ளப் பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு சமைத்த உணவுகளும், ஏனைய தேவைகளும் வழங்கப்பட்டன.

பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக வீடுகள் அமைப்பதற்காக மாவட்ட செயலகத்தால் தறப்பாள், தகரம் என்பனவும் வழங்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாகத் தற்போது மாவட்டத்தில் பாதிப்படைந்த வீடுகளுக்கான இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளன.

முதற் கட்டமாக 43 குடும்பங்களுக்கு இவ்வாறு இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளன. ஏனையவர்களுக்கும் அடுத்தகட்டமாக வழங்கப்படும்.

இழப்பீட்டு நிதிகள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ற-ஜ-ரி3)

## ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை; நால்வருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப்.22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட நான்கு பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 4 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தேக நபர்களை முற்படுத்தியபோது 14 நாள்களுக்குத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்உறுப்பினரும்முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட் வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் எம். கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார். (ற-ஜ-5)

மணமக்கள் தேவை
இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஜேர்மனியில் நிரந்தர பிரஜாவுரிமையுடைய படித்த 31 வயது ஆணுக்கும், 29 வயது பெண்ணுக்கும் மணமக்கள் தேவை. ஐரோப்பிய நாடுகளில் இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 176 1007

பெயர் மாற்றம்
இலந்தக்குளம், கொழும்புத்துறையைச் சேர்ந்த அபூபக்கர் அலிஅக்பர் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை அபூபக்கர் சந்திரன் எனப் பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.
அபூபக்கர் சந்திரன்

Personal Classes
இலக்கணப் பிழையின்றி ஆங்கிலத்தில் கதைக்கப் பயில
By.ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip/cer in English and Science London.(M.L.S),
423/3. கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை.
077 675 1649

# சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.22
சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்படும் சமூகப் பாதுகாப்புக் கொடுப்பனவு கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று வாழ்வின் எழுச்சித் திணைக்களப் பணிப்பாளரால் சுற்றுநிருபம் மூலம் சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இறப்புக் கொடுப்பனவு ஐயாயிரம் ரூபாவாலும், மகப்பேற்றுக் கொடுப்பனவு , திருமணக் கொடுப்பனவு என்பன 2 ஆயிரத்து 500 ரூபாவாலும், வைத்தியசாலைக் கொடுப்பனவு ஆயிரத்து 500 ரூபாவாலும், சிப்தொற புலமைப் பரிசில் கொடுப்பனவு 12 ஆயிரம் ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று வாழ்வின் எழுச்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மகப்பேற்றுக்காக 3 தடவைகள் தலா 5 ஆயிரம் ரூபாவும், திருமணக் கொடுப்பனவாக 2 தடவைகள் 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு வந்தன. இந்தக் கொடுப்பனவு ஜனவரி தொடக்கம் 7 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இறப்புக் கொடுப்பனவாக வழங்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாக் கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்ட 200 ரூபா கொடுப்பனவு 250 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவு ஆகக்கூடியது 30 நாள்களுக்கு மாத்திரமே வருடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் சமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகள் க.பொ.த. உயர்தரக் கல்வியினைக் கற்பதற்கு வழங்கப்பட்ட சிப்தொற புலமைப் பரிசில் கொடுப்பனவு ஆயி ரம் ரூபாவிலிருந்து, ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது உயர்தரக் கல்வியைக் கற்கும் 24 மாதங்களுக்கு மாத்திரமே வழங்கப்படும்.


இதே வேளை கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் அதிகரிக்கப்படாத கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட அனைவருக்கும்அதிகரித்த மீதிக் கொடுப்பனவு வழங்கு வதற்கான நடவடிக்கைகள் மாவட்டச் செயலகங்களால் மேற்கொள் ளப்[illegible] ளன. (ற-ஜ-250)

யாழ் மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
இரண்டு உழவு இயந்திர மணல் சுமை ஏற்றக்கூடிய வாகனங்களினை பதிவு செய்தல்
எமது பாரவூர்திச் சங்கத்தினால் மணல் ஏற்றக்கூடிய இரண்டு உழவு இயந்திர சுமையுடைய வாகனங்களினை (கன்ரர்) பதிவு செய்வதற்கு வழங்கப்பட்ட கால எல்லை 01.05.2016 ஆம் திகதியுடன் முடிவுறுவதனால் மேற்படி அளவுடைய வாகனத்தினை சங்கத்தில் பதிவு செய்து சேவையில் ஈடுபட விரும்புபவர்கள் தங்கள் பதிவினை குறிப்பிட்ட திகதிக்கு முன் சங்கத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்
தலைவர்
செ. ஜெயக்குமார்
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை
இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் மட்டக்களப்பு கிளையில் 30.01.2016 க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 29.04.2016ம் திகதி காலை 10.00 மணி முதல் இல.187, திருகோணமலை வீதி, மட்டக்களப்பிலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.
ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance
உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தச வருடத்தில் தமியளின் ஆதங்கம்



தோற்றம் 07 . 04 . 1944

மறைவு 14 . 04 . 2006

## உயர்திரு. சிவக்கொழுந்து இராஜதுரை

திதி: 22.04.2016

என்னுயிரில் கலந்து உறவே
பத்து வருடங்களுக்கு முன்னர்
இன்று போல் ஒரு நாள் எங்கள் உலகம் நடுங்கியது
தங்களை இழந்தேன் ஆயினும்
என்னுயிர் தங்களைச் சேரும் வரை
தங்கள் நிஜயமான நினைவுகள்
வாழும் ! வளரும்!
எப்போதும் இனியானை என் மனத்தே வைத்தேனே.

என்றும் தங்கள் ஆருயிர் மனைவி
ஸ்ரீமதி தவேஸ்வரி இராஜதுரை
(M.A.M.Phil) ஆசிரிய ஆலோசகர்
(கொழும்பு)

குப்பிளான்,
ஏழாலை.

## கண்ணீர்அஞ்சலி

உடுவில் பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திரு. சி. உமாபாலன்** அவர்களது தந்தையாருக்கு 21.04.2016 ஆம் திகதி வெளியிடப்பட்ட கண்ணீர் அஞ்சலியில் நலபுரிசங்கம் பிரதேச செயலகம் உடுவில் என்பதற்குப் பதிலாக யாழ்ப்பாணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தயவுசெய்து திருத்தி வாசிக்கவும் தவறுக்கு வருந்துகின்றோம்.

**நலன்புரிசங்கம், பிரதேச செயலகம், உடுவில்**

மனங்களில் மலர்ச்சியை காண விழைந்த
மருத்துவர்

அமரர் **இராஜசிங்கம்**
**தெய்வேந்திரன்** அவர்களின்

## 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 26 . 01 . 1939

மறைவு 23 . 03 . 2016

அன்பு வழி நடந்தீர் ! ஆற்றல்கள் பலவும் தந்தீர்
இடர்மிகு - இயல்பு நிலையற்ற
இறுக்கமான தருணத்தில் ஈடு இணையில்லா பணி புரிந்தீர்
உவப்புடனே தடுப்பு வைத்தியத்தில் தடம் பதித்தீர்
உளம் நொந்த மக்கள் - துயர் போக்க தோள்கள் தந்தீர்!!!
ஊன் உறக்கம் பாராது - இதயத்தால்
உழைத்து சேவையில் மிளிர்ந்தீர்
விஞ்ஞானத்துடன் மெய்ஞானமும் கைக்கொண்டீர்
அஞ்ஞான இருள் அகல
பக்தி மலராம் நல்லைக் கந்தன் முகையவிழ
பக்குவமாய் வழி சமைத்தீர்!!!
பொறுமையுடன் நேர் வழி கொண்டீர்
உம் தடம் தொடர்கின்றோம் - நாமின்று
நீண்ட புகழ் கொண்டு நீடு வாழுமே உம் நாமம்!

**சுகாதார வைத்திய அதிகாரிகளும் பணியாளர்களும்.**

**மீளாய்வுக் கூட்டம்**

வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின்செயல்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு யாழ்.பொது நூலக வட மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி திணைக்களம் மாகாண காணி நிர்வாக திணைக்களம் மாகாண தொழில் துறைத் திணைக்களம் ஆகியவற்றின்அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத் திட்டங்கள், வரவு- செலவுத் திட்ட நன்கொடை நிதி வேலைத்திட்டங்கள், நெல்சிப் வேலைத் திட்டங்கள் என்பவை தொடர்பாகஆராயப்படவுள்ளன என முதலமைச்சரின் அமைச்சின் செயலாளர் திருமதி வி.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ந-9)

# நெஞ்சை விட்டகலா நினைவுகளில் எட்டு ஆண்டுகள்



திருமதி
## ஸ்ரீ நகுலமீரா சிதம்பரநாதன்

**திதி : அபரபக்க பிரதமை**

மலர்வு 16.05.1947

உதிர்வு 21.04.2008

அம்மா என்பது வார்த்தையில்லை
அதுவே நம் உலகம் அம்மா
ஆண்டுகள் எட்டு சென்றாலும் ஆறுமோ எம் துயரம்
எம் குழந்தைகள் வளர்கையிலே
ஏங்குதே நெஞ்சம் உமக்காக
பாரினில் நாம் இருக்கும் வரை
போற்றிடுவோம் உங்கள் அருமை

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வவுனியா வடக்கில் மின்சாரம் இன்றி 2 ஆயிரம் குடும்பங்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வவுனியா,ஏப்.22

14 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மக்களுக்கு தேவையான மின்சாரம் உட்பட பல தேவைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். சுமார் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு முழுமையாக மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

> வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 309 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 331 அங்கத்தவர்கள் வாழ்கின்றனர். அவர்களில் 4 ஆயிரத்து 309 குடும்பங்களில் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சார வசதி கிடையாது. அவர்கள் இன்று வரைக்கும் கை விளக் குகளை நம்பியே வாழ்கின்றனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 309 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 331 அங்கத்தவர்கள் வாழ்கின்றனர். அவர்களில் 4 ஆயிரத்து 309 குடும்பங்களில் 2 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சார வசதி கிடையாது. அவர்கள் இன்று வரைக்கும் கை விளக்குகளை நம்பியே வாழ்கின்றனர்.

20 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட இந்தப் பிரதேச செயலாளர் பிரிவில், 10 கிராம சேவகர்களே பணியாற்றுகின்றனர். ஒவ்வொருவரும் தலா இரு பிரிவுகளில் பணிபுரிகின்றனர். குறித்த பிரிவில் மட்டும் 366 மாற்றுத்திறணாளிகள் உள்ளனர். அவர் களில் 98 பேருக்கு மட்டுமே சமூகசேவைகள் அமைச்சின் நிதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

இதேவேளை இங்கு வாழும் 4 ஆயிரத்து 309 குடும்பங்களில் ஆயிரத்து 596 குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் கிடையாது. நெடுங்கேணியில் இருந்து செல்லும் பிரதான வீதிகள் தார்ப் படுக்கை வீதிகளாக செப்பனிடப்பட் டுள்ள போதும் உள்ளூராட்சி சபைகளின் கட்டுப்பாட்டில் உள்ள வீதிகள் போர்க் காலத்தில் இருந்து புனரமைக்கப்படாது காணப்படுகின்றது.

இந்தப் பகுதி மக்களின் முக்கிய வாழ்வாதாரமாகக் கருதப்படும் விவசாயத்தைப் பொறுத்தவரையில் பெறப்படும் உற்பத்தி நெல்லைச் சந்தைப்படுத்துவதில் நெருக்கடி நிலையே காணப்படுகின்றது. அதிகாரிகள் இதைக் கவனத்தில் எடுத்து குறித்த தேவைகளை நிவர்த்தி செய்து தர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களுடைய கோரிக்கை தொடர்பாக வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, மக்களுக்கான குறித்த தேவைகள் இதுவரை நிவர்த்தி செய்யப்படாதது உண்மை. மக்களுடைய தேவைகள் தொடர்பாகவும், பிரதேசத்துக்குத் தேவையானவை தொடர்பாகவும் மேலிடங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.- என்றார். (ற-ஐ-10)



யாழ். போதனா வைத்தியசாலையில் 6 மாடிகளைக் கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டு வைபவம் அண்மையில் நடைபெற்றது. இதன் முதற்கட்டமாக 590 மில்லியன் ரூபா செலவில் 2 மாடிகளைக் கொண்ட கட்டடத்தொகுதி அமைக்கும்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கான அடிக்கல்லை வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மற்றும் பலர் நட்டனர். தொடர்ந்து கட்டடப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ற-ஐ-4)

## தெற்கு மாணவர்கள் பங்கேற்கும் புதுவருடக் கொண்டாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.22

வடக்கு மாகாண சபை, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் என்பன இணைந்து நடத்தும் வடக்கு - தெற்கு மாணவர்கள் பங்குபற்றும் சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டம் இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

"பனை ஓலை - தென்னை ஓலை" என்ற மகுடவாசகத்தின் கீழ் இந்த புதுவருடக் கொண்டாட்டம் நடைபெறவுள்ளது. கொழும்பு ரயில் நிலையத்திலிருந்து இன்று காலை 6.30 மணிக்கு 100 தென்பகுதி மாணவர்கள், யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் வருகை தரவுள்ளனர். தென்பகுதி மாணவர்களை யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் வைத்து, ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் இணைந்து வரவேற்பார்கள்.

தென்பகுதி மாணவர்கள் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்குப் பின்னர் அழைத்துச் செல்லப்படுவார்கள். அங்கு வடபகுதி மாணவர்களும் கலந்து கொள்வார்கள். இன்று மாலை கலை - கலாசார நிகழ்வுகள் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு, யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து தெற்கு - வடக்கு மாணவர்கள் கலந்து கொள்ளும் ஊர்வலம் இடம்பெறும். இந்த ஊர்வலம் பழைய பூங்காவில் வந்து நிறைவடையும். இதன் பின்னர் காலை 9 மணியிலிருந்து பழைய பூங்காவில் புதுவருடக் கொண்டாட்டம் இடம்பெறும். பிற்பகல் 2 மணியளவில் பரிசளிப்பு இடம்பெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை, தென் பகுதி மாணவர்கள் இங்கிருந்து புறப்படுவார்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

(ற-ஐ-5)

## க.பொ.த. சாதாரண தரத்தில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

மன்னார், ஏப்.22

கடந்த வருடம் இடம் பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அதியுயர் சித்திகளைப் பெற்ற மன்னார் விடத்தல் தீவு கிராமத்தைச் சேர்ந்த சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முனதினம் புதன்கிழமை விடத்தல் தீவு தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

விடத்தல் தீவு ஜேம்ஸ் றீற்றம்மாள், சுதாஜினி உதவிக்கரம் அமைப்பின் உதவியுடன் இடம் பெற்ற நிகழ்வில் அதியுயர் சித்திகளைப் பெற்ற மன்னார் விடத்தல் தீவு கிராமத்தைச் சேர்ந்த சாதனையாளர்கள் 4 பேர் நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனும், கௌரவ விருந்திணர்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கமும், வட மாகாண சபை உறுப்பினர் மருத்துவர் ஜீ.குணசீலன் மற்றும் விடத்தல் தீவு பங்குத் தந்தை அருட்தந்தை செல்வநாதன் பீரிஸ் அடிகளாரும் கலந்து கொண்டு சாதனையாளர்களைக் கௌரவித்தனர்.

(ற-ஐ-56)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு சிறையுடன் அபராதம் விதிப்பு

சாவகச்சேரி,ஏப்.22

கசிப்பு வைத்திருந்த சாவகச்சேரி கனகன்புளியடி வாசிக்கு ஒரு லட்சம் ரூபா அபராதமும் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனையும், கேரதீவு வாசிக்கு 50 ஆயிரம் ரூபா அபராதமும் சாவகச்சேரி நீதிமன்று விதித்தது.

சாவகச்சேரிப் பொலிஸாரின் திடீர் பரிசோதனையின் போது 180 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த கனகன்புளியடி வாசிக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்த நபர் நீதிமன்றால் பல தடவைகள் தண்டிக்கப்பட்டவர் என பொலிஸாரினால் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதனையடுத்து ஒரு லட்சம் ரூபா அபராதமும், ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இதேவேளை கேரதீவுப் பகுதியில் கசிப்பு வைத்திருந்த மூவருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஒருவர் குற்றத்தை ஒப்புக் கொண்ட போதிலும் மற்றைய இருவரும் தாம் சுற்றவாளிகள் எனத் தெரிவித்தனர்.

குற்றத்தை ஒப்புக் கொண்டவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து, சுற்றவாளி எனக் கூறிய இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ற-ஐ-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிக்குளம் மற்றும் கேப்பாப்பிலவு காணிகள் விரைவில் விடுவிக்கப்படும்

## அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார்,ஏப்.22

கடற்படையினரின் வசமுள்ள முள்ளிக்குளம் மற்றும் கேப்பாப்பிலவு காணிகள் விரைவில் மீட்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அரச படைகளால் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இடம்பெயர்ந்த முள்ளிக்குளம் கிராம மக்கள் தமது சொந்தக் காணிகளில் மீண்டும் வாழ வேண்டும் என்ற முனைப்புடன் இருக்கின்றார்கள்.

ஆனால் மகிந்த ராஜபக்ச அரசு மீள்குடியேற்றத்தில் அக்கறை செலுத்தவில்லை. ஆயினும் புதிய அரசால் பல பகுதிகள் மீள்குடியேற்றப்பட்டுள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் பயனாக புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் பிரகாரம் இந்த நாட்டில் முப்படையினர் பொது மக்களின் காணிகளை அபகரித்து இருந்தால் குறித்த காணிகளின் விவரங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு அறிவித்தல் விடுத்துள்ளார்.

ஏற்கனவே நாங்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்களின் காணிகளை கடற்படையினர் அபகரித்துள்ளமை தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்துள்ளோம்.

தற்போது குறித்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை நாங்கள் சந்தித்தபோது வெகு விரைவில் முள்ளிக்குளம் கிராமம் கடற்படையினரிடம் இருந்து விடுவிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று கேப்பாப்பிலவு காணி தொடர்பாகவும் நாங்கள் பேசியுள்ளோம். எனவே முள்ளிக்குளம் மற்றும் கேப்பாப்பிலவுக் காணிகள் படையால் அபகரிக்கப்பட்டுள்ளமை குறித்தும், குறித்த காணிகள் மக்களினுடையது என ஆதாரத்துடன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளோம். குறித்த காணிகள் உடன் விடுவிக்கப்பட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு முயற்சி செய்து வருகின்றது.

நாடாளுமன்றத்தில் பிரதமர், ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோரிடம் இவ்விடயம் தொடர்பான கோரிக்கைகளை நாங்கள் முன் வைத்துள்ளோம். இந்தக் காணிகள் தொடர்பாக ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ள விடயங்களையும் நாங்கள் அனுப்பி வைத்துள்ளோம். எனவே வெகு விரைவில் குறித்த காணிகள் விடுவிக்கப்படும். அதற்கான சகல முயற்சிகளை தமிழ் தேசியக்கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது. - என்றார். (ற-ஐ-56)



## மணற்காடு றோ.க.த.க.பாடசாலை கட்டடத்தொகுதிகளுக்கு அடிக்கல்

கரணவாய், ஏப்.22

வடமராட்சி கிழக்கு மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கான புதிய கட்டடத்தொகுதிகளுக்கு அடிக்கல் வடமாகாண ஆளுநர் மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆகியோரால் நேற்று சம்பிரதாய பூர்வமாக நடப்பட்டது.

குறித்த பாடசாலைக்கான இரண்டு கட்டடத் தொகுதிகளில் 86 இலட்சம் ரூபா செலவில் இரண்டுமாடிக் கட்டடத் தொகுதி பிரிட்டன் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பாலும், 35 இலட்சம் ரூபா செலவில் மற்றையது வடமாகாண கல்வியமைச் சாலும் அமைக்கப்பட வுள்ளன.

அதில் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பால் அமைக்கப்படவுள்ள கட்டடத்துக்கான அடிக்கல்லை வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயும், கல்வியமைச்சால் அமைக்கப்படவுள்ள கட்டடத் தொகுதிகான அடிக்கல்லை வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜாவும் நட்டனர்.

பாடசாலை அதிபர் சோ.வாகீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டஅரச அதிபர் என்.வேதநாயகன், வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், புனரமைப்பு புதுவாழ்வு அமைப்பின் பிரிட்டன் கிளைத் தலைவர் பொறியிலாளர் வே.சர்வேஸ்வரன், அந்த அமைப்பின் வட, கிழக்கு மாகாண இணைப்பாளர் எஸ்.கென்றி அமல்ராஜ், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் மற்றும் மருதங்கேணி பிரதேசசெயலர் க.கனகேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற-ஐ-108)

## பெண்கள் ஒன்று திரண்டு குடும்பத்தார் மீது தாக்குதல்

சாவகச்சேரி,ஏப்.22

ஒரு கிராமத்துப் பெண்கள் திரண்டு சென்று மற்றொரு கிராமத்திலுள்ள வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து குடும்பத் தலைவர் முன்னிலையில் அவரது மனைவியையும், நான்கு பிள்ளைகளையும் தாக்கியதுடன் வேலிகளையும் பிடுங்கி எறிந்துள்ளனர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு நடந்துள்ளது.

இந்த இடத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால்உள்ள ஐயனார் குடியிருப்பைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு அட்டகாசம் புரிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இந்தப் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு மற்றும் அரச சாராயம் விற்பனை செய்வதாக அறிந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஐயனார் கோவிலடிப் பகுதியில் தேடுதல் நடத்தியுள்ளனர். குறித்த பெண்ணின் கணவரும் அந்தப் பகுதியில் மது அருந்தச் செல்வதால் தாக்கப்பட்ட பெண் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்திருக்கலாம் என்று கருதியே குறித்த பெண்கள் அட்டகாசம் புரித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

குறித்த குடும்பத்துக்கிடையில் இருந்த தனிப்பட்ட பிரச்சினை அதற்குக் காரணம் என்று பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் அது தொடர்பில் விசாரணைகளின் பின்னரே தெரியவரும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-4,9)

## கஞ்சாச் சுருட்டுடன் இரு இளைஞர் கைது

கஞ்சாச் சுருட்டு ஒன்றையும் 360 மில்லிகிராம் கஞ்சாவையும் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அண்மையிலுள்ள தண்ணீர் தாங்கி அருகில் வைத்து இரண்டு இளைஞர்களைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இருவரும் பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாவர். நேற்றுமுன்தினம் அவர்கள் இருவரையும் பொலிஸார் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் வி.ரி. சிவலிங்கம் உத்தரவிட்டார். (த-103)



இளங்கோ அடிகளாரின் சிரார்த்த தினமான நேற்று வவுனியா சின்னப்புதுக்குளம், சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள இளங்கோ அடிகளின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ். சீனிவாசனால் நினைவுப் பேருரையும் நிகழ்த்தப்பட்டது. (ற-ஐ-21)

## தந்தை செல்வா சிரார்த்த தினம்

வவுனியா,ஏப்.22

தந்தை செல்வாவின் சிரார்த்த தின நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வவுனியாவில் வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப. சத்தியலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

காலை 7மணிக்கு தூய ஆவியானவர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வுடன் தந்தை செல்வாவின் சிரார்த்த தினம் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு வவுனியா நகர மத்தி தந்தை செல்வா நினைவுத் தூபியில் கொடியேற்றல், மாலையிடுதல், மலர் அஞ்சலி நிகழ்வுகளும் இடம் பெறும்.

தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு வவுனியா மாவட்ட இலங்கைத் தமிழரசுக்கட்சி அலுவலகமான தாயகத்தில் ஒன்றுகூடல் இடம்பெற்று தந்தை செல்வா பற்றிய நினைவுப் பேருரைகள் இடம்பெறும். நினைவுப் பேருரையை ச.வாமதேவன் நிகழ்த்த உள்ளார்.

அத்துடன் நண்பகல் 12 மணிக்கு வவுனியா குருமன்காடு காளியம்மா ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளது என்று வவுனியா மாவட்ட தந்தை செல்வா நினைவு அவையினர் அறிவித்துள்ளனர். (ற-ஐ-402)

## வவுனியா தனியார் வங்கியில் கடனட்டை மூலம் பண மோசடி

வவுனியா, ஏப்.22

வவுனியாவில் தனியார் வங்கி ஒன்றில் கடன் அட்டை மூலம் 3 லட்சத்து 45 ஆயிரம் ரூபா பண மோசடி செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு பெண் ஒருவரை நேற்று முன்தினம் வவுனியாப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் வசித்து வந்த பெண் பிறிதொரு நபரின் தனியார் வங்கி ஒன்றின் கடன் அட்டையைப் பாவித்து பல தடவைகள் பணம் பெற்றுள்ளார் என்றும் மொத்தமாக 3 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவை மோசடி செய்துள்ளார் என்றும் அண்மையில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொண்ட போதே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்றும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-21)

## விபத்தில் சிக்கிய முதியவர் சாவு

விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த முதியவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். இந்த விபத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் வாகன சாரதி கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த விபத்தில் நிலாவரை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த முருகன் கந்தசாமி (வயது 72) என்பவரே உயிரிழந்தார். கடந்த 25 ஆம் திகதி இந்த விபத்து இடம்பெற்றது. அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும், அவருக்குப் பின்புறமாகச் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகின. அதில் படுகாயமடைந்த குறித்த முதியவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன் தினம் அவர் உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம்,ஏப்.22
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை பின்வரும் இடங் களில் மின்சாரம் தடைப் பட்டிருக்கும்.
கிளிநொச்சி பிரதேசத்தில் திருவையாறு, சாந்தபுரம், இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும், நாளை சனிக்கிழமை யாழ். பிரதேசத்தில் மயிலங்காடு, குப்பிளான், மருதனார் மடம், சுன்னாகம் பெரிய மதவடி, உடுவில், சங்குவேலி, மானிப்பாய், இணுவில், உப்புமடம், தாவடி, மானிப்பாய் வீதி, சுதுமலை, குளப்பிட்டி, குளப்பிட்டி ஆனைக் கோட்டை வீதி, ஆனைக்கோட்டை சந்தி, யாழ். வீதி மானிப்பாய், ஆறுகால்மடம், கூளாவடி, ஆனைக் கோட்டை வி.சி, நவாலி, மூத்தவிநாயகர் கோயிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், அரசடி, அட்டகிரி, வேலக்கை, பள்ளத்தடி, சாவற்காட்டுச் சந்தி, வராகி அம்மன் கோயிலடி, காக்கைதீவு, மருதனார் மடம் - யாழ். நுண் கலைப்பீடம், பிராந்திய விற்பனை அபிவிருத்தி முகாமையாளர் அலுவலகம், சுன்னாகம் கார்கில்ஸ் பி.எல்.சி ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி பிரதேசத்தில் இரணைமடு, திருவையாறு, கிருஷ்ணபுரம், அம்பாள்குளம், பாரதிபுரம், மலையாள புரம், விநாயகபுரம், விவேகானந்தநகர், கோவிந்தன்கடைச்சந்தி, பன்னன்கண்டி, வட்டக்கச்சி, கறுப்பிக்குளம், உடச்ச கண்டி, மாயவனூர், இராமநாதபுரம், சாந்தபுரம், இரணைமடு, திருவையாறு, இரணைமடு விமானப்படை I மற்றும் II, வட்டக்கச்சி பாம், கிளிநொச்சி இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிட்டெட் ஆகிய இடங்களிலும், மன்னாரில் நானாட்டான் பிரதேத்திலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாணமின்வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந-ஐ-ரி)

# 3 ஆயிரம் வீட்டுத் திட்ட பணிகள் மே மாதத்தில் ஆரம்பிக்கப்படும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.22
யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 39 ஆயிரம் வீட்டுத் தேவைகள் இருக்கின்றன என்றும், முதற்கட்டமாக 3 ஆயிரம் வீட்டுத் திட்ட வேலைகள் மே மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் - யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.
யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
முன்னுரிமை அடிப்படையில், யாழ். மாவட்டத்துக்கு 3 ஆயிரம் வீடுகள் மீள்குடியேற்ற அமைச்சால் தரப்பட்டுள்ளன.
பயனாளிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு, அந்த விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

> முன்னுரிமை அடிப்படையில், யாழ். மாவட்டத்துக்கு 3 ஆயிரம் வீடுகள் மீள் குடியேற்ற அமைச்சால் தரப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்துக்கு வழங்கப்படுகின்ற வீட்டுத் திட்டத்துக்கு அமைவாக பயனாளிகள் தெரிவு செய்யப்படுவார்கள். சுமார் 8 லட்சம் பெறுமதியான புதிய கல் வீடுகளை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தெல்லிப்பழை, நாகர்கோவில் மற்றும் மணியம்தோட்டம், அரியாலை பகுதி, மாதகல், பொன்னாலை போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.
3 ஆயிரம் வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதே வேளை, பயனாளிகள் தெரிவில் குறைகள் இருப்பின் பிரதேச செயலாளர்கள் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், எதிர்வரும் மே மாதத்துக்குள் 3 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருட இறுதிக்குள் நிறைவு செய்ய வேண்டும் - என்றார். (ந-ஐ-106)

## பொதுச் சபைக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஏப்.22
வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்க மண்டபத்தில் க.சி.தவராசா தலைமையில் நடைபெறவுள்ளன.
இந்தக் கூட்டத்துக்கு சிறப்பு விருந்தினர்களாக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. மோகனும், திருநெல்வேலி கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ. அமிர்தலிங்கமும், வட்டுக்கோட்டை அரச கால்நடை வைத்தியர் ம.முரளிதாஸும், வலி. மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதனும், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.நிசாந்தனும், யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் க.மகாதேவனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-ஐ-ரி)



சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் உள்ள குபேர கணபதி ஆலயத்தில் நேற்று சித்திரா பௌர்ணமியை முன்னிட்டு சித்திரைக் கஞ்சி வழங்கப்பட்டது. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் சித்திரைக் கஞ்சியும், பொதுச் சந்தை வெற்றிலை வியாபாரிகள் பழ வகை வியாபாரிகளும் இணைந்து அன்னதானமும் வழங்கினர். (ந-ஐ-9)

## நெருப்புக் காய்ச்சலுக்கான தடுப்பு மருந்தேற்றல்

யாழ்ப்பாணம், ஏப்.22
பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளில் 5 வயது தொடக்கம்25வயதுவரையானோருக்கான நெருப்புக் காய்ச்சலுக்கான தடுப்பு மருந்தேற்றும் செயற்பாடுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் பிரதி சனிக்கிழமை தோறும் குறித்த நிலையங்களில் இடம்பெறவுள்ளன என்று பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.
ஏற்கனவே இந்தத் தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளாதவர்களும் குறித்த தினங்களில் வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ந-ஐ-ரி2)

## சுற்றாடல் சட்ட நடைமுறைப்படுத்தல் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.22
யாழ்.மாவட்ட சுற்றாடல் சட்ட நடைமுறைப்படுத்தல் குழுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.
கூட்டத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவம், சுத்திகரிப்பு நிலைய மற்றும் வாகன திருத்தம் நீர் வள முகாமைத்துவம், பொலித்தீன் பாவனைக் கட்டுப்பாடு, ஒலி மாசுக்களை கட்டுப்படுத்தல், சுத்தமான மணல் அகழ்வு போன்ற விடயங்கள் ஆராயப்படும் என்று அரச அதிபர் நா. வேதநாயகன் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். (ந-ஐ-9)

# வடமராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர் மாநாடு

யாழ்ப்பாணம்,ஏப்.22
ஆசிரியர்களுக்குத் தொழில்சார் ஊக்கத்தை வழங்குவதற்காகவும், அவர்களின் வாண்மையை விருத்தி செய்து கொள்வதற்காகவும், கற்பித்தலின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் உத்வேகத்தை வழங்கும் முகமாகவும் ஆசிரியர் மாநாடு இடம்பெறவுள்ளது.
வடமராட்சிக் கல்வி வலயத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஆசிரியர் மாநாடு எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் தெரிவித்தார்.
இரண்டு நாள்கள் நடைபெறும் இந்த ஆசிரியர் மாநாடு கண்காட்சி, ஆய்வரங்கு, பேருரைகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக நடைபெறவுள்ளது.
கண்காட்சி அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்கியதாக ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, முறைசாராக் கல்வி, முன்பள்ளி ஆகிய எல்லாப் பிரிவுகளையும் கொண்டதாக அமையவுள்ளது. கற்பித்தல், துணைச்சாதனங்கள், மாதிரி உருக்கள், புத்தாக்கங்கள் மற்றும் நவீன கற்பித்தல் முறைமைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதான ஆசிரியர்களால் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஆக்கங்களும் காட்சிப் படுத்தப்படவுள்ளன. அத்துடன் ஆசிரியர்களின் ஆய்வுக் கட்டுரைகள், கல்விசார் நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவையும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.
கல்விசார் பிரச்சினைகளை உள்வாங்கி அவற்றை ஆய்வு செய்து அவற்றுக்கான தீர்வுகளை முன்வைப்பதாக ஆய்வரங்கும் நடைபெறும். தற்போதைய கல்விசார் களநிலைமைகளை தொனிப்பொருளைக் கொண்டதாக முதலாம் நாள் நிகழ்வில் பேராசிரியர் மா. சின்னத்தம்பி, விரிவுரையாளர் த.நித்திலவர்ணன் ஆகியோரது பேருரைகளும், இரண்டாம் நாள் நிகழ்வில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, ஓய்வு நிலை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தரும், தேசியக் கல்வி நிறுவகத்தின் பகுதிநேர விரிவுரையாளருமான பி.ஆறுமுகம் ஆகியோரது பேருரைகளும் இடம்பெறவுள்ளன.
இரண்டாம் நாள் ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் கலை நிகழ்வுகளின் சங்கமத்துடன் ஆசிரியர் மாநாடு நிறைவுபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-ஐ-4)

## நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம், ஏப்.22
கலபூசணம் ந.இராமநாதனின் 'அமுதும் நிஜங்களும்' சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் வடக்கு குச்சம் ஞான வைரவர் தேவஸ்தான முன்றிலில் நடைபெறவுள்ளது.
ஓய்வுநிலை அதிபர் கி.கணேசன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சாகித்தியரத்னா தெணியான் கலந்து கொள்ளவுள்ளார். (ந-ஐ-ரி2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அத்தியாவசிய பொருள்களுடைய வற் வரி அதிகரிக்கப்படமாட்டாது

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.22

வற் வரி அதிகரிக்கப்படுகின்ற போதிலும், மின்சாரம் - குடி தண்ணீர் ஆகியவற்றுக்கான கட்டணம் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகள் என்பன அதிகரிக்கப்படமாட்டாது. ஆனால், தொலைபேசிக் கட்டணங்கள் மற்றும் தனியார் வைத்திய மற்றும் கல்வித்துறைக்கான வரி அதிகரிக்கப்படும்.- இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை வராந்த முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் அதிகரிக்கப்படவுள்ள வற் வரி தொடர்பில் சில ஊடகங்களும், ஒரு சில தரப்புகளும் அரசைக் கடுமையாக விமர்சித்து வருகின்றன. பொலனறுவையில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்துகள் கூட திரிபுபடுத்தப்பட்ட விதத்திலேயே வெளிவந்துள்ளன. இதுகுறித்து உண்மையான நிலைமையை நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அரசின் வருமானம் போதியளவில் இல்லை. நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டுமாயின் வற் வரியை 15 வீதமாக அதிகரிக்க வேண்டும்.

2012 ஆம் ஆண்டு 12 வீதமும், 2015 ஆம் ஆண்டு முதல் 11 வீதமுமே இந்த வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும், இதனை வைத்துக்கொண்டு அரசுக்கு வருமானம் பெறமுடியாத காரணத்தாலேயே மே 2 ஆம் திகதி முதல் 15 சதவீத வரி அதிகரிப்பை நாம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

ஆனால், இது பொதுமக்கள் அஞ்சுவது போல அவர்களுக்கு சுமையாக இருக்காது. இவ்வாறான தொரு கருத்தையே ஜனாதிபதியும் வெளியிட்டிருந்தார்.



அதாவது, மின்சாரம், குடி தண்ணீர் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான விலையை அதிகரிக்கக்கூடாதுஎன்பதேஜனாதிபதி, பிரதமரின் உறுதியான நிலைப் பாடாக இருக்கின்றது.

அந்தவகையில், சீஸ் போன்ற சொகுசான பொருள்களின் வற் வரி, தனியார் வைத்தியசாலை, தனியார் பாடசாலை, தொலைத் தொடர்பு கட்டணங்களுக்கான வற் வரி என்பன மட்டுமே அதிகரிக்கப்படவுள்ளன. இதன்மூலம் அரச கல்வி மற்றும் சுகாதாரத் துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு, சில அதிகரிப்புக்களை மேற்கொண்டால் மட்டுமே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். இவ்வாறான நிலையில் எந்தவொரு அரசாலும் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது - என்றார். (ற-ஜ-5)

### யோசித தொடர்பான கடற்படை நிலைப்பாடு விரைவில் வெளியாகும்

கொழும்பு, ஏப்.22

லெப்.யோசித ராஜபக்சவின் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பான, கடற்படையின் நிலைப்பாடு தொடர்பாக விரைவில் அறிவிப்பு வெளியிடப் படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

லெப். யோசித ராஜபக்ச தொடர்பாக விசாரிக்க கடற்படைத் தளபதியால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர பதிலளித்தார்.

லெப். யோசித ராஜபக்ச ஆள் சேர்ப்புச் செய்யப்பட்டது, பயிற்சிக்கு அனுப்பப்பட்டது போன்றமுறைகேடுகள் குறித்து கடற்படையின் நிலைப்பாடு குறித்த அறிக்கை ஒன்று விரைவில் வெளியிடப்படும். அல்லது அடுத்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் பகிரங்கப்படுத்தப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (ற-ஜ-5)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து ஈ.பி.டி.பி. மே தினக் கூட்டம்

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.22

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்தே ஈ.பி.டி.பி. இந்த முறை மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளது. எனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிரிவு மற்றும் தனித்து என்ற சொல்லுக்கே இடமில்லை என்று, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

> மிகவும் வெற்றிகரமாக மே தினக் கூட்டத்தை நடத்த உள்ளோம். காலிக்கு வராமல் வேறு மே தினக் கூட்டங்களில் கலந்து கொள்பவர்கள் தொடர்பில் மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்படும்.

கொழும்பு டாலி வீதியில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மகிந்த அமரவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தென் பகுதியில் அரசின் மே தினக் கூட்டம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு மகிழச்சியடைகின்றோம். தொழிற் சங்கங்கள் மே தினக் கூட்டங்களை நடத்துவதிலும் பேரணிகளை நடத்துவதிலும் மிகவும் உற்சாகமாக உள்ளன.

ஆகவே தொழிற்சங்கவாதியான லெஸ்லி தேவேந்திரவை முன்னிலையாகக் கொண்டு அரசின் மே தின கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி காலியில் நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மே தினக் கூட்டம் தொடர்பில் ஆர்வமாக உள்ளார். இந்த மே தினக் கூட்டத்தில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அனைவரும் கலந்துக் கொள்ள வேண்டும்.

மே தினத்துக்கு 6 மாதங்களுக்கு முன்னராக அழைப்பு விடுவதில்லை. மே தினம் என்பது உழைக்கும் மக்களின் உரிமைகளுக்கான தினம். இதனை நாம் ஏற்பாடு செய்கின்ற நிலையில் தனிப்பட்ட ரீதியில் அழைப்பிதழ்கள் வழங்க வேண்டியதில்லை. மே தினம் தொடர்பாக தேசிய ஒழுங்குப்படுத்தல் குழுவில் குமார் வெல்கம, பவித்ரா வன்னியாராச்சி மற்றும் மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோரும் உள்ளனர்.

மே தின ஏற்பாடுகள் தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுமாயின் சந்திப்புக்களின் போது கூறியிருக்கலாம். எவ்வாறாயினும் அழைப்பிதழ் தேவைப்படுகின்றவர்களுக்கு அழைப்பிதழை வழங்க நேரம் கோரியுள்ளோம். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இன்னும் எமக்கு நேரம் ஒதுக்கித் தரவில்லை.

ஆனால், மே தினத்தில் கலந்து கொள்ளும்படி தெரிவித்துள்ளோம். எதிர்வரும் மே தின கூட்டம் அடுத்த வெற்றிக்கான ஆரம்பமாகும். இதில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். பிரிவு மற்றும் தனித்து என்ற சொல்லுக்கே இனி இடமில்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் செயலாளராக நான் பதவியை ஏற்றுக் கொண்ட நாள் முதல் இன்று வரை அனைவரையும் ஒற்றுமைப்படுத்தவே செயற்பட்டேன். எனவே காலியில் நடைபெறும் மே தினக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உட்பட அனைவரும் கலந்துக் கொள்வார்கள் என நான் நம்புகின்றேன்.

வடக்கில் ஈ.பி.டி.பி. மற்றும் மலையகத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தெற்கில் முஸ்லிம் கட்சிகள் என 11 க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் எம்முடன் இணைந்து மே தினக் கூட்டத்தில் கலந்துக்கொள்ளவுள்ளன. எனவே இனி பிரிவு மற்றும் தனித்து என்ற சொல்லுக்கே இடமில்லை.

மிகவும் வெற்றிகரமாக மே தினக் கூட்டத்தை நடத்த உள்ளோம். காலிக்கு வராமல் வேறு மே தினக் கூட்டங்களில் கலந்து கொள்பவர்கள் தொடர்பில் மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்படும். ஆனால்எவரும் வேறு மே தினக் கூட்டங்களில் கலந்து கொள்வார்களென நான் கருதவில்லை என்று தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

# நூலிழையில் தப்பிய சுற்றுலாப் பயணிகள்



கொழும்பு, ஏப்.22

சித்திரைப் புத்தாண்டுவிடுமுறையைக் கழிப்பதற்காக யால சரணாலயத்துக்கு வாகனங்களில் சென்ற சுற்றுலாப் பயணிகள் நூலிழையில் உயிர் தப்பிய சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் பயணித்த வாகனம் இடைநடுவில் பழுதடைந்த நிலையில், யானையொன்று அவர்களது வாகனத்துக்கு மிக அருகே சென்று, சுற்றுலாப் பயணிகளுக்கு கிலி நடுக்கத்தைஉண்டுபண்ணியுள்ளது. பசியால் தவித்த யானை உணவைத்தேடி வாகனக் கண்ணாடிக்குள் தன் தும்பிக் கையையும், பின்னர் அதன் முகத்தையும் நுழைக்க முற்பட்ட போது சுற்றுலாப் பயணிகளோ உயிரைக்கையிலே பிடித்தபடி வாகனத்தின் மறுபக்கத்தில் அந்தரத்தில் பதற்றத்தில் நின்ற ஒளிப்படங்கள் தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. (ற-ஜ-5)

# தற்போதைய வற் வரி அதிகரிப்பு மக்களைக் கடனுக்குள் தள்ளும்

## பந்துல குணவர்த்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.22

மக்களை ஏமாற்றி பிழையான வருமானத் தரவுகளை முன்னிறுத்தி முன்வைக்கப்பட்ட நல்லாட்சி அரசின் வரவு - செலவுத் திட்டம் தோல்வியடைந்துள்ளது. தற்போது வற் வரியை அதிகரித்து கடன்சுமையை பொதுமக்களின் தலையில் சுமத்தி அவர்களின் வாழ்க்கைச்செலவைப் பல மடங்கு அதிகரிக்கும் முயற்சியையே அரசு மேற்கொண்டு வருகின்றது- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற பொது எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வினைதிறனற்ற நிதிக் கொள்கையால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழ நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்று உடனடியாக அமைத்து தீர்வுகாண அரசு முன்வர வேண்டும் என்றும் - அவர் இதன்போது வலியுறுத்தினார். (ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பில் த.தே. கூட்டமைப்பு பேசுவதற்குத் தயார்

## பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.22
சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுடன் பேசுவதிலும் பார்க்க எம்முடன் பேசலாம். நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம். எது எப்படியிருப்பினும், சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியே தீருவோம்.- இவ்வாறு மின்சக்தி மற்றும் புதுபிக்கதக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் புதுபிக்கதக்க சக்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சம்பூர் அனல் மின்நிலையம் தொடர்பாக தற்போது பிரதேச மக்களிடையே பெரும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டில் எந்தவொரு திட்டம் ஆரம்பிக்கப்படும்போது ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்புகளும் ஏற்படுவது வழக்கமான விடயமாகும். இதனை தலையில் போட்டுக்கொண்டால் எதுவும் செய்ய முடியாமல் போகும்.

சம்பூர் அனல் மின் நிலையம் நிர்மாணிப்பதில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாகக் காணி தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. இது தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. இதன் பிரகாரம் குறித்த குழுவால் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

> நாட்டில் எந்தவொரு திட்டம் ஆரம்பிக்கப் படும்போது ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப் புகளும் ஏற்படுவது வழக்க மான விடயமாகும். இதனை தலையில் போட்டுக்கொண்டால் எதுவும் செய்ய முடியாமல் போகும்.



இதேவேளை - இது குறித்து ஆராய்வதற்கு சம்பூர் பிரதேசத்துக்கு அமைச்சர் தலைமையில் குழுவொன்றும் பயணிக்கவுள்ளது. இதன்போது பிரச்சினைகளை எம்மால் தீர்த்துக்கொள்ள முடியும். சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பில் பிரதேச மக்களிடையே அதிருப்தி இருந்தாலும், நாட்டின் 500 மெகா வோர்ட்ஸ் மின் பற்றாகுறையை பூர்த்தி செய்வதற்காக திட்டத்தை நிறைவேற்றுவோம்.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்குத் தயாராக உள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவுடன் பேசுவதைப் பார்க்கிலும், நாமே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அனல் மின்நிலையத்திட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ளது. இதன் இரண்டு மற்றும் மூன்றாம் கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அடுத்த இரண்டு வருடத்துக்குள் ஆயிரம் மெகா வோர்ட்ஸ் உற்பத்தி செய்யவேண்டியுள்ளது. மின்சாரத்துக்கான தேவைப்பாடு அதிகரித்துள்ளது. இதற்கு ஏற்றால்போல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது - என்றார். (றி-ஜ-5)

# சட்டவிரோத துப்பாக்கிகளைக் கையளிக்க காலக்கெடு

கொழும்பு, ஏப்.22
சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்கள் அவற்றை அரசிடம் கையளிப்பதற்கான பொதுமன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆயுதங்களை வழங்குபவர்களுக்குப் பணமும் வழங்கப்படவுள்ளது.

ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் மே 6 ஆம் திகதிவரை வேலை நாள்களில் (10 நாள்கள்) மாவட்டச் செயலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் இவற்றை ஒப்படைக்கலாம் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பகல் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர்சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துவெளியிடுகையிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தம்மிடமுள்ள சட்டவிரோத ஆயுதங்களைப் பொதுமன்னிப்புக் காலத்தில் அரசிடம் ஒப்படைக்கும் நபர் எந்தவித தண்டனைக்கும் உட்படுத்தப்படமாட்டார். அத்துடன், ஆயுதங்களை ஒப்படைப்பவர்களுக்குக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

இதன்படி, துப்பாக்கி அல்லது அதற்குச் சமமான ஆயுதங்களுக்கு (கட்டுத்துவக்கு) 5 ஆயிரம் ரூபாவும், பிஸ்டலுக்கு 10 ஆயிரம் ரூபாவும், ரி-56 வகையிலான ஆயுதங்களுக்காக 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். பொதுமன்னிப்புக் காலம் முடிந்ததும் மே 6 ஆம் திகதி முதல் பெரும் தேடுதல் இடம்பெறும். இதன்போது சிக்குபவர்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதே வேளை, புலிகளின் ஆயு தங்களை வைத்திருப்பவர்களும் இந்தக் காலப்பகுதியில் அவற்றைக்கையளிக்கலாம். எந்தவித விசேட விசாரணையும் இடம்பெறாது- என்று தெரிவித்துள்ளார். 800 க்கும் ஆயிரத்துக்கும் இடைப்பட்ட சட்டவிரோத ஆயுதங்களே வெளியில் புழக்கத்தில் இருக்கும் என்று நம்புகிறேன். இனிமேல் தனிப்பட்டவர்களின் பாதுகாப்புக்கு துப்பாக்கி கோரி விண்ணப்பிப்பவர்கள்தொடர்பில்குழுவொன்று ஆராயும். அதன் பின்னர் பாதுகாப்புப் பேரவைக்கு அனுப்பப்படும். அதன் பின்னரே உரிய நடவடிக்கை இடம்பெறும் என்றும்அவர்தெரிவித்தார். (ற-ஜ-5)

# தனியார் ஊழியருக்கு மேயில் சம்பள உயர்வு

கொழும்பு, ஏப்.22
தனியார் துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு அவர்களது மே மாதச் சம்பளத்துடன் கட்டாயமாகச் சேர்க்கப்படவேண்டும்எனவும், அந்த நிபந்தனையைப் புறக்கணிக்கும் தொழில்தருநர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் எனவும், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மே மாதம் முதல் கட்டாயமாக வழங்கப்படவேண்டிய இந்த ஊதிய உயர்வு சரியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதைப் பரீட்சிக்க தொழில் அமைச்சு அதிகாரிகள் சகல தனியார்துறை நிறுவனங்களிலும் திடீர் சோதனைகளை நடத்துவர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொழில் அமைச்சு, அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பதற்கான இரு நாள் கருத்தரங்கு கொழும்பில் இடம்பெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

திடீர் சோதனைகளை நடத்தவுள்ள இந்த அதிகாரிகளின் குழுக்கள், தமது கடமைகளைச் சரிவரச் செய்கின்றனவா என்பதை மேற் பார்வை செய்ய உயரதிகாரிகளின் குழுவொன்றும் நியமிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற-5)

# ஆயுதக்கொள்ளைச்சந்தேகநபர்கள் விரைவில் கைது செய்யப்படுவர்

## குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.22
மாத்தளை, லக்கலை பொலிஸ் நிலையத்தில் கொள்ளையிடப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான சந்தேகநபர்களை அடுத்துவரும் சில நாள்களுக்குள் கைது செய்ய முடியும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

உளவுப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ள சில தகவல்களுக்கு அமைவாகவே குற்றப் புலனாய்வுப் பிரிவு இவ்வாறு தெரிவித்துள்ளது.

சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடும் அரசியல் செல்வாக்குள்ள சிலர் கடந்த காலங்களில் லக்கலை பொலிஸ் நிலையத்தில் பல பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு லட்சக்கணக்கான பணத்தைப் பகிர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் தற்போதைய லக்கலை பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி கடமையேற்றதும் அந்த பணப்பகிர்வுக்குத் தடை ஏற்பட்டுள்ளது. அதனாலேயே பொறுப்பதிகாரியை எப்படியேனும் அங்கிருந்து விரட்டியடிக்க சூட்சுமமாக மிகத் திட்டமிட்டு இந்த ஆயுதக் கடத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது என தேசிய உளவுப் பிரிவின் களநிலை அதிகாரிகள் தமது பிரதானிக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

மாதாந்தம் பணம் பெறுவோரின் பட்டியல் தனக்குத் தெரியும் எனவும், அவ்வாறு பணம்பெறுவோர் இனிமேல் அதனைப் பெறுவது கண்டறியப்பட்டால்அவர்களைப் பொலிஸ் சேவையில் இருந்தே விரட்டுவேன் எனவும், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒரு முறை தமக்கு கீழ் உள்ள பொலிஸாருடனான சந்திப்பில் தெரிவித்துள்ளமை குறித்தும் இதன் போது புலனாய்வாளர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்துள்ள விசாரணைகளில் இந்த ஆயுதக் கடத்தல் பொலிஸ் நிலையத்துக்குள் இடம்பெற்றசதிநடவடிக்கைஎன்று சில சாட்சியங்களை வைத்து சந்தேகிக்கப்படும் நிலையில், சந்தேக நபர்களைக்கைதுசெய்து விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் 100க்கும் அதிகமானோரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் வழங்கியுள்ள சாட்சி வாக்குமூலங்கள் ஒன்றுக்கொன்று பரஸ்பர வேறுபாட்டை கொண்டுள்ளன என்று புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்களை நெருங்கி விட்டதாகக் கூறும் புலனாய்வுப்பிரிவு விரைவில் அவர்களை கைது செய்ய முடியும் என்றும் தெரிவித்துள்ளது. (ற-ஜ-5

# 36 ஆண்டுகளின் பின்னர் தமிழர் கையில் பொலிஸ் திணைக்களம்

கொழும்பு, ஏப்.22
இலங்கையில் 36 ஆண்டுகளுக்குப் பின்னர், தமிழ் அரசியல்வாதி ஒருவரின் கட்டுப்பாட்டில், பொலிஸ் திணைக்களம் தற்காலிகமாகக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சட்டம், ஒழுங்கு பதில் அமைச்சராக, அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார். அதையடுத்தே, பொலிஸ் திணைக்களம், அமைச்சர் சுவாமிநாதனின் தற்காலிகக் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. இரண்டு வாரங்களுக்கு இவரிடம் இந்தப் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன பதவியில் இருந்த போது, 1980 ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி, உள்நாட்டலுவல்கள் அமைச்சராக, கே.டபிள்யூ தேவநாயகத்தை நியமித்திருந்தார். அப்போது, பொலிஸ் திணைக்களம், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வந்தது. அதற்குப் பின்னர், பொலிஸ் திணைக்களத்தை கட்டுப்படுத் தும் அமைச்சு எதுவும் கடந்த 36 ஆண்டுகளில் தமிழர் எவருக்கும் வழங்கப்படவில்லை.

தற்போது சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க வெளிநாடு சென்றிருப்பதாலேயே, தற்காலிகமாக பொலிஸ் திணைக்களம் அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன் வசம் வந்துள்ளது.

சாகல ரத்நாயக்க கடந்த மார்ச் மாதம் சீனா சென்றிருந்த போதும், சட்டம் - ஒழுங்கு பதில் அமைச்சராக சுவாமிநாதனே நியமிக்கப்பட்டிருந்தார். (ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கடைசித் தருணமும் தவறிப் போய்விடுமா?

புதிய அரசமைப்புத் திட்டமொன்றை வரையும் வகையில் இப்போது நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாறி சிலபல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இது இவ்வாறு இருக்கப் பல்வேறு சமூக அமைப்புக்களும் அரசியல் பிரிவுகளும் அரசியல் அமைப்பில் இடம்பெற வேண்டும் என்ற அடிப்படையில் வெவ்வேறு விதமான கருத்துக்களையும் திட்டவரைவுகளையும் முன்வைத்து வருகின்றன.

அந்த வகையில்தான் நாட்டின் நீண்ட கால அமைதியின்மைக்குக் காரணமாகியுள்ள தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்ற முயற்சியில் பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் இறங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதை முக்கிய விடயமாக சில கட்சிகள் கருதினாலும் அதைவிட முக்கியம் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் அதனை அரசமைப்பின் வாயிலாக நிலைநிறுத்துவதும் ஆகும். இனப்பிரச்சினைக்கு இப்போது காணப்படும் அரசியல் மற்றும் ஆட்சி நிர்வாக சூழல் மிகவும் சாதகமாக இருப்பதாகவே பலரும் கருதுகிறார்கள். இருந்தாலும் நாட்டின் பிரதான கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ அதனுடன் இணைந்து ஆட்சி அமைத்துள்ள ஐ.தே.கட்சியோ தமது தரப்பிலான விரிவான தீர்வுத் திட்டமொன்றை இன்னமும் மக்கள் முன்வைக்கவில்லை. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமையவே அதிகபட்ச அதிகாரப் பகிர்வு என்பதாக இவர்கள் கூறினாலும் அவையும்கூட தெளிவுபடுத்தவில்லை. ஆனால் தீர்வொன்றைக் கண்டுவிடவேண்டும் என்று அவை முனைந்திருப்பது வரவேற்கத்தக்கது. நாடாளுமன்றத்தின் மூலம் உருவாகக்கூடிய தீர்வானது நிரந்தரமாவதற்கு அது நாடாளுமன்றின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறுவது அவசியம். அதனால்தான் நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்படுவதையும் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள முக்கிய இன்னொரு தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்றிருப்பதையும் நல்லதொரு சூழ்நிலையைத் தோற்றுவித்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

இந்த நிலையில் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்துப் பலரும் பல கருத்துக்களை முன்வைத்து வருகிறார்கள். சமஷ்டி முறையிலான தீர்வே அவசியம் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படையாகக் கூறிவந்தாலும் அறுதியான தனது திட்டத்தை இனிமேல்தான் சமர்ப்பிக்கவிருப்பதாகத் தெரிகின்றது. ஏற்கனவே வடக்கு மாகாண முதலமைச்சர் முன்மொழிந்துள்ள தீர்வுத் திட்டத்துக்கு தென்னிலங்கையில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அண்மையில் வடக்குக்கு வருகை தந்திருந்தபோது வெளியிட்டிருந்த கருத்துக்களுக்கும் பொதுபல சேனாவும் வேறு அமைப்புகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. வடமாகாண முதல்வரைக் கைது செய்ய வேண்டும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தனிடமிருந்து பறித்து அதை சிங்களவர் ஒருவருக்குக் கொடுக்க வேண்டும் என்றுகூட சில அமைப்புக்கள் குரல் எழுப்புகின்றன.

தமிழர் பிரச்சினைக்கு தென்னிலங்கையின் தீர்வுத் திட்டம்தான் என்ன என்பதை அவர்கள் இன்னமும் தெளிவாக வெளியிடவில்லை. தமிழர் தரப்பிலான முன்யோசனைகளையும் ஏற்பதாக இல்லை. அவ்வாறாயின் எவ்வாறு தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படப் போகிறது என்று தமிழ் மக்கள் ஏங்கி நிற்கிறார்கள்.

பொதுவில் இந்த நாட்டின் தலைவர்கள்-அவர்கள் சிங்களவரானாலென்ன; முஸ்லிம்கள் மற்றும் தமிழர்களானாலென்ன வரப்பிரசாதமாக இப்போது கிடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சிறிய கட்சிகளும் இனவாதிகளும் கிளப்பி வரும் சலசலப்புகளை ஓரம்கட்டிவிட்டு இதில் நிரந்தரத் தீர்வைக் காண ஒரு முகமாக செயற்பட வேண்டிய தருணமிது. அதன் மூலம் நாட்டின் எதிர்காலத்தை மட்டுமன்றி சகல மக்களுக்கிடையிலுமான சௌஜன்யத்தையும் நிலைநாட்டியவர்களாவார்கள். அதன் மூலம் முழு உலகமுமே வியப்புடன் நோக்கும் நாடாக மிளிரச் செய்தவர்களும் ஆவார்கள்.
பஸ்கள் பலவற்றைத் தவற விட்டுள்ள நாம் இந்தக் கடைசி பஸ்ஸையாகினும் தவறவிடாமல் இருப்போமா?

# இதை சிங்கள மக்களிடம் சொல்லுங்கள்

எம்.ஐ.முபாறக்

தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைத் தேடி ஒருபுறம் ஆயுதப் போராட்டமும் மறுபுறம் அரசியல் போராட்டமும் என இரண்டு வழிகளில் தமிழர்கள் பயணத்தை ஆரம்பித்தனர்.
ஆயுதப் போராட்டம் 30 வருடங்களில் முடிவுக்கு வந்தபோதிலும் அரசியல் போராட்டம் முடிவுக்கு வரவில்லை. ஏனைய இனங்களைவிட தமிழர்கள் தேர்ந்தெடுத்த அரசியல் போராட்டம் வித்தியாசமானதாகும். ஒன்றிணைந்த - ஆரோக்கியமான அரசியல் போராட்டமாக அது அமைந்துள்ளது.
அவர்கள் ஒட்டுமொத்தமாக ஒரு குடையின் கீழ் - ஒரு கட்சியின் கீழ் ஒன்று திரண்டுள்ளனர்.
இதனால்தான் அவர்களின் அரசியல் போராட்டம் பல முள்ளதாகக் காணப் படுகின்றது. அந்தப் போராட்டம் சர்வதேச மயப்படுத்தப்பட்டமைக்கும் அந்த ஒன்றிணைந்த அரசியல் பயணமே காரணம்.

## தமிழர்களின் ஒன்றிணைவு

தமிழர்களின் பிரச்சினைகள் எப்படிப்பட்டவை - அவற்றுக்கு எப்படிப்பட்ட தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என ஒரே குரலில் சொல்லக் கூடியதாக இருக்கின்றது என்றால் அதற்குக் காரணம் தமிழர்கள் இவ்வாறு ஒன்றிணைந்து நிற்பதுதான்.
இந்த அரசியல் போராட்டம் மகிந்தவின் காலத்தில் வெற்றி பெற முடியாமற் போனாலும், வெற்றிக்கான அடித்தளத்தை அப்போது இட்டுத் தற்போதைய ஆட்சியில் வெற்றியை நோக்கி நகர்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.
அந்தவகையில், நல்லாட்சி என்ற சுலோகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட புதிய அரசு தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அக்கறை கொண்டு செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அவர்களின் பல பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம்.
வலிகாமம் வடக்கு மற்றும் சம்பூர் தமிழர்களின் காணிகள் விடுவிப்பு, ஆளுநர்கள் இடமாற்றம், தமிழ் அரசியல் கைதிகள் சிலரின் விடுதலை போன்றவற்றை அவற்றுள் சிலவாகக் குறிப்பிடலாம். அடுத்து, இந்த அரசு தமிழர்களுக்கு வேண்டியது அரசியல் தீர்வுதான். அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுக் கொண்டும் வருகின்றன.
ஜனாதிபதித் தேர்தலின்போதும் நாடாளுமன்றத் தேர்தலின் போதும் இந்த அரசால் பல வாக்குறுதிகள் இந்த நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டன. அரசமைப்பு மாற்றம், புதிய தேர்தல் முறைமை மற்றும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல் உள்ளிட்ட பல வாக்குறுதிகள் ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்டன.

> "தமிழர்களின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு ஏதுவாக அரசியல் தீர்வு வழங்காவிட்டால் தமிழர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறி இருப்பது அவர் தமிழர்களின் பிரச்சினையை ஆழமாக விளங்கி வைத்துள்ளார் என்பதையும், அரசின் அரசியல் தீர்வு முயற்சி சாத்தியமாகும் என்பதையும் எமக்குக் காட்டுகின்றது. ஆனால், இந்த உண்மை சிங்கள மக்களுக்கு ஆழமாக – விரிவாக எடுத்துக் கூறப்பட வேண்டியுள்ளது."

## புதிய அரசமைப்பு

அந்த வாக்குறுதிகளின் அடிப்படையில், புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதற்கான முயற்சியில் இந்த அரசு இப்போது ஈடுபட்டுள்ளது. அந்த அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டதாகவே அரசியல் தீர்வையும் கொண்டு வருவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.
30 வருட போரால் இந்த நாடு பல அழிவுகளைச் சந்தித்த விட்டது. இதுபோன்றதொரு பேரழிவு இந்த நாட்டுக்கு இனியும் ஏற்பட்டுவிடக் கூடாது.
மீண்டும் ஒரு போர் தேவை என்ற சிந்தனை தமிழர்களின் உள்ளங்களில் வளர்ந்துவிடக்கூடாது என்ற விடயத்தில் பலர் அக்கறை காட்டுகின்றனர்.
ஆனால், தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் இந்த நாடு மீண்டும் ஒரு அசம்பாவிதத்தை எதிர்நோக்கும் என்பது எல்லோரினதும் கருத்தாகும். அதை முதலில் உணர வேண்டியவர்கள் ஆட்சியாளர்கள்தான். அப்போதுதான் பிரச்சினைக்கான தீர்வு விரைந்து முன்வைக்கப்படும்.
ஆகவே, இந்த விடயத்தில் தனக்குப் போதிய தெளிவு இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடிக்கடி காட்டிக் கொள்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.
தமிழர்களின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளையும் தீர்ப்ப




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தற்கு ஏதுவாக அரசியல் தீர்வு வழங்காவிட்டால் தமிழர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவார்கள் என அவர் அண்மையில் கூறி இருப்பது அவர் தமிழர்களின் பிரச்சினையை ஆழமாக விளங்கி வைத்துள்ளார் என்பதையும், அரசின் அரசியல் தீர்வு முயற்சி சாத்திய மாகும் என்பதயும் எமக்குக் காட்டுகின்றது.

### சிங்கள மக்களுக்கு தெளிவு வேண்டும்

ஆனால், இந்த உண்மை சிங்கள மக்களுக்கு ஆழமாக – விரிவாக எடுத்துக் கூறப்பட வேண்டியுள்ளது.

அதிகாரப் பகிர்வுக்கும் நாட்டைப் பிரிப்பதற்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன என்பதை சிங்கள மக்கள் பரந்தளவில் முதலில் விளங்கி வைத்துக் கொள்ள வேண்டும். அது தொடர்பிலான விளக்கம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

> "30 வருட போரால் இந்த நாடு பல அழிவுகளைச் சந்தித்துவிட்டது. இது போன்றதொரு பேரழிவு இந்த நாட்டுக்கு இனியும் ஏற்பட்டு விடக்கூடாது. மீண்டும் ஒரு போர் தேவை என்ற சிந்தனை தமிழர்களின் உள்ளங்களில் வளர்ந்து விடக் கூடாது என்ற விடயத்தில் பலர் அக்கறை காட்டுகின்றனர். ஆனால், தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் மீண்டும் ஓர் அசம்பாவிதத்தை எதிர்நோக்கும் என்பது எல்லோரினதும் கருத்தாகும்."

அதிகாரப் பகிர்வுகள் வழங்கப்பட்டுள்ள நாடுகளின் நிலைமைகள் இப்போது எவ்வாறு முன்னேறி இருக்கின்றன என்று சிங்கள மக்களுக்கு நிச்சயம் விளக்கப்பட வேண்டும்.

அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டுள்ள இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் எவ்வளவு அமைதியாக இருக்கின்றன என்பதையும் அதிகாரப் பகிர்வே நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் என்ற உண்மையையும் இந்த அரசு சிங்கள மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். அரசியல் தீர்வு என்பது நாட்டைப் பிரித்து தமிழீழத்தை உருவாக்கக்கூடிய ஒன்று என்ற பரப்புரைகள் சிங்கள மக்கள் மத்தியில் இப்போது முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதால் இந்த பொய் பரப்புரையை அரசு உடனே முறியடித்தே ஆக வேண்டும்.

அரசியல் தீர்வு வழங்கப்படாவிட்டால் தமிழர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்துவார்கள் என்ற உண்மையை ஜனாதிபதி மாத்திரம் அறிந்திருந்தால் போதாது. சிங்கள மக்களும் உணர வேண்டும். அப்போதுதான் அரசின் தீர்வு முயற்சிக்கு சிங்களத் தரப்பில் இருந்து முட்டுக்கட்டை போடப்படுவதைத் தடுக்க முடியும்.

# பொருத்து வீடுகளை அமைப்பதில் அவசர முடிவு வேண்டாம்

போரால் இடம்பெயர்ந்து மீள்குடியமரவுள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதில் பெரும் சர்ச்சை உருவாகியுள்ளது. மீள்குடியேற்ற அமைச்சர் பொருத்து வீடுகள் தான் அமைத்து வழங்கப்படுமென ஒற்றைக் காலில் நின்று கூறுகிறார். பொருத்து வீடுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் அவற்றை அமைப்பதற்கான ஒப்பந்தமும் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் கையெழுத்தாகிவிட்டது என்றும் அவர் கூறுகின்றார். அமைச்சரின் இந்தக் கூற்றுக்கு வடக்கு மாகாண சபையும், முதலமைச்சர் விக்னேஸ்வரனும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளமை சர்ச்சைகளுக்கு வித்திட்டுள்ளது. கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனும் இந்த வீட்டுத் திட்டத்தை மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாடுகளில் உலோகத்தால் ஆன பொருத்துவீடுகள் அமைக்கப்படுவது வழமையான நடவடிக்கையாகவுள்ளது. அந்த நாடுகளின் சுவாத்தியம் பொருத்து வீடுகளுக்கு உகந்ததாகவுள்ளதே அதற்கான காரணமாகும். மேலும் மேலை நாட்டினர் வாஸ்து சாத்திரம் பார்ப்பதில்லை. ஆனால் எம்மவர்கள் வீடுகளை அமைக்கும்போது சாத்திர விதிகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

மேலும் உஷ்ண வலயத்திலுள்ள எமது நாட்டில் உலோகத்தால் ஆன பொருத்து வீடுகளில் மக்கள் வாழவே முடியாது. தொடர்ந்து 24 மணி நேரமும் குளிர்சாதன வசதிகள் இருந்தால் வெப்பத்தை ஓரளவு தவிர்க்க முடியும். ஆனால் இந்த வீடுகளில் குடியமரப் போகின்ற மக்கள் இதற்கான செலவுகளைத் தாங்கிக் கொள்ளவே முடியாது.

சாதாரணமாக 15 லட்சம் ரூபாவில் இரண்டு அறைகள் கொண்ட ஓட்டு வீடுகளை இங்கே அமைத்துக் கொள்ளலாம். ஓட்டு வீடுகள் வெப்பத்தை ஓரளவு தாக்குப் பிடிக்கக் கூடியன. இதைவிடுத்து அத்திபாரமே இல்லாத பொருத்து வீடுகளை அமைப்பது உசிதமானதாகத் தெரியவில்லை.

இந்த வீட்டுத் திட்டம் தொடர்பாக இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட மக்களுடனும், மாகாண சபையுடனும் கலந்தாலோசித்து இருக்க வேண்டும். ஆனால் எதுவுமே இடம்பெறவில்லை. தன்னிச்சையாகவே முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதை மீண்டுமொரு தடவை ஆலோசித்த பின்னரே இறுதி முடிவை எடுப்பதே பயன்தரக் கூடியதாக இருக்கும்.

*இடம்பெயர்ந்தவன்*

# மாணவர்களே இனியாவது சிந்தித்து நடவுங்கள்

பாடசாலை மாணவர்கள் சிலர் பயங்கர ஆயுதங்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் மிகவும் பாரதூரமானது. குடாநாட்டு இளைஞர்கள் எந்த அளவுக்குச் சீரழிந்து காணப்படுகின்றார்கள் என்பதற்கு இதுவொரு நல்ல உதாரணமாகும்.

குடாநாட்டின் கல்வித்தரம் வீழ்ச்சி அடைந்து செல்வதற்கான காரணம் இப்போதுதான் புரிகின்றது. பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள்களுக்கு அடிமையாகி அடிதடிகளில் இறங்கும்போது அவர்களிடமிருந்து சிறந்த கல்விப் பெறுபேறுகளை எவ்விதம் எதிர்பார்க்க முடியும்?

இத்தகைய மாணவர்கள் கெட்டழிந்து செல்வதற்கு அவர்களது பெற்றோரும் ஒரு காரணமாக இருக்கின்றனர். பிள்ளைகளுக்கு அதிக செல்லம் கொடுப்பதும், அவர்கள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுப்பதும் அவர்களின் எதிர்காலத்தையே பாழாக்கி விடுகின்றது. குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுப்பதால் தேவையில்லாத பிரச்சினைகளும், உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. தட்டாதெருச் சந்தியில் மோட்டார் சைக்களில் வந்த மாணவர்கள் தான் வாள்வெட்டில் ஈடுபட்டுள்ளனர். தற்போது கைது செய்யப்பட்ட மாணவர்களும் மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தியுள்ளனர். பிஞ்சிலே பழுத்த இவர்கள் நாட்டுக்கு எந்த வகையிலும் உபயோகமாக இருக்கப்போவதில்லை. வீட்டுக்குக்கூட இவர்கள் உபத்திரமாகவே மாறிவிட்டார்கள்.


இந்த மாணவர்கள் தமது பெற்றோர், உடன்பிறப்புக்கள், உறவினர்கள் எவரது ஆதங்கத்தையும் பொருட்படுத்துவதில்லை. தன்னிச்சையாக இயங்குவதில் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ் இனத்தின் இளம் சந்ததியைத் திட்டமிட்டுப் பாழாக்குவதில் சில தீயசக்திகள் ஈடுபட்டுள்ளன. இவர்களின் முயற்சி வெற்றி பெறுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது. போர் காரணமாக ஒரு சந்ததி அழிந்தபோது எஞ்சிய சந்ததியும் அழிந்து போவதைக் காண மனம் வேதனையில் துடிக்கின்றது.

மாணவர்களே, இளைஞர்களே தமிழ் இனத்தின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு இனியாவது திருந்தி நடவுங்கள்.

*மா. தர்மினி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொ...

# அருள்மிகு ஸ்ரீ அம்பல...

## திரிதள நூதன இரா...

## மஹா கும்பாபிஷேக ...

### ஆலய ...

விநாயகப் பெருமானுக்கு வருடா வருடம் ஆவணி மாதம் பூரணை தினத்தைத் தீர்த்த உற்சவமாகக் கொண்டு 15 நாள்கள் திருவிழா. அந்தத் திருவிழாவில் 5ஆம் நாள் அழகிய மஞ்சத்தில் ஆரோகணித்து வருவதும் பக்தர்களால் அந்த மஞ்சக்காட்சி கண்டு ஆனந்த பரவசம் அடைவதும் 13ஆம் நாள் சப்பரத் திருவிழாவும் அத்திருவிழாவைப் பார்த்து மகிழ்ச்சி மாறும் முன்னே மறுநாள் பஞ்சமுகவிநாயகா தேரில் பவனி வந்து திரிபுரதகனம் அத்தோடு பிராயச்சித்தமும், தீர்த்தோற்சவமும் மாலை துவஜ அவரோகணம் (கொடியிறக்கம்). ஆனால் அடியவர்களின் மனதில் இறக்கம் விநாயகப் பெருமானின் திருவிழா 15 நாள்களும் எவ்வளவு கெதியா ஓடிவிட்டதே என்ற ஏக்கம். இப்படியான ஒரு திருவிழாவைக் கண்டு கலந்து தரிசித்து அருள் பெற்றவாகள் திருவிழா முடிந்து விட்டதே என்று ஏங்கி விநாயகரின் மஹோற்சவத்தில் இருந்த மகிழ்ச்சி இப்பொழுது இல்லை. அது ஏன் அப்படி இந்த பொற்பதியான் மகிமைதான் என்ன. வாருங்கள். அடியவர்களே இந்த பொற்பதி விநாயகரின் அடியவர்கள் காட்டிய திருவருள் என்னும் படிகளிலே ஏறி படிப்படியாக இன்று உயர்ந்து வானளாவிய கோபுரங்களுடனும் அதற்கு மேலும் அழகு சேர்ப்பது போல் புதிய மணிக்கோபுரமும் வைரவா ஆலயமும் காட்சி தருவதோடு. அப்பேற்பட்ட கனி பெற்ற கணபதியின் வரலாறை ஒரு கணம் புரட்டிப் பார்ப்போம் வாருங்கள். அடியவர்களே சுமார் 70-80 ஆண்டுகளுக்கு முன்பு இப்பொழுது எங்கு பார்த்தாலும் வேத ஒலியும் நாத ஒலியும் அடியவர்களின் ஆரோகரா ஒலியும் கேட்ட இந்த கொக்குவில் பகுதியில் ஒரே பத்தைக் காடாகவும் மின்சாரமும் சனசஞ்சாரமும் இல்லாத தெரு விளக்குகளோடு அந்தணர்களோடு அடியவர்களும் செறிந்து வாழ்கின்ற ஒரு கிராமமாக இருந்த அந்த வேளையிலேதான் இந்தியாவிலிருந்து வேதங்களையும் ஆகமங்களையும் இங்கு இருக்கும் அந்தணாகளுக்குக் கற்றுத் தருவதற்காக வேத நாயகனாகிய நடராஜ விக்கிரகத்துடனும் கார்த்திகேச குருக்கள் இந்த கொக்குவிலிலே வந்து தற்பொழுது விநாயகா ஆலயம் இருக்கின்ற இந்த இடத்தில் பார்வதி அம்மா என்கின்ற ஒரு அம்மையாரிடம் அந்தணா சிறுவாகளுக்கு வேதங்களைக் கற்பிப்பதற்காகவும் இந்தியாவிலிருந்து கொண்டு வந்த நடராஜ விக்கிரகத்தைப் பிரதிஷடை செய்வதற்காகவும் ஒரு காணியை வேண்டி அந்தக் காணியில் பற்றைகளும் புற்களும் நிறைந்திருந்ததால் அதைத் துப்பரவு செய்யும் நோக்கத்துடன் அந்தணர்களும் அயலவாகளும் சோந்து பற்றைகளையும் புற்களையும் வெட்டி அகற்றும்போது பாறைகள் நிலைறந்திருந்த படியாலும் களைப்பு ஏற்பட்டதாலும் அப்படியே வேலைகளை நிறுத்திவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றுவிட்டார்கள். விநாயகா தன்னை அடியவர்களுக்குத்



### வாழ்த்துச் செய்தி

சகல வளங்களும் அமைந்த கொக்குவில் கிழக்கு பொற்பதியில் அருளாட்சி செய்யும் புற்பத்தை வீரகத்தி விநாயகரின் திரிதள நூதன இராஜகோபுர கும்பாபிஷேகம் காண வரும் அடியார்கள், பக்தர்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. வேண்டுவார் வேண்டுவதை உவந்தளிக்கும் வீரகத்தி விநாயகப் பெருமான் தன்னைத் தேடி வரும் அடியார்களின் துயர் நீக்கி அருள் சுரக்கும் புற்பத்தை வீரகத்தி விநாயகப் பெருமானின் திருவருட் கடாட்சம் சகலருக்கும் கிடைக்க வேண்டுமென அருளாசி வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். இன்று நிகழும் இராஜ கோபுர கும்பாபிஷேகம் சிறப்புற விக்கினம் தீர்க்கும் விநாயகரின் பாதாரவிந்தங்களை வணங்கி உளமாரப் பிரார்த்தித்து ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்**
**நல்லை ஆதீன முதல்வர்.**



### ஆசிச்செய்தி

ஓங்கார வடிவமாகிய எம்பெருமானை எண்ணிய காரியம் யாவையாயினும் எளிதில் முற்றுப்பெறத் தொழுது மேம்படுவது சைவ மரபு. இக்காரணம் பற்றியே வழிபடுபவர் இடர்கடி கணபதி எனத் திருஞானசம்சந்தர் அருளினார். அடியவர் இடர் நீக்கும் பெருமை வாய்ந்த விநாயகப் பெருமானை வழிபட்டு உய்வதற்கென ஈழத்திரு நாட்டில் பல்வேறு இடங்களில் திருக்கோயில்கள் எழுந்துள்ளன அவ்வகையில் ஆன்றோரால் போற்றிப் பேணப்பட்டதும் வரலாற்றுப் புகழ்பெற்றதுமான கொக்குவில் கிழக்கு பொற்பதி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் கோயிலும் ஒன்றாகும். இங்கு எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானுக்கு நூதன திரிதள இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் நிகழ்வதற்கு திருவருள் கூடியுள்ளமை எமக்கெல்லாம் மட்டிலா மகிழ்ச்சியாக உள்ளது. அந்த வகையில் எம்பெருமானுடைய இராகோபுர கும்பாபிஷேகத்தைக் காணும் அடியவர்களுக்கு விநாயகப்பெருமானின் திருவருள் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து விநாயகர் பாதம் பணிந்து நல்லாசி வழங்குகிறேன்.

**சிவஸ்ரீ தியாகராஜா குருக்கள்**
**ஆலய பிரதம குருவும் ஆதீன காத்தாவும்.**



### வாழ்த்துச்செய்தி

கொக்குவில் கிழக்கு பொற்பதி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய திரிதள நூதன இராஜகோபுர பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக பெருஞ்சாந்திப்பெருவிழா நடைபெற இருப்பதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன். மூலவரைத் தரிசிக்க முடியாத வேளைகளில் வானளாவிய இராஜ கோபுரத்தைத் தரிசிப்பதன் மூலம் மூலவனத் தரிசிக்கும் அதே பேற்றைப் பெறலாம் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வாறு இராஜகோபுர தரிசன மூலம் அரும்பயனை வழங்கக் கூடிய ஆலயங்கள் சிலவே உள்ளன. இவ்வரிய பயனை நடைபெறும் இராஜகோபுர கும்பாபிஷேகம் மூலம் நாம் எல்லோரும் அடையும் அரும்வாய்ப்பு இந்த ஆலயத்தில் விநாயகப்பெருமானின் திருவருளால் உருவாகியுள்ளது.

எனவே இந்த தேவ கைங்கரியத்துக்கு உதவிய அடியார்களுக்கும், கோபுரத்தை உருவாக்க உழைத்த ஆலய ஆதீன கர்த்தாக்களுக்கும் எல்லாம்வல்ல அருள்மிகு பொற்பதி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான் திருவருள் புரிவாராக என நல்வாழ்த்துக் கூறி மகிழ்கிறேன்.

**அ.கமலேஸ்வர சர்மா**
**நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்**



### ஆலய பிரதம குரு அவர்களின் ஆசிச் செய்தி



சக்திகள் எல்லாவற்றையும் விட இறை சக்தி தான் மேலானது. மகத்தானது என்பதைக் காட்டவும் கண்ணுக்கு தென்படும்போது அதையே தெய்வ சொரூபமாக எண்ணி வணங்கவும் அத்துடன் எட்ட இருப்பவர்களுக்கு கடவுளைப் பற்றி ஞாபக சிந்தனையை ஏற்படுத்துவதற்காகவும் கோபுரங்கள் எனப்படுகின்ற ஸ்தூலலிங்கங்கள் எழுந்து உயர்ந்து கம்பீரமாக வானளாவி நிற்கின்றன.

இருப்பினும் கோபுரத்தின் முக்கிய உறுப்புக்களாக சிகரம் ஸ்தூபி. களகூடம், கூத்ரநாசி ஆகியன கோபுரத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும். ஒரு ராஜகோபுரத்தின் அருகில் வந்து அதன் அமைப்பை ஆராய்ந்து பார்த்தால் சில அதிசயங்கள் புலப்படும். கணக்கற்ற வடிவங்கள் அதன் கண் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றுள் தேவர்களும், மானுடாகளும் அவற்றின் விதவிதமான வாழ்க்கை முறைக்கு ஏற்ப உருவாக்கப்படுபவாகள். அத்துடன் விலங்குகள், பறவைகள், சிற்றுயிர்கள் என்பனவும் அமைக்கப்பட்டிருக்கும். பிரபஞ்ச அமைப்பில் இவையாவுக்கும் இடமுண்டு என்பது கோட்பாடு. அதனை ஒரு ராஜகோபுரம் உருவகப்படுத்தி விளக்குகின்றது. கோபுரங்களில் நாகரிகம், அநாகரிகம் ஆகிய இரண்டு உருப்பித்துக் காட்டப்படுகின்றன.

இயற்கையின் நடைமுறையில் புறச்சின்னமாக விளங்குவது இராஜகோபுரம் என்றால் இயற்கையில் உள்ளவைகளை எல்லாம் அதன் மூலம் விளக்கியாக வேண்டும். இராஜகோபுரத்தின் வாலவ்கள் பொதுவாக ஒற்றைப்படை எண்ணில் அமைந்திருக்கும் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று இங்ஙனம் அதில அமைந்துள்ள வாயில்கள் பெருகிக் கொண்டே போகும். அத்தகைய வாயில்கள் தத்துவத்திறகு ஜாக்கிரத சொப்பனா சுஷுதி என்று மூன்று அவஸ்தைகளையும் மூன்று வாயில்கள உள்ள விடத்து விளக்கமாக அமைகின்றன. ஐந்து வாயில்கள் உள்ளவிடத்து ஐம்பொறிகளையும் ஏழு வாயில்கள் உள்ளவிடத்து மனம், புத்தி எனும்இன்றும் இரண்டு தத்துவங்களும் சேர்க்கப்பட்டு ஒன்பது வாயில்கள் உள்ள இடத்து சித்தம் அகங்காரம் என்னும் இன்னும் இரண்டு தத்துவங்களும் சேருகின்றன. இங்ஙனம் தம்முடைய அமைப்பில் உள்ள வெவ்வேறு தத்துவங்களுக்கு கோபுர வாயில்கள் சின்னங்களாக அமைகின்றன.

இந்த கோபுர நிர்மாணப் பணியில் கொக்குவிலில் வசிக்கும் மற்றும் வெளிநாடுகளிலும் வசிக்கும் அடியவர்களின் பங்களிப்பும் போற்றத்தக்கது. இந்தக் கும்பாபிஷேக நாளிலே கோபுர தரிசனம் கோடிபுண்ணியம் என்ற வாக்குக்கிணங்க இந்த கோபுர கும்பாபிஷேகத்தை கண்டுகளித்த விநாயகா அடியவர்களுக்கும் மற்றும் கோபுரத்தை குறுகிய காலத்தில நிர்மாணித்துத் தந்த கோபாலசிங்கம் ஆசாரியார் குழுவினர்(அராலி) அவர்களுக்கும் மற்றும் நாடு கடந்து கடல் தாண்டி தேசம் தாண்டி வாழுகின்ற சகல அடியவர்களுக்கும் விநாயகப் பெருமானின் அருள் பெற்று சகல செல்வங்களையும் வளங்களையும் நீண்ட ஆயுளையும் பெற்று வாழவேண்டும் என்று விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து மனம், மொழி, மெய்யால வணங்கி நல்லாசி கூறுகிறேன்.

**ஆலயநிர்வாகஸ்தரும் பரிபாலகருமாகிய**
**கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுரு வேதாந்த தீர்த்தர், விநாயக பூஜா துரந்தரர், பிரதிஷ்டா சிரோன்மணி, சத்யோயாத சிவாச்சாரியார், சிவஸ்ரீ. தியாக நடராஜக் குருக்கள்**

**அம்பாள்**
**களஞ்சியம்**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

**ஸ்ரீ மாரி அம்பாள்**
**களஞ்சியம்**
213.ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**குரு காட்வெயர்**
175, கரடிப்போக்கு சந்தி,
கிளிநொச்சி.

# கொக்குவில் பொற்பதி...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# …காக்குவில் கிழக்கு–பொற்பதி
# …பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய
## …ராஜகோபுர பஞ்ச குண்ட பக்ஷ பிரதிஷ்டா
# …பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்பிதழ்

## …லய வரலாறு

…தெரியப்படுத்துவதற்காகவோ என்னவோ அன்றிலிருந்து மழை பெய்து இரண்டு நாள்களுக்குப் பிறகு மழை ஓய்ந்தவுடன் அந்த இடத்தில் கற்கள் அகற்றுவது சுலபம் என்று எண்ணி எல்லோருமாகச் சேர்ந்து மண்வெட்டியால் கற்களை அகற்ற முயலும்போது மண்வெட்டி பட்டு தீப்பொறி பறக்க அது என்னவென்று எல்லோருமாகச் சேர்ந்து பார்க்கஅது ஒரு கருங்கல் முடிபோல் தெரியவே அதை எல்லோருமாகச் சேர்ந்து மேலே கொண்டு வந்து பார்த்தால் அது ஒரு விநாயகப் பெருமானின் திருவுருவம் என்று தெரிந்தது. உடனே அந்தணர்கள் அதை அறிந்து ஒரு குடில் அமைத்து விநாயகரை பிரதிஷ்டை செய்வது மட்டுமல்லாது ஏற்கனவே கொண்டு வந்த நடராஜர் விக்கிரகத்தையும் அதே இடத்தில் தெற்கு நோக்கி பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார்கள். சில காலத்துக்குப் பிறகு அடியவர்களும் அந்தணர்களும் சேர்ந்து ஆலயத்தைப் புதுப்பித்து பிரதிஷ்டை செய்து படிப்படியாக விநாயகப் பெருமானின் ஆலயம் நித்திய பூசைகள், திருவிழாக்கள், அலங்கார உற்சவங்கள், மகோற்சவங்கள் என்று மாறி இன்று தெற்கிலே தட்சணாமூர்த்தியும், மேற்கிலே மகாலட்சுமி, சந்தான கோபாலர் முருகனும், வடகிழக்கு மூலையில் பஞ்சமுக விநாயகருடன் சபையிலே சிவகாமி சமேத சிதம்பரரேஸ்வரர் சகிதம் விநாயகப் பெருமான். ஈசான மூலையில் வைரவப் பெருமானுடைய காவலிலும் வானளாவிய திரிதள நூதன கோபுரத்துடனும் பார்ப்பவர் கண்ணைப் பறிக்கும் பேரொளியாக விளங்குகின்ற பொற்பதி விநாயகருடைய அருள் வெள்ளம் பார் எங்கிலும் பரந்து வருகிறது. அருள் மழை பொழிகின்ற ஒரு ஆலயமாக இன்று திகழ்கின்றது. இது கொக்குவில் வாழ் அடியவர்கள் பூர்வ ஜென்ம புண்ணியபலனே ஆகும். ஆதியிலே புற்பதையில் இருந்து தோன்றியதால் புற்பதை விநாயகர் என்று விளங்கி வந்த ஆலயம் நாளடைவில் விநாயகர் அம்பலவாணருடன் உறைவதாலும் நடராஜர் பதிகளுக்கு தலைவன் ஆனபடியாலும் பொன்னம்பலத்தில் ஆடுகின்ற படியாலும் பொற்பதி அம்பலவாணர் என்றும் விநாயகரை புல்லுப்பதையில் மண்வெட்டி என்கின்ற கத்திபட்டு அடியவர்களுக்கு விநாயகரின் உருவம் தெரிந்த படியாலும் வீரகத்தி விநாயகர் என்றும் பெயர் வழங்கலாயிற்று. இதை ஒன்று சேர்த்தால் கொக்குவில் பொற்பதி ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம் என்று பெயர் புலப்படும். இதற்குச் சான்று ஆலயத்தின் மூல விக்கிரகத்தின் சிரசில் கத்தி பட்டு தழும்பு இன்றும் காணக் கூடியதாக உள்ளது. ஆலயத்தின் பிரதான கோபுர மணியில் பொற்பதி என்ற நாமம் பொறிக்கப்பட்டிருப்பதும் இதற்குச் சான்றாகும்.

**ஆலய நிர்வாகத்தரும் பரிபாலகருமாகிய**
**தியாகநடராஜக் குருக்கள் - பிரதிஸ்டாபிரதமகுரு.**



### வாழ்த்துச் செய்தி

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என் பதற்கேற்ப பொற்பதி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய திரிதள இராஜகோபுரம் அமைக்க எம்பெருமானின் திருவருள் கைகூடிய போது கொக்குவில் வாழ் மக்கள் மனதில் ஏற்பட்ட …னந்தம் சொல்லிடங்கா. அடியவர்களின் பேராதரவுடன் …ங்கை இந்திய சிற்பக்கலைஞர்களின் கைவண்ணத்தில் …ளவ அழகுற எழுந்து நின்று பக்தர்களை வரவேற்கும் …ஜகோபுரத்திற்கு இன்று மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் …விழா நடைபெறுகின்றது.

…கொக்குவில் கிராமத்தில் அற்புதம் நிறைந்த ஆனைமுக …த் திகழும் பெருமான், குடிகொண்டிருப்பது நாம் செய்த …ண்ணியம் எனலாம். ஆன்மீக மனநிறைவைத் தருகின்ற …ன்மைய சிறப்புமிக்க நிகழ்வுக்கு பங்களித்த அனைத்து அன் …ர்களுக்கும் பொற்பதியான் அருள் கிடைக்க எம்பெருமானை …ங்கி பிரார்த்திக்கின்றேன்.

**நா.நித்தியானந்தன்**
**(சமாதான நீதிவான்)**
**தலைவர் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்,**
**கொக்குவில்.**

### வாழ்த்துச் செய்தி

ஈழத் திருநாட்டின் வடபுலத்தில் சைவமும் தமிழும் தளைத்தோங்கும் யாழ்ப்பாண நன்நகரின் வடக்குத் திசையில் அமைந்துள்ள கொக்குவில் பொற்பதி எனும் புண்ணிய பதியில் வீற்றிருந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு புதிய திரிதள இராஜகோபுரம் அமையப் பெற்றமையை இட்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

எங்களுடைய நீண்ட நாள் கனவு கொக்குவில் வாழ் மற்றும் புலம் பெயர் வாழ் அடியவர்களின் பேராதரவுடனும் அமையப் பெற்றது நாம் செய்த பெரும் பாக்கியமாகும். இப்புதிய திரிதள இராஜகோபுரத்துக்கு இன்று மகாகும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா நடைபெறுவது கொக்குவில் வாழ் அடியார்களின் பெரும் புண்ணிய பலனாகும். இன் நன்நாளிலே அடியவர்களோடு இணைந்து எமது கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையத்தினராகிய நாமும் விநாயகரின் அருள் வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துத் தெரிவித்துக்கொள்வதோடு இப்பெரும் கைங்கரியத்துக்கு பங்களிப்புச் செய்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் பொற்பதியான் அருள் கிடைக்க எம்பெருமானை வேண்டி வணங்கி பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர்-**
**கொக்குவில் பொற்பதி**
**சனசமூக நிலையம்**

…நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை ஒரு வடிவுக்குள் கொணர்ந்து உருவநாமம் கொடுத்து வழிபட்டு பக்தி செலுத்துவது …ர்களாகிய எமது மரபாகும். பசுவின்பால் ஆக்கும் வடிவில் அதன் உடலெங்கணும் இரத்த வடிவில் பரந்து விளங்குகின்றது. ஆனால் …ழுதிர்ச்சி பெற்று பால் வடிவு கொண்டு முலைகள் வழியே வெளியேறுகின்றது. வேறு எந்த அங்கங்கள் மூலமும் வெளியேறுவதில்லை …த போன்று இறைவனும் உருக்கரந்த உலகெங்கணும் வியாபித்து உறையினும் திருக்கோயில்களிலே வெளிப்பட்டு …ரிகின்றான். எனவே ஊர்கள் தோறும் ஆலயம் அமைத்து வழிபாடாற்றி இறைவனின் அருளை மென்மேலும் பெறுவதற்காக …வாசலிலே இராஜகோபுரம் அமைத்து கும்பாபிஷேகம் நடைபெறுகின்ற இன்றைய நாளில்விநாயகப் பெருமானின் அருளும் கோபுர …ணமும் பெற்று வாழ நல்லாசி வழங்குகின்றேன்.

**இ.சி.இரகுநாதையர்**
**வாக்கிய பஞ்சாங்க அதிபர்.**

## மஹா கும்பாபிஷேகம்
## 22.04.2016 வெள்ளிக்கிழமை
## காலை 9.27 மணிமுதல் 10.27 மணிவரை



### கோபுர தர்சனம் பாப விமோசனம்

பொற்பதி விநாயகராலய கிழக்கு வாசல் இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற விக்னம் தீர்க்கும் விநாயகர் திருவருள் புரிவாராக. காரணாகமத்திலே " மஹா சதாசிவாக் யஸ்ய பாதஸ்தானம்து கோபுரம்" என்று வர்ணிக்கப்படுகிறது. ஒருவர் மேற்கேதலைவைத்துகாலைக் கிழக்கே நீட்டி படுத்திருந்தால் தலை ஸ்தானம் கர்ப்பக்கிரகமாகவும் பாதங்கள் கோபுரஸ்தானமாகவும் போற்றப் படுகிறது.12 வருடங்கள் ஒரு ஆலயத்தில் பூஜை நடைபெறவில்லையெனில் இறை சக்தி இராஜகோபுரத்தின் கலசத்தில் இருந்து திருவருள் புரியும். ஆகவே இராஜ கோபுரங்கள் ஆலயங்களுக்கு மிக அவசியம். பொற்பதி விநாயகராலய சிவாசார்யர் பக்தர்களுடைய நிதி பெற்று இராஜகோபுரம் அமைத்து மஹா கும்பாபிஷேகத்தையும் நடத்தி கொண்டிருக்கிறார். அவர் தம்பணி சிறப்புற பொற்பதி விநாயகர் திருவருள் புரிவாராக.

**சிவ ஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்.**



யாழ். குடாநாட்டில் பல பிள்ளையார் ஆலயங்கள் உள்ளன. அதில் அரசர்களாலும், செட்டிமார்களாலும், கிராம மக்களாலும், சிவப்பிராம்மணர்களாலும் உருவாக்கி வழிபாடு செய்துவரும் ஆலயங்கள் ஏராளம். அவற்றில் பொற்பதி வீதியில் அமைந்த சிதம்பர விநாயகருக்கு திரிதள ராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. ஒளவைக்கு கைலாயத்தைக் காட்டிய பிள்ளையார், நம்பிக்கையையும் ஞானத்தையும் வழங்கிய பிள்ளையார் இங்கே சங்குஸ்தாபனம் செய்து மூன்று மாதத்துக்குள் குடமுழுக்கு செய்கின்ற சித்தியை தந்தருளிய விநாயகர் இந்த தெய்வீக பணியில் ஈடுபட்டு தொண்டாற்றி வருகின்ற கோயில் குருக்கள் சிவஸ்ரீ நடராஜக் குருக்கள் அவர்களோடு இணைந்து திருவருள் பணிக்கு உதவிய பொற்பதி வாழ் மக்களும் அந்நிய நாட்டில் இருந்து நிதியுதவி, பொருளுதவி செய்த அன்பர்களும், ஆதரவாளர்களும், தொண்டர்களும், இளைஞர்களும் இப்பணியோடு இணைந்தவர் அனைவருக்கும் பொற்பதி விநாயகருடைய திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து கும்பாபிஷேகம் நல்லபடி நிறைவேற சொல்லின் செல்வர் சுந்தர ஆஞ்சநேயர் சுவாமியின் அருளை வேண்டி நல்லாசி கூறுகின்றோம்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்.
லோகா சமஸ்தா சுகினோபவந்து

**சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்**
**ஆதீன கர்த்தாவும் சிவாச்சாரியாரும்.**



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

கொக்குவிலில் பதிகொண்டு புற்பத்தை பிள்ளையார் என்னும் திருநாமம் சிறப்புற விளங்குவதோடு, இவ்வூரில் சிறந்த கல்விமான்களையும், பல அறிஞர்களையும் உருவாக்கி, தன்னை நம்பி வந்தவர்க்கு அருள்சுரந்து, அருள்பாலிக்கும் எம் பெருமானுக்கு, இவ்வூரில் அடியார்களது கைங்கரியத்தை குறுகிய காலத்தில் செவ்வனே சிறப்புற நூதன திரிதள இராஜகோபுர கும்பாபிஷேக பெருஞ்சாந்தி நடைபெற இருப்பது இவ்வூரினது மக்களுக்கும் அவரின் திருப்பணியை முன்னின்று உழைத்த அடியவர்களுக்கும் இன்னமும் எம்பெருமானை நினைந்து உருகும் புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கும் எல்லோரும் இன்புற்றிருக்க ஈழத்திருநாட்டின் அனைத்து மக்களும் ஷேமமாக வாழ விநாயகப் பெருமான் பாதங்களில் பணிந்து எனது ஆசி கூறுகிறேன்.

'ஸர்வே ஜனாஹா சுகினோ பவந்து"

**இறையணில் சந்திரசேகர ஜகந்நாதசர்மா (J.P.)**



### பிரதம சிற்பாசாரியாரின் வாழ்த்துச்செய்தி

அரிது அரிது மானிடராதல் அரிது அதனிலும் அரிது கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறப்பது அரிது என்ற ஔவை யாரின் வாக்குக்கு இணங்க இன்று நாம் எந்தக்குறையும் இல்லாமல் பொற்பதியானின் இராஜகோபுரத்தை எங்கள் குழுவினரால் நிர்மாணிப்பதற்கு ஆசி வழங்கியமைக்கு வேழ முகத்தானுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த இராஜகோபுரத்தை அமைப்பதற்கு முன் நின்று உழைத்த சைவப் பெரியார்களுக்கும் பொற்பதி வாழ் மக்களுக்கும் ஆனைமுகத்தானின் நல்லாசி கிடைக்க வேண்டும் என்றும், அத்துடன் இந்த இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற எனது நல்லாசியை வழங்கி மேலும் பொற்பதி வாழ் மக்கள் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து மென்மேலும் இவ்வாலயத்துக்கான தங்களின் திருப்பணியைத் தொடர்வதற்கு விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டி எனது நல்லாசியை நிறைவு செய்கின்றேன்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

**பிரதம சிற்பாசாரியார் அராலியூர் கந்தசாமி கோபாலசிங்கம்.**

…ர்

**பிரகாந்**
**போட்டோ கொப்பி சென்ரர்**
பலாலி வீதி, திருநெல்வேலி.

**பியானுகா சிற்பாலயம்**
கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**கரீன் ரேடர்ஸ்**
National Pvc
கருவப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

…தி சன சமூக நிலையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாக்கப்பட வேண்டிய மணற்காடு சவுக்குக்காடு

இன்று உலக புவி தினத்தை முன்னிட்டு இந்த ஆண்டுக்கான புவி தின இலக்கான வாழ்க்கைக்காக மரங்கள் எனும் தொனிப்பொருளின் அடிப்படையில் சவுக்குக் காடுகளின் பாதுகாப்பு மற்றும் துப் பரவுசெய்தல் எதிர்கால நடவடிக்கைக்கான பொறி முறைகளை உருவாக்குதல் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் சமூகக்கூட்டுப் பொறுப்புடனும் பங்கு தாரர்களின் பங்களிப்பினுடாக பாதுகாத்தல் என்பதை வலியுறுத்தி அதன் முக்கியத்துவத்தை வெளிக் கொணரும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

ஏ. குமார்

மணற்காடு பிரதேசம் யாழ். மாவட்டத்தின் வடமராட்சி கிழக்குப் பகுதியில் அமையப் பெற்றுள்ளது. இந்தப் பிரதேசம் சுற்றுச்சூழல் ரீதியிலும் சமூக பொருளாதார ரீதியிலும் முக்கியத்துமுடையதாக காணப்படுவதுடன் சுற்றுச்சூழல் ரீதியில் பாதுகாக்கப் படவேண்டிய எமது அரும் பெரும் இயற்கை வளமாக அமைகின்றது. அழ கிய மணல் சூழ்ந்த கடற்கரையோரம். மலைத்தொடர்களைப்போல் மணற் குவியல் அக்குவியலின் மேல் தாய் மகவைக் கையால் ஏந்துவதுபோன்று வானத்தை தொடும் வகையில் சவுக்குமரங்கள் மயில் தோகை விரிப்பது போன்று அடர்ந்து காணப்படுகின்றன. இப்பிரதேசம் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின் நிர்வாக பிரிவுக்குள் உள்ளடங்குகின்றது. அதாவது 1500 ஏக்கர் பரப்பில் மணற்காடு பொற்பதி ஆகிய இரு கிராமங்களை உள்ளடக்கி ஒரு பசுமை வலயமாகக் காணப் படுகின்றது. 1976 ஆம் ஆண்டு வனவளப்பாதுகாப்பு திணைக்களத்தினால் நடுகை செய்யப்பட்டது. ஆயினும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக் காலத்தில் சிறப்பாக விருத்திசெய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தது. இது மனிதனால் உருவாக்கப்பட்ட வளமாக இருந்தபோதிலும் இம் மாவட்டத்தின் பிரதான காட்டு வளங்களில் ஒன்றாக இது விளங்குகின்றது.



சவுக்கு மரங்கள் 1996 ஆம் ஆண்டிலிருந்து சாயான முறையில் பாதுகாக்கப்படாமல் இருந்துவந்ததுடன் விறகுக்காகவும் ஏனைய தேவைக் காகவும் வெட்டப்பட்டு வருகின்றன. இம் மரங்களின் அதிகளவான கழிவுகள் அகற்றப் படாமல் படை படையாக இரண்டு அடி உயரத்துக்கு குவிந்தும் பரந்தும் காணப் படுவதுடன் இலகுவில் தீ பற்றுவதற்கும் தீ பரவுவதற்கு மான வாய்ப்பைக் கொண்டுள்ளன. 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 12 தடவைக்கு மேல் தீ இடர் ஏற்பட்டு அதிகளவான பகுதிகள் அழிவடைந்துள்ளன. அத்துடன் இப்பகுதி இன்று பொருத்தமான பாதுகாப்பு நடைமுறைக்கு உட்படாமல் சாயான கவனிப்பின்றி கலாசார சீரழிவுகளுக்கு இடம்கொடுக்கும் பகுதியாகவும் விளங்கி வருகின்றது. எனவே இவ் வளத்தின் முக்கியத்துவத்தையும் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தை இப் பிரதேச மக்களிடையேயும் ஏனையவர்களிடையேயும் உணர்த்தி இந்தப் பிரதேச மக்களாலேயே இவை பாதுபாக்கப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி அவர்களை விழிப்பூட்டும் வகையில் இக்கட்டுரை வரையப்படுகின்றது.

### சுற்றுச்சூழல் ரீதியான முக்கியத்துவம்

மணற்காடு பௌதிக ரீதியில் ஒரு மணற்பாங்கான பிரதேசம். யாழ்ப்பாண தரைத் தோற்ற ரீதியில் வேறுபாடான பண்பு கொண்ட இயற்கையான மணற்பாங்குடன் கூடிய விசாலமான ஆழ்கடலுடன் அமைவு பெற்றுள்ளது. இக்கடல் நீச்சல் ஆனந்தமான படகுப்பயணம் போன்ற சுற்றுலாச் செயற்பாடுகளுக்கு பொருத்தமற்ற ஆபத்து நிறைந்த கடற்பகுதியாக காணப்பட்ட போதிலும், அழகிய மணற் பகுதிகொண்டதாக அமையப் பெற்றமை சிறந்த ரசனைக்குரியதாகவும் அதிக மக்களால் கவரப்படுவதற்கு காரணமாக விளங்குகின்றது. வெண்மை மற்றும் பழுப்பு மஞ்சள் நிறம் கொண்ட மணல் அவற்றுக்குப்பின்னால் ஆகாய நிறத்தில் வங்கப் பெருங்கடல் அதன் அலைமகள் கரையை அண்மிக்கும்போது பெரிய இரைச்சல் இவை அவ் இடத்தை நினைவு கொள்ளச் செய்யும் பண்புகளாகும்..

இலங்கையில் மணல் குவியல்கள் செறிவாக காணப்படும் அடையாளப்படுத்தப்பட்ட பகுதியாக வடமராட்சி கிழக்குப்பகுதி விளங்குகின்றது. பௌதிகச் செயன்முறைமூலம் உருவாக்கம் பெறும் இம் மணற்குவியல்கள் மலைத் தொடர்களைப் போல் அடுக்கடுக்காக ஒரு அடி உயரத்திலிருந்து 18 அடி உயரம் வரை காணப்படுகின்றது. இவை உவாநீர் உட்புகுவதைத்தடுப்பதற்கும் புயல் காலங்களில் கடல் அலைகளால் ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து கரையோரப்பகுதிகளைப் பாதுகாப்பதில் முக்கிய பங்குவகிக்கின்றன. மேலும், கரையோரப்பகுதிகளில் காணப்படும் மணல் குவியல்கள் மேற்படி தாக்கங்களிலிருந்து கரையோரச் சூழல் தொகுதியை பாதுகாப்பதனால் சிக்கலான கரையோரத்தாவரங்களின் விருத்திக்கு பங்களிக்கின்றன. மேலும், மண்ணாப்புக்காலத்தில் கரையோர சூழல் தொகுதியை பாதுகாக்கவும் மணல்வேறு இடத்துக்கு நகர்த்தப்படாமல் ஒரே பகுதிக்குள்ளேயே நீர்த்தேக்கம் போன்று செயற்படுவதற்கும் இவை உதவுகின்றன. மொத்தத்தில் மணற்காடு பொற்பதி ஆகிய கிராமங்களில் குடி யிருப்புப் பகுதிகளுக்கு கடல் நீர் உட்புகுவதை தடுப்பதற்கும் கரையோர சூழல் தொகுதியை பாதுகாப்பதில் இவ் மணற் குவியல்கள் முக்கிய பங்குவகிக்கின்றன. 1500 ஏக்கர் பரப்பளவில் வல்லிபுர ஆழ்வார் தீர்த்தமாடச்செல்லும் இடத்தின் வலது பக்கத்திலிருந்து பொற்பதி கிராமத்தில் நடுப்பகுதி வரை 8 கீலோமீற்றருக்கு பரந்து சவுக்குமரங்கள் காணப் படுகின்றன. மணற்காட்டுக் கிராமத்துக்குள் நுழையும் போது வலது பக்கத்தில் விக்ஸ் மரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவைமருத்துவாதியான மரங்களாகும். இன்று பெரிய இயற்கை காடாக மிளிர்ந்துள்ள சவுக்கம் மரம் ஒரு வறண்ட பிரதேச பயிராகும். இதன் விஞ்ஞானப் பெயர் கசுஅரினா ஆகும்.

இவை இலங்கைக் குரியதாவரமில்லை. இங்கு அறிமுகப் படுத்தப்பட்ட தாவரம்.

இது ஆஸ்திரேலியாவைச் சேர்ந்ததாகும். ஆஸ்ரேலியா பிலிப்பைன்ஸ் மலேசியா போன்ற நாடுகளில் அதிகமாகக் காணப் படுகின்றன. ஆயினும், இவை இன்று உலகின் பல நாடுகளிலும் கரையோரச் சூழல் தொகுதியல் பிரதான தாவரங் களாக விளங்குகின்றன. இவை மென்மையான சிறிய பகுதிகளை உள்ளடக்கிய (கூர்மையான) மரத்தினது தோற்றத்தையும் கூர்மையான இலையமைப்பைக் கொண்டது. ஒவ்வொரு வருடமும் தனது இலைகளை இழக்கும் தாவரமாகும். மேலும் இவை விரைவாக வளரும் இயல்புடைய என்றும் பசுமை மாற அழகிய தோற்றம் கொண்ட ஊசி யிலைகளைக் கொண்ட மரங்களாகும். 100 அடி வரை வளரக்கூடிய இவை மூன்று ஆண்டுகளில் பெரிய மரமாகி விடும் . காற்றலை மூலமாக விதைகள் கடத்தப்பட்டு, புதிய இணங்களை உருவாக்கும். அத்துடன் ஆழமான வேர்களைக் கொண்டதுடன் வறண்டபகுதிகளில் இயல்பாக வளரும் தாவரமாக இது விளங்குகின்றது.



பொதுவில் மணற்பாங்கான கடற் கரையோரப் பகுதியில் தாவரங்களின் வளர்ச்சியென்பது வரையறுக்கப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. கடுமையான வெப்பமும் மணல்சூடும் மனித ஆரோக்கியத்துக்கு ஒவ்வாத ஒன்றாகவே இருக்கும். பல கரையோரப்பகுதிகளில் வாழும் குடும்பங்கள் இதனை சகித்துக்கொண்டு வாழ்கின்றன. இவ்வாறான இடங்களில் அமையும் பெரிய நிழல் கொண்ட ஒரு மரம். அப்பகுதியின் முக்கியமாக இளைப்பாறுவதற்கான ஆறுதல் கொண்ட பகுதியாக இருக்கும். மணற் காட்டுப்பகுதி ஒப்பீட்டுரீதியில் அதிகவெப்பம் கொண்ட பகுதியாக இருக்கின்றன. வெப்பமும் மணல்சூடும் இப்பகுதியில் வாழும் மக்களிடையே பெரிய தாக்கத்தைச் செலுத்தி வருகின்றன. இவ்வேளை அப் பகுதியின் வெப்பத்தை சமநிலைப்படுத்தவும் குளிர்மையை ஏற்படுத்தவும் மழை வீழ்ச்சிக்கு பங்களிக்கும் ஒன்றாக சவுக்கு காட்டுப் பகுதி விளங்குகின்றமை அப் பிரதேசத்துக்கான சிறந்த வரப்பிரசாதமாகும். மேலும் இப் பிரதேசத்துக்கு கிடைக்கும் மழைநீரானது கடலைச் சென்றடையாமல் சிறந்த நன்னீர் வளமான இப் பகுதியின் வளத்தை வளப்படுத்துவதில் சவுக்குதாவரங்களும் மணலும் முக்கிய பங்காற்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணற்காடு பொற்பதி ஆகிய கிராமங்களில் சவுக்கு மரங்களிலிருந்து விழும் காய்ந்த இலைகள் மண்வளத்தை வளமாக மாற்றுகின்றது. மண்ணரிப்பையும் காற்றின் வேகத்தையும் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றன. மழை வீழ்ச்சிக்கும் அதீத வெப்பத்திலிருந்து அப் பிரதேச சூழலைப்பாதுகாக்கவும் உதவுகின்றன.

மணற்காட்டுக் கிராமத்துக்குள் உள்நுழையும்போது வலது இடது பக்கத்தில் பெரிய பள்ளமான பகுதி காணப்படுகின்றது. ஆரம்பத்தில் யாழ்ப்பாண கட்டுமானத் தேவைக்கான மணல் இப்பகுதிகளிலிருந்து அதிகளவில் அகழப்பட்டதனால் இந்தப் பெரிய பள்ளம் ஏற்பட்டது. வட கீழ் பருவப்பெயாச்சிக் காற்று கால மழைவீழ்ச்சியின் போதும் ஏனைய மழைவீழ்ச்சியின் போதும இப்பகுதி நீர் நிரம்பிக்காணப்படும். இவை பெரிய நீர்த்தேக்கம் போன்று காட்சியளிக்கும். இவை பெருமளவான வதிவிடப்பறவைகள் ஒன்றுகூடுவதற்கும் அவற்றின் இருப்பிடமாகவும் அமைகின்றன. மீன்கொத்தி, சிறிய கறுப்புவெள்ளை மீன்கொத்தி, மைனா, கொக்கு குளத்துக் கொக்கு, செம்பருந்து, சிவப்பு மூக்கு, ஆட்காட்டி, குயில், பணங்காடை ,நீலவால் பஞ்சுருட்டான் சிறிய பச்சை பஞ்சுருட்டான் ஆகிய பறவைகள் இப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. காலை மாலை நேரங்களில் இப்பறவைகளின் துடிப்பான செயற்பாடுகள் ஒன்றுகூடுதல் என்பன கண்கொள்ளாக் காட்சியாகும். நீர்ப்பகுதியல் உணவருந்துவதும் சவுக்கு மரங்களில் ஓய்வெடுப்பதும் கண்கொள்ளாக்காட்சியாகும். இது சிறந்த மாலை நேர பொழுதுபோக்காகவும் சூழலியல்சார் சுற்றிலாச் செய்பாடாகவும் விளங்குகின்றது.

பளிங்கு போன்ற அழகிய மணல் மேடுகள் அதன்மேல் எழுந்து நின்றும் சாய்ந்து நித்திரை செய்யும் சவுக்கு மரங்கள் என்றும் பச்சைப் பசேலான காட்சி. அதனைச் சுற்றி நீர்த்தடாகம் அதில் பறவைக் கூட்டங்களின் நடனங்கள் இத்தகைய காட்சியை ஒருங்கே இரசிக்கும் மனப்பக்குவமே தனி. இதனை வழங்கும் உன்னதமான இடமாக இப்பிரதேசம் விளங்குகின்றது.

இதேபோன்று இப்பகுதியில் சிவப்பு மஞ்கள் மண்ணிற நிறங்களை உள்ளடக்கி மூன்று தொடக்கம் ஐந்து வகையான வண்ணத்துப் பூச்சியினங்கள் வாழ்கின்றன. அழகிய பச்சை சவுக்கு மரங்களுக்கு மத்தியில் இங்கும் அங்குமாக மாறி மாறி பறக்கும் வண்ணத்துப் பூச்சிகளின் அழகே தனியாகும். இத்தகைய சவுக்கு மரங்கள் 2004 ஆம் ஆண்டு நிகழ்ந்த பெரிய இடரான சுனாமி இடரின் போது அலை உள்வரு கையை எதிர்த்து நின்று ஏனைய உட்பகுதிகள் பாதிக்கப்படுவதை தடுத்து நிறுத்தியமை முக்கிய அம்சமாகும்.

இப் பகுதி பௌதிக ரீதியில் மணற்பாங்கான பகுதியாக விளங்குவதால் சிறந்த நன்னீர் வளத்தை கொண்ட இடமாக விளங்குகின்றது. யாழ். மாவட்டத்தின் பிரதான நன்னீர் மூலங்கள் கொண்ட பகுதிகளில் ஒன்றாக விளங்கும் இப்பிரதேசம் செறிவற்ற குடியிருப்புக்களைக் கொண்டிருப்பதாலும், குறைந்தளவிலாக குடியிருப்புக்களை கொண்டிருப்பதனாலும் செறிவான விவசாய நடவடிக்கைக்கு பொருத்தமற்ற பகுதியாகவும் விளங்குவதனால் நிலத்தடி நீர் மாசுபடுதவற்கான மிகவும் குறைந்த சந்தர்ப்பத்தைக் கொண்டபகுதியாக விளங்குகின்றது.

மணற்காட்டுக்குச் செல்லும்போது முதலில் ஏராளமான பனைமரங்கள் காணப்படுகின்றன. இவை கூட மாவட்டத்தின் இயற்கை வளத்தை பிரதிநிதித்துவம் செய்வதுடன் அதிகளவில் பாதுகாக்கப்படும் பிரதேசமாகவும் விளங்குகின்றது. இவ்வகையில் மணற்காடு சவுக்குக் காட்டுப்பிரதேசம் மூன்று வேறுபட்ட சூழல் தொகுதிகளைக் கொண்டு காணப்படுகின்றது. அதாவது மணல்சார்ந்த சூழல் தொகுதி, மற்றையது சவுக்குகாடு சார்ந்த சூழல் தொகுதி ஏனையது நீரும் பறவைகள் சார்ந்த சூழல் தொகுதி இவற்றையும் பனைவளம் சவுக்கம் காடு மணல்பகுதி கடல் என நான்கு வகையான பௌதிக மற்றும்உயிரில்பண்புகளையும்கொண்டு ஒரு தனித்துவமான சூழலியல் பகுதியான தன்னை அடையாளம் காட்டி நிற்கின்றது.

### சமூக பொருளாதார ரீதியான முக்கியத்துவம்

மணற்காடு மற்றும் பொற்பதி கிராமங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தின் மீன்பிடி உற்பத்தியல் பிரதான பங்கு வகிக்கின்றன. இம் மாவட்டத்தின் ஆழ்கடல் மீன்பிடியில் முக்கியத்துவம் பெறும் இப்பிரதேசம். பொருளாதார ரீதியில் பெறுமானம் கொண்டபகுதியாகவும் விளங்குகின்றது. இப்பகுதியிலுள்ள பெருமளவான குடும்பங்கள் மீனவக்குடும்பங்களாகும். பாரை, திருக்கை, ரியுனா அறக்குளா, சூடை, கீரை, நெத்தலி, விளை, கும்பிளா, நண்டு போன்ற மீன்கள் அதிகளவில் பிடிக்கப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி இடரினால் கடற்கரையோரங்களில் வாழ்ந்த அதிகளவான மீனவக் குடும்பங்கள் உயிரிழந்ததுடன் அவர்களது சொத்துக்கள் மீன்பிடி உபகரணங்கள் அழிவடைந்தன. இடரின் பின்னரான மீள்கட்டுமானம் மூலம் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் வீட்டுவசதிகள் செய்து கொடுக்கப்பட்டதுடன் மீன்பிடித்துறையும் வளர்ச்சியடைந்து வருகின்றது. இங்கு பிரபல்யமான கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று உள்ளது. அத்துடன் மணலால் மூடப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றும் உள்ளது. அழகிய கடல் மணல் பகுதி சவுக்கம் காடு. மேற்கூறிய அம்சங்களும் ஆரம்பக் காலம் தொட்டு இன்று வரை சிறந்த சுற்றுலா தலத்துக்கான அடையாளத்தைப் பெறுவதற்கு வழி செய்கின்றன.

அழகிய இயற்கைச் சூழலில் அமைவு பெற்ற கிராமம், உட்கட்டுமானத்துறையில் பின்தங்கிய நிலையிலுள்ளது. வரையறுக்கப்பட்ட அளவிலேயே கல்வி வசதி காணப்படுகின்றது. சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் செயற்றிறன் கொண்டதாக இங்கு இருக்கின்றன. சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்றவேளை அதற்கெதிராக வலுவாக நின்று குரல்கொடுத்த மக்கள் இவர்களாவர். தமது பகுதி சூழலின் மீது அக்கறை கொண்டவர்களாக விளங்கும் இவர்கள் சவுக்கம் காடுகளில் தீ ஏற்படுவதை கட்டுப்படுத்துவதற்கு தவறி விடுகின்றனர்.

இப்பகுதியில் காணப்படும் மணல் வளம் மிகச்சிறந்த பொருளாதாரப் பெறுமதி கொண்டது. யாழ். மாவட்டத்தின் கட்டுமானத் துறையில் மணலுக்கான கேள்வியை ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை பூர்த்தி செய்த பெருமை இப் பிரதேசத்தைச் சாரும். ஆயினும் கட்டுப்பாடற்ற மணல் அகழ்வு இப்பகுதிகளில் பெரிய சூழலியல் சவாலை ஏற்படுத்தியுள்ளது. மணல் மூலம் பெறப்பட்ட வருமானம் எதுவும் இப்பகுதிகளின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படவில்லை.

இங்கு காணப்படும் சவுக்கு மரங்கள் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடிய சிறந்த பொருளாதாரப் பெறுமதி கொண்டவையாகும். ஆரம்பக் காலம் தொடக்கம் இன்றுவரை கிறிஸ்மஸ் பண்டிகைக்காலங்களில் பல்வேறு பகுதிகளுக்கும் சவுக்கு இலைகளுடன் கூடிய கிளைகள் விற்பனை செய்யப்படுகின்றன. இதன்மூலம் இப்பகுதி மக்கள் வருமானங்களைப் பெறுகின்றனர். கட்டுமான மற்றும் விறகுத்தேவைக்கும் இச்சவுக்கு மரங்கள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சூழலியல்சார் சுற்றிலாவுக்கான மிகச்சிந்த இயற்கை வளமாக இவை காணப்படுகின்றன. ஒரு பக்கம் அழகிய கடற்கரை நீச்சலுக்கு ஆபத்தான கடலாக காணப்பட்ட போதும், அவை மணல்சூழ்ந்த பகுதியாக அமைந்தமை. மாலை நேரங்களில் சிறுவாகளின் மணல்விளையாட்டுக்களுக்கும் உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப்பயணிகள் ஓய்வைக்கழிப்பதற்கும் வாய்ப்பை வழங்குகின்றன. யாழ் மாவட்டத்தின் பிரதானமான சுற்றிலா மையமாக அடையாளப்படுத்தப்பட்ட இப்பகுதியின் கடற்கரைகளில் உள்ளூர் மக்களும் வெளியூர் மக்களும் மணல்வீடு கட்டி மணலில் விளையாடிய எத்தனையோ அருங்கதைகளை அப் பகுதி இன்றும் ஞாபகப் படுத்துகின்றன. எத்தனையோ மக்களின் கால்த் தடங்களை சுமந்த மண் தலைப்பகுதியில் கடல் நீரையும் மணலையும் இடுப்புப்பகுதியில் இயற்கை வனத்தை ஆடையாக அணிந்தும் கால்ப்பகுதியில் பனை வளத்தையும் கொண்டு ஒரு சூழலியல் கிராமமாக மிளிர்ந்து நிற்கின்றது.

> இலங்கையில் மணல் குவியல்கள் செறிவாகக் காணப்படும் அடையாளப் படுத்தப்பட்ட பகுதியாக வடமராட்சி கிழக்குப் பகுதி விளங்குகின்றது. பௌதிகச் செயன்முறை மூலம் உருவாக்கம் பெறும் இம் மணற் குவியல்கள் மலைத் தொடர்களைப்போல் அடுக்கடுக்காக 1 அடி உயரத்திலிருந்து 18 அடி உயரம் வரை காணப்படுகின்றது. இவை உவர்நீர் உட்புகுவதைத் தடுப்பதற்கும் புயல்காலங்களில் கடல் அலைகளால் ஏற்படும் பாதிக்கப்படுவதிலிருந்து கரையோரப்பகுதிகளைப் பாதுகாப்பதில் முக்கிய பங்குவகிக்கின்றன.

இன்றுவரை இப்பகுதி சவுக்குகாடு பொருத்தமான சூழலியல்சார் செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படாத ஒன்றாக விளங்குகின்றது. கலாசார சீரழிவுகளுக்கும் மது அருந்துவதற்குமான இடமாக தற்போது மாறியுள்ள இக்காட்டுப்பகுதியின் பல பகுதிகள் இன்றும் மனித கால்கள் படாத இடமாக இருக்கின்றன. பொற்பதி கிராமத்தின் உயர்ந்த மணல்மேடுகளில் ஏறிநின்று பார்க்கும் போது மலைத்தொடர்களைப்போல் தொடர்ச்சியான மணற்குவியல்கள் தொலைவில் அழகிய நீலக்கடல் வான் உயர்ந்து நிற்கும் அழகிய பச்சை சவுக்கு மரங்கள் வர்ணிக்கமுடியாத மிகச் சிறந்த இயற்கைக் காட்சியாகும். சிறுவர்களின் மணல்விளையாட்டுக்கள் (Children plays on the sand), முகாம் அமைத்து இயற்கையை இரசித்தல் (Campaign) இயற்கை நடை (Nature trail) பறவை மற்றும் வண்ணத்துப்பூச்சியினங்களைப் பார்த்தல் (Bird watching and Butterfly watching)பாரம்பரிய மீன்பிடி கிராமங்களை தரிசித்தல்( visiting to a traditional fishing village) கலாச்சார முக்கியத்துவமுடைய தேவாலயங்களை தரிசித்தல்( visiting to culturally im portant church) அழகிய கடற்கரையை இரசித்தல் (enjoying beach scenery ) போன்ற பல்வேறு சூழிலயல்சார் சுற்றிலா செயற்பாடுகளுக்கான ஒரு இதய பூமியாக மணற்காடு பொற்பதிக்கிராமம் விளங்குகின்றது. அப்பகுதியை நிர்வகிக்கும் மருதங்கேணி பிரதேச செயலகம் ஒரு சூழலியல்சார் பிரதேச செயலகமாக விளங்குகின்றது.

இவ்வாறு சிறப்புமிக்க இப்பிரதேசம் வெப்பநிலை அதிகரிக்கும் காலங்களிலும் சில மக்களின் தீயசெயற்பாடுகளாலும் அடிக்கடி தீப்பற்றி எரிகின்றன. இதனால் இப்பகுதி மாவட்ட இடர் முகாமைத்துவ அலகின் அவசரநிலைக்கான இடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மருதங்கேணி பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், இடர் முகாமைத்துவ இணைப்பு அலகு ஆகியவற்றின் கரிசனைக்குரிய பகுதியாகவும் முன்தயார்ப்படுத்தலுக் கான பகுதியாகவும் விளங்கிவருகின்றது. சவுக்கு மரங்கள் தீப்பிடித்து அழிவடைவது மிகச் சாதாரண விடயமாகிவிட்டது. சவுக்கின் காய்ந்த கூர்மையான இலைகள் விதைகள் காய்ந்த பட்டைகள் இலகுவில் தீப்பற்றும் இயல்பையுடையதுடன் இலகுவில் தீ பரவலடைந்து அப் பகுதி முழுவதையும் அழிப்பதற்கான தன்மையையும் கொண்டுள்ளன. இத்தகைய தன்மை அதிக தடவைகள் தீ பிடித்தலை ஏற்படுத்திய பல ஏக்கர்கள் அழிவடைவதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளன. கடந்த வாரம் இடம்பெற்ற தீயின்போது நான்கு ஏக்கர் பகுதி முற்றாக அழிவடைந்துள்ளன. அண்மைய பதிவுகளின்படி 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 12 தடவைகளுக்கு மேல் தீ இடர் ஏற்பட்டுள்ளது.

பொருளாதாரப் பெறுமதிகொண்ட இச்சவுக்கம் காட்டைப் பாதுகாப்பதற்கான கண்காணித்தல் நடவடிக்கைகள் சாயான முறையில் முன்னெடுக்கப்படவில்லை. இத்தகைய சூழல் முக்கியத் துவமுடைய பகுதி எந்தவித பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி கவனிப்பாரற்று விடுவது கவலைக்குரியது. பொருளாதாரப் பெறுமதி கொண்ட இவ் வளத்தை தற்போதய சந்ததியும் எதிர்காலச் சந்ததியும் நன்மை பெறும் வகையில் பாது காப்பதற்கு பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கப்படுகின்றது. இதனைப் பாதுகாப்பதற்கான பிரதான பங்காளர்கள் இப்பிரதேச மக்கள் இவர்களே. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பாதுகாக்க முன்வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜகுருவும் தெனாலிராமனும்

விஜயநகரம் வந்து சேர்ந்த தெனாலிராமன் தனது பேச்சுத் திறமையால் ஒருவரை நண்பனாகப் பிடித்து, அவர் வீட்டில் விருந்தாளியாகத் தங்கிக் கொண்டான்.

எப்படியும் அரசவை சென்று அரசரிடம் பணியாளனாகச் சேரவேண்டும் என நண்பரிடம் கேட்டான். "நீங்கள் அரண்மனையில் அரசரைக் காண வேண்டுமானால் அதற்கு ராஜகுரு தத்தாச்சாரியாரின் பரிந்துரை வேண்டும். எனவே தத்தாச்சாரியாரை அவரது இல்லத்தில் சென்று பாருங்கள்"- என்றார்.



தெனாலிராமன் தத்தாச்சரியாரைக் காண அவரது இல்லத்துக்குச் சென்றான். அங்கு ராஜகுருவைக் காணப் பலர் காத்திருந்தார்கள். ராஜகுருவின் சீடனிடம் தன் எழுதிய நகைச்சுவைக் கவிதை ஒன்றைத் தந்து அவரைக் காண வேண்டும் எனக் கொடுத்தனுப்பினான். நகைச்சுவைக் கவிதையைப் படித்த ராஜகுரு தெனாலிராமனின் அறிவாற்றலைக் கண்டு வியந்தார். இத்தகைய அறிவுள்ளவன் அரசவைக்கு வந்தால் தனது மதிப்புக் குறைந்துவிடும் எனத் தோன்றியது. உடனே சீடனிடம் இப்போது காண வசதியில்லை. ஒரு வாரம் கழித்து வரச் சொல் எனக் கூறி அனுப்பினார்.

தெனாலிராமன் இப்படிப் பலநாள்கள் தொடர்ந்து அலைந்து கொண்டிருந்தான். ராஜகுரு தத்தாச்சாரியாரைச் சந்திக்க முடியவில்லை. ஒரு நாள் இன்று எப்படியும் ராஜகுருவைச் சந்தித்தே ஆகவேண்டும் என முடிவுசெய்தான் ராமன். சீடர்களைத் தள்ளிவிட்டு ராஜகுரு அமர்ந்திருந்த அறைக்குள் நுழைந்து ராஜகுருவின் கால்களில்" விழுந்து வணங்கியபடி "நான்தான் தெனாலிராமன்" - என்றான்.

ராஜகுரு ஏளனமாகச் சிரித்தார். "அந்த முட்டாள் நீதானா? நல்லவேளை! உன் கவிதைகளை நான் பார்த்ததால் உன் தலை தப்பியது. அரசரிடம் இந்தக் கவிதைக் கொடுத்தால், தாய்மொழியை இப்படிக் கவிதை என்ற பெயரால் கொன்ற உன்னை கொன்றிருப்பார். நான் இரக்கத்தோடு சொல்லுகிறேன். இன்றே இப்போதே இந்த நகரத்தை விட்டுச் சென்றுவிடு" எனக் கூறினார்.

தெனாலிராமன் ராஜகுருவின் கெட்ட எண்ணத்தைப் புரிந்துகொண்டு முதலில் அரண்மனையில் சேரவேண்டும். பிறகு இந்த ராஜகுருவைச் சரியான நேரத்தில் சரியானபடி பாடம் புகட்டவேண்டும் என முடிவு செய்தபடி திரும்பினான். அடுத்து அரண்மனைக்குச் சென்று அரச சபைக்குச் செல்வது எப்படி எனச் சிந்தித்தான் தெனாலிராமன்.

அரண்மனை வாசலுக்கு வந்த தெனாலிராமன் வாயில் காப்பவனிடம் அரச அவைக்கு எப்படிச் செல்வது என்றான். காவலன் தடுத்து நிறுத்தியபடிமுன் அனுமதியற்றவர்களை உள்ளே செல்ல அனுமதிக்க முடியாது என்றான்.

"நான் ராஜகுருவின் அனுமதியோடுதான் வந்தேன். இந்து அரச சபையில் தன்னைச் சந்திக்கும்படிக் கூறினார்" என்றான்.

ராஜகுரு வரச் சொன்னார் என்றதும் தலை வணங்கியபடி காவலர்கள் வழிவிட்டனர். ராஜ கம்பீரமாக நடந்த தெனாலிராமன் அரச சபைக்குள் நுழைந்து கூட்டத்தோடு கூட்டமாக நின்று கொண்டான்.



## வரலாற்றில் இன்றைய தினம்

1500 - போர்த்துக்கேய கடலோடி பெட்றோ அல்வயர் கபிரல் பிரேஸிலில் தரையிறங்கினார்.

1622 - ஓர்முஸ்ஸை கிழக்கிந்திய கம்பனி கைப்பற்றியதையடுத்து ஹோர்முஸ் தீவுக்குள் மீதான போர்த்துக்கேயரின் கட்டுப்பாடு முடிவுக்கு வந்தது.

1912 - சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சியின் குரல் என வர்ணிக்கப்படும் பிராவ்டா தனது வெளியீட்டை செயின் பீற்றர்ஸ் பேர்க்கில் தொடங்கியது.

1930 - ஐக்கிய இராஜ்ஜியம் ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகியன நீர்மூழ்கிக் கப்பல் சண்டையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கப்பல் கட்டுவதை வரையறை செய்யும் லண்டன் கடல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1948 - அரபு - இஸ்ரேல் போர் இஸ்ரேலின் பெரிய துறைமுகமான ஹைபா, அரபுப் படைகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

1970 - புவிதினம் முதன்முதலாகக் கொண்டாடப்பட்டது.

1972 - வியட்நாம் போர் வியட்நாம் மீதான அமெரிக்க குண்டு வீச்சு அதிகரித்த அதேவேளை லொஸ்ஏன்ஜஸ் நியூயோர்க் நகர் மற்றும் சான்பிரான்ஸிஸ்கோவில் வியட்னம் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தப்பட்டன.

1983 - ஹிட்லரின் டயறிகள் சில கிழக்கு ஜேர்மனி சிதைவுகளிடையே கண்டு பிடிக்கப்பட்டதாக ஜேர்மன் சஞ்சிகை ஸ்ரேர்ண் தகவல் வெளியிடப்பட்டது.

1992 - மெக்ஸிக்கோ தொடர்குண்டு வெடிப்பில் 206 பேர் சாவு; 500 பேர் வரை காயம்; 15,000 பேர் வீடிழப்பு.

1997 - அல்ஜீரியாவின் கவுச் ஹெமிஸ்ற்றில் 93 கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1997 - சந்திரிகா - ரணில் உடன்படிக்கையில் நம்பிக்கை இல்லையென தொண்டமான் பி.பி.சிக்குத் தெரிவிப்பு

2002 - சமாதான முயற்சிகளை எதிர்த்து பிக்குமார் அலரி மாளிகை நோக்கிப் பேரணி. பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....




உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் இந்தப் பகுதியில் வெளியிடப்படும்.



செ.தபிரா,
புனித நீக்கிலார் முன்பள்ளி மிருசுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாம் ரமேஷ்குமார்

# பசுவதை ஒழிப்போம்
## எம் பரமனை நினைப்போம்

ஈழத்தில் சைவ வாழ்க்கை என்பது இறைவனின் அம்சங்களோடு இணைந்து போகின்ற ஒன்றாகவே எப்போதும் இருந்து வந்துள்ளது. அத்தகு இறை அம்சங்களே மனிதனின் அனுபவ வாழ்க்கை ஊடாக அவன் ஆன்மாவைத் திறக்கச் செய்யும் ஓர் அஸ்திரமாக இன்றும் பிரகாசிக்கின்றன.

அதனால்தான் ஒல்லாந்தர், போர்த்துக்கீசர் மற்றும் பிரித்தானியர் என்று பல அந்நிய நாட்டுப் படைகள் வந்தும் சைவத்துக்கு எதிராகச் செயற்பட்டும் சைவத்தை ஈழத்தவர் மனங்களில் இருந்து அவர்களால் அகற்ற முடியவில்லை. அது ஈழத்தவர் மூச்சிலும் ஆன்மாவிலும் கலந்து என்றோ கர்மயோகமாக மாற்றப்பட்டு விட்டது.

புனித சைவர்கள் வீரத்தமிழனாய் அன்று தொட்டு இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கும் பூமி, உலகில் ஈழம் மட்டும்தான். அது சைவத்தின் கூடாரம் என்றால் மிகையாகாது.

இத்தகைய புனிதம் பெற்ற சிவனின் சிவபூமியாகிய ஈழத்தில் அனைத்து சிவதர்மங்களும் பண்டைய ஈழத்தவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. அதில் ஓர் அம்சம்தான் பசுவதைக்கு எதிரான குரலும் அதனை வணங்கும் பிரார்த்தனைக்கான செயல் உருவாக்கமும்.

குறிப்பாக இலங்கையைப் போர்த்துக்கீசர் ஆண்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த போர்த்துக்கீச இராணுவ அதிகாரிகள் தங்கள் உணவுக்காக வீட்டுக்கு ஒரு பசுவை ஒவ்வொரு நாளும் கொடுக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தனர். அந்தக் கட்டளைக்கு அஞ்சி அடிபணியாது திருநெல்வேலியில் இருந்த சுவாமி ஞானப்பிரகாசர் இரவோடு இரவாக இந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள சிதம்பரத்துக்குத் தப்பி ஓடினார். அன்றே பசுவதைக்கு எதிரான போர்க்கொடி உயர்த்தப்பட்டது எனலாம்.

சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற தீவிர சைவர்களின் பரம்பரையில் வந்த நாம் கோமாதா என சிறப்பிக்கப்படும் பசுவை மதிக்காமல் வணங்காமல் இன்று ஆவுரித்துத் தின்(று)றுலையும் புலைஞராக ஆகிவிட்டோம். என்ன செய்வது? இது கலியுகத்தின் கொடுமையா? இல்லை காரிருள் தந்த எம் மனதின் தவறா? யாரை நோவது?

பசுவுக்குள் பிரமா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் உறைகின்றனர் என்று வேதசாஸ்திரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. சிவனின் ஊர்தியும் பசுதான் என அனைவரும் அறிவர். பசுவை வதைத்துப் புசிப்பவன் தன் தாயை வதைத்துப்புசிக்கும்பாவத்தை அடைகின்றான். இதைவிடப் பசுவைப் துன்புறுத்துபவர்கள் அடையும் நரகம் விசஸனம் எனவும் ஸ்ரீ கருட புராணம் போதிக்கின்றது.

அண்மைய காலங்களில் யாழ்.குடாநாடு பணத்துக்காகப் பசுக்களைக் கடத்தி இறைச்சியாக விற்று வயிறு வளர்க்கும் புல்லர்களின் தலை நகரமாக மாற்றமடைந்து வருகின்றது. இவ்வாறான சில மனித விலங்குகளால் சிவனின் அடையாளச் சின்னமான பசுக்கள் தம் இருப்பையும் இழக்க நேரிடுகின்றது. எத்தனையோ புத்திஜீவிகள், இறைசேவை மையங்கள் இதற்காகக் குரல் கொடுத்தாலும், இந்த சிவத்துரோகத்தை எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

பிறமதத்தவர்களும் பசுவை வதைத்துப் புசிப்பது பாவம் என உணர்ந்து இந்த இழிவான செயலில் இருந்து விலகிவிட்டார்கள். இதற்கு எடுத்துக் காட்டாக இலங்கை வாழ் பௌத்த துறவிகளும் பசுவதைக்கு எதிராகக் குரல் கொடுத்தும் கண்டித்தும் வருகிறார்கள். சைவராய்ப் பிறந்த நாம் அதுவும் தமிழராய்ப் பிறந்த நாம் எப்போது பசுவதை எனும் சிவத்துரோகத்தில் இருந்து விடுபடப் போகின்றோம்? நா ருசியை அடக்கி மனதைக் கட்டுப்படுத்தி நமச்சிவாயத்தை தியானித்தால் மட்டுமே ஈழத்துப் பசுக்கள் உயிர் வாழ்வதற்கான எதிர் காலத்தை எம் அனைவராலும் உருவாக்க முடியும்.

பசு வதை பசு வதை
ஒழிப்போம்...
எம் பரமனை என்றும்
நினைப்போம்...
சித்தர்கள் வாழ்ந்த
சிவ பூமியிலே
நாம் இனி சிவமாய்
எங்கும் எழுவோம்...

# தமிழ் இனத்தின் எதிர்காலம் எங்கே போகிறது...?

மிக நீண்ட வரலாற்றின் பின்னணியைக் கொண்ட ஓர் இனம் தமிழினம். வீரம்,தியாகம்,விவேகம்,கல்வியின் காத்திரம்,தனித்துவமான கலை, கலாசாரம்,சமூக விழுமியங்கள், மொழிச்சிறப்பென அத்தனை உறுதுணைகளையும் இனத்துவத்தின் அடையாளமாகக் கொண்ட பிரித்தாழ முடியாத கணிதமாக, புனிதமாக விளங்கிய இனம், துலங்கிய இனம் தமிழினம். உலகமே அறிந்திருந்தது. அறிந்திருக்கிறது. இதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால் இன்று சொல்லித்தர வேண்டியிருக்கிறது. புரிதலற்ற பலருக்கு எமது சமூகத்தின் எதிர்காலங்களுக்கு நிஜங்களை நிஜமாகவே ஊட்டிவிட வேண்டியிருக்கிறது.

கடந்து சென்ற 2009 ஆம் ஆண்டுகளின் மிகப் பெரிய மனிதப் பேரவலம் என்ற புதைகுழியினுள் சிதைவடைந்து போன கட்டுக்கோப்புகளும் அதற்கான சித்தாந்தங்களும்; ஒரு தனித்துவ இனத்தின் கலை, கலாசாரம்,சமூக விழுமியங்களை அரசின் திட்டமிட்ட அழிவு என்ற சுத்திகரிப்பின் சூட்சுமங்களுக்குள் இயல்பாகவே இயைபாக்கமடையச் செய்துவிட்டது. அந்தத் தூய தியாகங்களின், சுவாசங்களின் கட்டுக் கோப்புக்களையும் சமூக விழுமிய சத்துரட்டங்களையும் அழகாய் வளம்படுத்தி, வளம் பெருக்கி வைத்திருந்த இனம் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. நிலைத்திருப்பின் உச்சத்தில் உரிமைகளைக் கொடுத்தே ஆக வேண்டும் என்கின்ற நியாயத்தை,அச்சத்தை உலக தரப்பிடமும் கொடுத்து வைத்திருந்த அந்த வீரத்தின் உத்வேகங்கள் மழுங்கடிக்கப்பட்டு எதிர்த் திசையில் பயணிக்கின்ற கால மாற்றங்கள் உருப்பெற்றுவிட்டன. எமது எதிர்கால சமூக நிலைத்திருப்புக்களிடம் துர்முக ஒளிவடிவத்தைத் தோற்றமுறச் செய்திருக்கிறது.

2009 ஆம் ஆண்டுகளின் பின்னான ஆறு ஆண்டுகாலத்தின் வளர்ச்சிப் படி நிலைகளில் படிப்படியாகத் தமிழினத்தின் அழிவுக்கான காரண காரியங்கள் இயல்பாகவே எந்தவித தடைகளுமின்றி ஓர் இனத்தின் எதிர்கால நிலைத்திருப்பின் பங்குதாரர்களான இளைய தலைமுறையிடம் ஊடுருவிவிட்டது. காட்டுத் தீயாகப் பரவி எங்கும் கனன்று கொண்டிருக்கிறது. மீள்தலின்றி அழிவு என்ற வினைக்குள் உழன்று கொண்டிருக்கிறது.

தமிழர் தாயகத்திலே கடந்து சென்ற முப்பது வருடகாலங்களில் போதை வஸ்துக்கள்,குழுக்களாக ஒன்று கூடிச் சாவைத் தருகின்ற போதை தலைக்கேற வாள் கொண்டு சுழன்றடிக்கும் மனித ஜந்துக்களை எம்மினத்திடை கண்டு கொண்டுள்ளோமா....? இல்லை...!

ஆனால் இன்று வடக்கிலே அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற யாழ்ப்பாணத்திலே போதைவஸ்துக் கடத்தல், கொள்ளை, கொலை, பாலியல் வன்புணர்வு என்ற அழிவின் ஆயுதங்கள் உலாவரத் தொடங்கிவிட்டன. கலை,கலாசாரம் பேணும் நிகழ்வுகள் நிறைவாய் அரங்கேறிய புனித பூமியில் களியாட்டங்கள் நிகழத் தொடங்கிவிட்டன. இதைக் கண்டு கொள்ள யாருளர்...? இவை தொடர்ந்தால் எம்மினத்திடை நிகழும் பேரிடராகும்.

ஓர் இனத்தின், நாட்டின் எதிர்காலம் என்பது இளைய தலைமுறையினரின் கைகளிலேயே தங்கியிருக்கிறது. இதற்கான அடித்தளங்கள் 2009 ஆம் ஆண்டுகளின் முன்னரான காலப்பகுதியில் காத்திரமாக இருந்தன. இறுதிப் போரோடு அழிவடைந்தும் போனது. ஆனால் அதன் பின்னான காலங்கள் அழிவடைந்த அடித்தளங்களை மீளக் கட்டியெழுப்ப இடம்தரவில்லை. அதனைக் கட்டியெழுப்ப எவரும் முயற்சிக்கவும் இல்லை. அதன் விளைவுகள் தற்போது தமிழின எதிர்கால விழுதுகளின் விபரீதங்களாக முளைவிட்டு மரமாகி விட்டன. அதன் பல்கிப் பெருகிய பயன் தருதலை இப்போது அனுபவித்து வருகிறோம்.

எம்மினத்தின் கல்விப்புல செல்நெறிகளைப் பாருங்கள்...! கல்வியில் உயர்வு பெற்றுச் சிறப்படைந்த மாணவர் சமூகங்களின் வீரத்தோடு விடுதலை உயர்வை சுவாசமாய் சுமந்த மாணவர் தனிமங்களின் சிதைவைப் பாருங்கள்...! யார் காரணம்...?? யாவரும் அறிவோம்....!


இனியாவது எம்மினத்தின் அழிவுக் கறையான்களை ஒழிப்பதற்கு ஒன்றுபட வேண்டும். தமிழினம் என்ற பெருமிதத்தை,தனித்துவ அடையாளத்தை இழக்காதீர்கள். தேச நலன் கருதி எம்மினத்தின் ஆதாரமான தியாகங்களையும், விவேகங்களையும் உங்கள் ஆதாரமாக இனிவரும் காலங்களின் செயல்நிலைகளுக்கான அகரமாக, பிள்ளையார் சுழியாக இட்டு அறிவுடைய சமூகமாக, மாணவர் அணியாக மீண்டும் வளம்பெற திடசங்கற்பம் பூண வேண்டும். அதற்கான சந்தர்ப்பங்கள் எப்போதும் வாய்த்திருப்பதில்லை. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள். கல்வி என்ற மூலதனத்தை அனைத்துத் தடைகளையும் களைந்து முயற்சி என்ற ஆயுதம் கொண்டு முதலாக்கி மீண்டும் நற்சமூகமாக முன்னிலை பெறுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

"அதிசய உலகம்" படத்தை தயாரித்த "டிட்டு புரடெக்ஷன்" ஆர்.பானுசித்திரா தயாரிக்கும் அடுத்த படம் "ஜெயிக்கப் போவது யாரு?". இந்தப் படத்தில் பவர் ஸ்டார் சீனிவாசன் காமெடி கலந்த வில்லன் வேடத்தில் நடிக்கிறார். கதாநாயகனாக விக்தி ஸ்காட் நடிக்கிறார். கதாநாயகியாக வந்தனா அறிமுக மாகிறார். இவர்களுடன் சைதன்யா, அத்வித், ஷ்யாம் சுந்தர் சதீஷ் ராமகிருஷ்ணன், கோட்டி, வெங்கட், சோனல் பானர்ஜி, சையத் ஆகியோரும் நடிக்கிறார்கள். இந்தப் படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி ஒளிப்பதிவு செய்து நடித்து இயக்கும் விக்தி ஸ்காட் படம் குறித்து பேசும்போது, கார் ரேஸ், பைக் ரேஸ்! இதில் எத்தனையோ பேர் உயிரிழக்கின்றனர். ஆனால் இந்த "ஜெயிக்கப் போவது யாரு?" படத்தில் இந்த ரேஸ் விடயத்தை முழுக்க முழுக்க காமெடியாக சொல்லி இருக்கி றோம். ஐந்து குழுவைச் சேர்ந்தவர்கள் இதில் கலந்து கொண்டு காமெடியில் கலக்கி இருக்கிறார்கள். மூன்று கார்கள், ஒரு ஓட்டோ, ஒரு ஜீப் இதை வைத்து சீரியஸான விடயத்தை காமெடியாக சொல்லி இருக்கிறோம். இந்தப் படத்தின் படப்பிடிப்பு பெங்களூர், திண்டிவனம், ஆற்காடு ஆகிய இடங்களில் நடந்துள்ளது. பட வேலைகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளது- என்றார்.



கந்தசாமி : எனக்கு நாலு பையங்கள். அதிலை மூன்று பேரை நல்லா படிக்க வைச்சேன். ஒருத்தனை மட்டும் படிக்க வைக்கலை.
சுப்பு : என்னாச்சு சார்? நாலு பையங்களும் இப்ப என்ன செய்யிறாங்க?
கந்தசாமி :மூத்தவன் இஞ்சினியறிங் படிச்சுட்டு வீட்டிலை சும்மா இருக்கிறான். இரண்டாவது பையன் ஐரி டிசைனிங் முடிச்சிட்டு வேலைவெட்டி இல்லாமல்இருக் கிறான். மூன்றாவது பையன் பி.கொம் படிச்சிட்டு சும்மா இருக்கிறான். நாலாவது பையன் ஊர் சுத்தி பிட்பொக்கட் அடிக்கிறான்.
சுப்பு : என்னது, நாலாவது பையன் திருடனா? அவன ஏன் சார் வீட்டுலை வைச்சிருக்கிறீர்கள்? விரட்டி விடுங்களேன்.
கந்தசாமி: என்ன சார் செய்ய. அவன் ஒருத்தன் தான் கை நிறைய சம்பாதிக்கிறான்...
சுப்பு : ???????!??!??!?!!

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | | | | 4 | | 6 | |
| | | | | | | | | 8 |
| 5 | 8 | | 1 | | | | | |
| | | 4 | | 2 | 7 | 6 | | |
| 9 | | | 8 | | 3 | | | 7 |
| | | 3 | 4 | 6 | | 9 | | |
| | | | | | 6 | | 3 | 1 |
| 6 | | | | | | | | |
| | 3 | | 5 | | | | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 7 | 1 | 8 | 4 | 6 | 2 | 3 |
| 3 | 8 | 1 | 6 | 5 | 2 | 4 | 9 | 7 |
| 4 | 2 | 6 | 7 | 3 | 9 | 1 | 5 | 8 |
| 2 | 7 | 4 | 8 | 1 | 3 | 9 | 6 | 5 |
| 8 | 6 | 5 | 4 | 9 | 7 | 2 | 3 | 1 |
| 9 | 1 | 3 | 2 | 6 | 5 | 7 | 8 | 4 |
| 6 | 3 | 2 | 5 | 4 | 1 | 8 | 7 | 9 |
| 7 | 4 | 9 | 3 | 2 | 8 | 5 | 1 | 6 |
| 1 | 5 | 8 | 9 | 7 | 6 | 3 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரேகோலத்தைஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ஒரு குடும்பம் மட்டும் வந்து அசிங்கப்பட்டா 'சொல்வதெல்லாம் உண்மை'
பத்து குடும்பம் மொத்தமா வந்து அசிங்கப்பட்டா 'நீயா நானா'!!







நேர்முகத் தேர்வு சென்று வந்தேன்
அப்பா கேட்டார் வேலை கிடைக்குமா?
தங்கை கேட்டால் எவ்வளவு சம்பளம்?
அண்ணன் கேட்டான்
நிரந்தர வேலையா?
தம்பி கேட்டான்
எப்ப வேலையில் சேரனும்?
ஆனால் அம்மா
கேட்டால்
மதியம் சாப்பிட்டியா?








மேடம்: உறவினருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். குடும்பத்தினருடன் விரும்பிய உணவு வகைகளை உண்டு மகிழ்வீர்கள்.


இடபம்: வெளி வட்டார தொடர்பால், சிரமத்துக்கு ஆளாகலாம். தொழிலில் கிடைக்கும் புதிய வாய்ப்பை, தவறாமல் பயன்படுத்துவது நல்லது. பெண்கள் செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவர். ஆரோக்கியம் பலம் பெறும்.


மிதுனம்: உறவினர், எதிர்பார்ப்புடன் அணுகுவர். தொழில், வியாபாரத்தில், சீர்திருத்தங்களைச் செய்வீர்கள். மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.


கடகம்: நிலுவைப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். தாராள வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும்.


சிங்கம்: மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கு ஏற்ப இலாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர். வாகன பயணத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.




கன்னி: பேச்சில் ஆன்மிகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப்பணம் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.


துலாம்: அடுத்தவர் விவகாரத்தில் கருத்துச் சொல்வதைத் தவிர்க்கவும். ... மட்டுமே தொழில் வளர்ச்சி சீராகும். நிர்வாகச் செலவு அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவீர்கள்.


விருச்சிகம்: எதிர்கால வளர்ச்சி குறித்து சிந்திப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் தாய்வீட்டு சீதனம் கிடைக்கப் பெறுவர்.


தனுசு: சமூகத்தில், மதிப்பு மரியாதை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். வெகுநாள் சந்திக்க நினைத்த நண்பருடன் பேசுவீர்கள்.


மகரம்: அவசர கதியில் செயற்பட நேரிடலாம். தொழில் வளர்ச்சிக்காக, புதிய மாற்றங்களைச் செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். போட்டி, பந்தயங்களில் ஈடுபட வேண்டாம்.


கும்பம்: நண்பர்களின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும். உறவினர்களுடன் கோடை சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு.


மீனம்: பகைவரால் வந்த கெடுசெயலை முறியடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சியால் வருமானம் உயரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பெண்கள், ஆடை, ஆபரணம் வாங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இது 'புதுசு

## துணிக் கைப்பைகள்

துணிக் கைப்பைகள்அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நன்கு பாவிக்கக் கூடிய விதத்தில் துணிகளால் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. துவைத்து பாவிக்கக் கூடிய இவை பார்ப்பதற்கும் அழகானவையாகும். இவற்றின் விலை 600 ரூபாவில்இருந்து – 800 ரூபா ஆகும்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 50 | 60 | 50 | 80 | 20 | 40 |
| கத்தரி | 80 | 50 | 60 | 60 | 50 | 50 | 30 | 20 |
| கரட் | 80 | 100 | 80–200 | 120 | 80 | 140 | 90 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 60 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 150 | 140 | 100 | 140 | 160 | 80 | 200 | 60 |
| பாகல் | 120 | 100 | 120 | 120 | 100 | 120 | 100 | 40 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80. | – | 80 | 120 | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 80 | 100 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 70 | 90 | 100 | 120 | 60 | 130 | 100 | 60 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 25–30 | 40 | 12 | 20 |
| தக்காளி | 70 | 80 | 80 | 100 | 100 | 120 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 30 | 30 |
| கீரை | 20 | 30 | 40 | 20 | 30 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 80 | 80 | 100 | 100 | 120 | 70 | 70 |
| புடோல் | 50 | 50 | 60 | 60 | 40 | 60 | 20 | 40 |
| கோவா | 80 | 70 | 70 | 80 | 50 | 100 | 60 | 45 |
| வெண்டி | 80 | 60 | 80 | 80 | 80 | 60 | 50 | 30 |
| போஞ்சி | 40 | 120 | 120 | 140 | 140 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 140 | 160 | 120 | 140 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40 | 30 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80–120 | 80 | 80 | 100 | 75 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 300 | 360 | 400 | 300 | 350 |
| வல்லாரை | 15 | 15 | 10 | 15 | 10 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 80 | 100 | 100 | 80 | 140 | 80 | 50 | 50 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 160 | 160 | 160 | 110 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 250 | 200 | 400 | 250 | 250 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |



## பால்கோவா

**தேவையான பொருள்**

பால் - 1 லீற்றர்

**செய்முறை**

பாலை அடிகனமானப் பாத்திரத்தில் ஊற்றி கொதிக்க வைக்கவும். நன்கு கொதிக்க ஆரம்பித்ததும் விடாமல் கிளறியபடியே இருந்து, பாலில் நீர்ப்பசை அகன்ற பின் இறக்கவும். இதுதான் பால்கோவா. இதைக் கொண்டு இனிப்புகள் பலவற்றைத் தயாரிக்கலாம்.

இரண்டு லீற்றர் பாலில் சுமார் 400 கிராமிலிருந்து 500 கிராம் வரை பால்கோவா தயாரிக்கலாம்.

**நாளை**

சித்திரை-10
சனிக்கிழமை
23.04.2016
திதி: பிரதமை
பி.ப.12.54 வரை
நட்சத்திரம்: சுவாதி
மு.ப.09.51 வரை
ராகுகாலம்:
09.00-10.30 வரை
சுபநேரம்:
03.00-04.30 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 600 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 150 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 600 | – | – |
| சுறா | 500 | 500 | 600 | 800 | 700 | – | – |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 500 | – | 400 |
| விளை | 650 | 400 | 400 | 500 | 450 | 400 | 350 |
| முரல் | 300 | 350 | 350 | 400 | 400 | – | 350 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 500 | – | – |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 400 | – | – |
| திரளி | 300 | 250 | 200 | 200 | 400 | 200 | 350 |
| நகரை | 250 | 250 | – | 200 | 120 | – | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 150 | 100 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 150 | 200 | 400 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 350 | 200 | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | 300 | 200 | – | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 70 | 100 | 50 | – |
| பாலை | 420 | 250 | 250 | 400 | 500 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 350 | 400 | – | – |

## நுளம்புகளுக்கு பூண்டு

நுளம்பை விரட்ட சிறந்த மருந்து உங்கள் சமயக்கட்டில் இருக்கும் பூண்டு. நான்கைந்து பூண்டு விழுதுகளை எடுத்து நசுக்கி, சுடுநீரில் இட்டு காய்ச்சி, அந்த நீரை உங்கள் வீடு முழுக்க தெளித்தாலே போதும், நுளம்புத் தொல்லை உங்கள் வீட்டில் இருக்காது. பூண்டின் வாசம் நன்கு இருக்க வேண்டும் என்பது முக்கியமானது.

**எறும்புகளுக்கு வெள்ளை வினிகர்**

வெயில் காலமாக இருந்தாலும் சரி, மழை காலமாக இருந்தாலும் சரி, இந்த எறும்பு எல்லா காலத்திலும் வீட்டைச் சுற்றி இருக்கும். நீங்கள் அடுத்த முறை உங்கள் வீட்டில் எறும்பைக் கண்டால் செய்ய வேண்டியது, வெள்ளை வினிகரை எறும்புகள் இருக்கும் இடத்தில் தெளித்தால் எறும்புகளை இல்லாமற் செய்யலாம்.

**கரப்பான்பூச்சி போரிக் பவுடர்-**

கழிவறையிலிருந்து, சமையலறை வரை எல்லா பக்கமும் சுத்தி சுத்தி வந்து தொல்லை கொடுப்பது இந்த கரப்பான்பூச்சி. கோதுமை மாவுடன், கொஞ்சம் போரிக் பவுடரும், சிறிதளவு நீரும் சேர்த்து கலந்து உருண்டை பிடித்து கரப்பான்பூச்சி இருக்கும் இடத்திலை வைத்துவிட்டால், கரப்பான் பூச்சி தொல்லை முழுமையாக அழிந்துவிடும்.

சிலந்திகளுக்கு எலுமிச்சை தோல் -மழை காலங்களில் இந்த சிலந்தியின் தொல்லை பெரும் தொல்லையாக இருக்கும். எலுமிச்சை, தோடை போன்றவற்றின் தோல்களை சிலந்தி இருக்கும் இடத்திலை தேய்த்தாலே, சிலந்தி வராது, முற்றிலுமாக அழிந்துவிடும்.

ஈக்களுக்கு கர்ப்பூரம்- நிறைய பேருக்கு தெரியாத ஒன்று, கர்ப்பூரம் ஈக்களை அண்டவிடாது. என்பது. வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் ஓர் கிண்ணத்தில் கர்ப்பூரங்களைப் போட்டு வைத்துவிட்டால், ஈக்களின் தொல்லையே இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமரூனுக்கு அமெரிக்கா உதவி

யவுண்டி,ஏப்.22
கமரூன் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா.சபைக்கான அமெரிக்க தூதர் சமந்தா பவர், ஆபிரிக்க நாடுகளில் போகோஹறம் தீவிரவாதிகளால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கான நிதியாக 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தத் தொகையுடன் சேர்த்து கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் போகோஹறத்தினரால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கான நிதியாக 237 மில்லியன் அமெரிக்க டொலர்களை அளித்துள்ளதாக சமந்தா பவர் தெரிவித்தார்.
மேலும் அவர் தெரிவித்ததாவது, போகோஹறம் அமைப்பினர் எதிர்பாராத அளவுக்குத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். அவர்களின்தாக்குதலுக்கு இராணுவத்தினரால் எதிர்த்து நிற்க முடியவில்லை என பயாவில் இடம்பெற்ற சந்திப்பில் தெரிவித்தார்.

> ஐ.எஸ். அமைப்பினருடன் நட்புறவு வைத்துள்ள போகோஹறம் அமைப்பினர் ஆபிரிக்கா, எகிப்து போன்ற நாடுகளில் தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

மனித உரிமையை மதித்து, நல்லாட்சியுடன், பொருளாதாரம் சிறக்கவும், வன அபிவிருத்தி திட்டங்களைச் செயற்படுத்தவும், பொது மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவும் வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.
ஐ.எஸ்.அமைப்பினருடன் நட்புறவு வைத்துள்ள போகோஹறம் அமைப்பினர் ஆபிரிக்கா, எகிப்து போன்ற நாடுகளில் தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். குறிப்பாக கிறிஸ்தவ மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களுக்குள் போராளிகளுடன் அதிரடியாக நுழையும் போகோஹறம் அமைப்பினர், அங்குள்ள மக்களை ஆயுதங்களால் வெட்டியும், சுட்டுக் கொன்றும், வீடுகளுக்கு தீவைத்தும் வன்முறை யில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை இவர்களின் தாக்குதலில் 15 ஆயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-ரி4)



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் மெழுகுச் சிலை தயாராகியுள்ள நிலையில் 4 நகரங்களில் காட்சிப்படுத்த ப்படவுள்ளன. சிங்கப்பூர், லண்டன், ஹொங்கொங் மற்றும் பாங்கொக் ஆகிய நகரங்களில் அமைந்துள்ள அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (ஐ-ரி4)

# ஈக்குவடோரில் மீண்டும் நிலநடுக்கம்



குவிட்டே,ஏப்.22
ஈக்குவடோரில் நேற்று முன்தினம் பிற்பகல் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் 6.2 ரிச்டராக பதிவாகியுள்ளதாக தெரியவந்துள்ளது. இந்த நிலநடுக் கத்தால் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பான உடனடித் தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. இது மேலோட்டமான நில நடுக்கம் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.



இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 500 ஆக உயர்ந்துள்ளது. 4 ஆயிரத்து 605 இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.
அத்துடன் ஆயிரத்து 700 பேர் காணாமல் போயுள்ளனர். இந்தக் கடுமையான இயற்கை இடரால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். அத்துடன் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடும், நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி4)

# சவூதிக்கு ஒபாமா சுற்றுப்பயணம் பல்வேறு விடயங்கள் ஆராய்வு


ரியாத்,ஏப்.22
அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா சவூதி அரேபியாவுக்குச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இந்தச் சந்திப்பில் ஒபாமா, கிளஸ்டர் குண்டுகள் விற்பனை செய்வதையும், பாவிப்பதையும் தடுக்க வேண்டும் என்றும் சவூதி அரேபியாவை வலியுறுத்தியுள்ளார்.



இந்தச் சந்திப்பின் மூலம் ஈரான், சவூதி அரேபியாவுடனான அமெரிக்காவின் உறவில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. அமெரிக்க இரட்டைக் கோபுரத் தகர்ப்பில் சவூதி அரேபியாவுக்கு தொடர்பிருப்பது விசாரணை ஆவணத்தின் மூலம் தெரிய வந்துள்ளது.
இந்தச் சந்திப்பு தொடர்பில் வெள்ளை மாளிகை அறிக்கையில், ஐ.எஸ்க்கு எதிரான போரில் சவூதியின் கூட்டணி பற்றியும், அப்பகுதியில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைத் தீர்ப்பது குறித்தும் கலந்துரையாடப் படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி4)


# அமெரிக்காவில் ஆபாசத்துக்கு தடை

வொசிங்டன்,ஏப்.22
அமெரிக்க மாகாணங்களில் ஒன்றான உட்டாவில் ஆபாசப் படங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. உடல் ஆரோக்கியத்துக்குக் கேடு என்பதால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனை அடுத்து குறித்த மாகாணத்தினர் ஆபாசத்துக்கு எதிராகக் குரல் கொடுத்ததை அடுத்து ஆளுநர் கரே ஹெர்பெர்ட் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.
இது தொடர்பில் ஆளுநர் தெரிவித்ததாவது, ஆபாசத்தால் சமூகம் திணறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எமது குடும்பங்களையும், இளைஞர்களையும் பாதுகாக்க விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.
இதன் மூலம் கல்வியில் சிறந்த நிலையை அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஆபாசம் ஆரோக்கியத்துக்குக்கேடு விளைவிக்கும். தனிநபராக, பொது மக்கள் ஆரோக்கிய காரணிகளில் செல்வாக்குச் செலுத்தும் விடயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
இதற்கிடையில் உட்டா மாகாணம் வயது வந்தவர்களுக்கான பொழுது போக்கு மென் செயலியை இணையத்தளத்தில் கொள்வனவு செய்வதில் அமெரிக்காவில் முதலிடத்தைவகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)



# நீர் மூழ்கிப் புல்லட் ரயில் இந்தியாவில் அறிமுகம்

புதுடில்லி, ஏப்.22
இந்தியாவின் முதல் நீர் மூழ்கிப் புல்லட் ரயில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மும்பை மற்றும் அகமதாபாத்துக்கிடையில் 21 கிலோ மீற்றர் தூரத்துக்கு இந்தப் பயணம் இருக்கும் என ரயில்வேத்துறை அமைச்சால் அதிகார பூரவமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்துக்கு 97 ஆயிரத்து 636 கோடி நிதி(இந்திய) பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுக்கான பணத்தில் 81 சதவீதம் ஜப்பானிடம் இருந்து கடனாகப் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கடனுதவியானது 50 வருடங்களில் திருப்பிச் செலுத்தப்படும் என்ற அடிப்படையில், 15 வருடங்களுக்கு 0.1 வட்டி வீதத்துடன் வழங்கப்படவுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.



இந்தக் கட்டுமானத்துக்கான சில பாகங்கள், ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளதாக கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வருட இறுதியில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனவும், அடுத்த வருட இறுதியில் கட்டுமானப்பணிகள் தயாராகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
புல்லட் ரயில் அதி கூடிய வேகமாக மணித்தியாலத்துக்கு 350 கிலோமீற்றர் எனவும், குறைந்த அளவாக 320 கிலோமீற்றர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் பல துறையினரும் இணைந்து செயற்பட முன்வந்துள்ளனர். (ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரப் பகிர்வை

அதிகாரப் பகிர்வு அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் இருக்கின்றோம். அதை அர்த்தமுடையதாக ஆக்குவதற்குத் தமிழ் – முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு முழுமையான ஆதரவை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றனர்.

எனவே, இப்படியானதொரு நிலையில், இரண்டு சிறுபான்மை இன மக்களும் இணைந்து அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை–காத்திரமான அரசமைப்பை உருவாக்குவதற்குத் தயாராக இருக்கின்றனர் – என்றார்.

கடந்த 9 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை வளாகத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன்,

இனப் பிரச்சினைத் தீர்வுக்காகக் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட எல்லா நடவடிக்கைகளின்போதும் தமிழ் மக்களுக்காக மாத்திரம் எதையும் செய்யவில்லை. தமிழ் பேசும் மக்களுக்காகவே எல்லாம் மேற்கொள்ளப்பட்டது. எனவே தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக – ஓரணியில் நிற்க வேண்டும். இதன் போதுதான் அதிகாரப் பகிர்வின் பெறுமதியை முழுமையாகப் பெற முடியும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஒரே நிலைப்பாட்டில் உள்ளதாக சிறுபான்மை மக்களின் இரு பிரதான கட்சிகளும் ஒரே மேடையில் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–வ)

## போர்க்குற்ற

நாடளாவிய ரீதியில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வு முடிவை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்டுள்ளது. இதில், இறுதிப் போரின்போது நடந்தவற்றை விசாரிப்பதற்கான பொறிமுறை எதுவும் அவசியம் இல்லை என்று ஆய்வில் பங்கேற்றவர்களில் 44.2 சதவீதமானவர்கள் கூறியுள்ளனர். விசாரணைப் பொறிமுறை அவசியம் என்ற நிலைப்பாட்டை 42.2 சதவீதமானோர் வெளிப்படுத்தியுள்ளனர்.

விசாரணைப் பொறிமுறை வேண்டும் எனக் கூறுபவர்களில் 47.3 வீதமானோர் அந்த விசாரணை வெளிநாட்டுத் தலையீடு இல்லாமல் முழுக்க உள்நாட்டு பொறிமுறையின் கீழ் நடத்தப்படவேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளனர். 9 வீதமானவர்களே முழுக்கச் சர்வதேச தலையீட்டுடனான விசாரணை தேவை என்று வலியுறுத்துகின்றனர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அரசு மீதான நம்பிக்கை**

அத்துடன், ஊழலை ஒழிப்பதில் அரசின் முன்னெடுப்புகள் மீது மக்கள் குறைவான நம்பிக்கையையே வைத்துள்ளனர். இந்த விடயத்தில் கிட்டத்தட்ட 41 வீதமானோர் அரசு மீது நம்பிக்கை வைக்கவில்லை. எனினும் 34 வீதமானோர் அரசு ஊழலை ஒழிக்க நடவடிக்கை எடுப்பதாக நம்புகின்றனர். வாழ்க்கைச் செலவை அரசு கையாளும் முறைமையில் 51.2 வீதமானவர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர். அதேவேளை 30 வீதமானோர் அரசின் செயற்பாடுகளில் திருப்தி வெளியிட்டுள்ளனர்.

தமிழ் – சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்படவேண்டும் என்று 49 வீதமானோர் விரும்பும் அதேவேளை, 41 வீதமானோர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வு நாட்டின் 25 மாவட்டங்களில் உள்ள 4 பிரதான சமூகத்தவர்கள் மத்தியிலும் ஆங்காங்கே நடத்தப்பட்டுள்ளது. 2 ஆயிரத்து 102 பேர் இதில் பங்கேற்றுள்ளனர். வடக்கு மாகாணத்தில் ஆய்வினை இலகுவாக மேற்கொள்ள முடியாமல் போன சில இடங்கள் தவிர்ந்த, ஏனைய பகுதிகள் உட்பட நாடெங்கிலும் கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் மார்ச் 3 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (த–வ–5)

## சமஷ்டி

தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த முழுநாள் செயலமர்வு மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் விடுதியில் நேற்று நடை பெற்றது. இதில் விரிவுரையாளராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:–

அதிகாரம் அர்த்தமுடையதாகப் பகிரப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலும், அரசமைப்பு தொடர்பான நிலைப்பாட்டிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றிணைந்து நிற்கின்றன. இந்த நிலைப்பாடுதான் எம் இரண்டு இனங்களுக்கும் வெற்றியைக் கொண்டு வரும்.

இலங்கையில் உருவாக்கப்பட்ட இரண்டு அரசமைப்பிலும், தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். இதனால் தான் போர் உருவானது. பெரும்பான்மைதான் ஆள வேண்டும் என்பதுதான் ஜனநாயகம் என்றாலும் கூட, பேரினவாத ஆட்சியாக, அது இருக்க முடியாது. இந்தப் பேரினவாத ஆட்சியைக் கொண்டு செல்வதற்காகத்தான் 13 ஆவது திருத்தச் சட்டமும் கொண்டு வரப்பட்டது. இதனால்தான் மாகாண சபையும் தோல்வியடைந்தது.

மாகாண சபையின் அதிகாரம் ஆளுநரிடம்தான் உண்டு. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் இல்லை. மாகாண சபை உறுப்பினர்களுக்கு வாகனங்களும் தனி அறைகளும் ஒதுக்கிக் கொடுத்து, சில விடயங்களை நிறைவேற்றிக்கொள்ளும் வேலையைத் தான் இந்த மாகாண சபை செய்கின்றது. ஆகவேதான், இந்த அரசமைப்பு மாற்றப்படவேண்டியுள்ளது. தற்போதுள்ள அரசமைப்பு ஒருபோதும் அதிகாரப் பகிர்வை நோக்கிச் செல்லாது. அது பேரினவாத ஆட்சியையே மேலும் விஸ்தரிக்கும். ஒற்றையாட்சி, நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை மற்றும் நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தைக் குவித்தல் போன்றவை ஒருபோதும் அதிகாரப் பகிர்வை வழங்காது.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை, சிறுபான்மை இன மக்களுக்கு சாதகமானது என சிலர் கருதுகின்றனர். இரண்டு பிரதான கட்சிகளும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதால், அதைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழர்கள் இருப்பர். அப்போது அந்த ஜனாதிபதி தமக்குச் சாதகமாக இருப்பார் எனச் சிலர் கருதுகின்றனர். அது பிழையானது. தேர்தல் முடிந்தால் எல்லாம் முடிந்துவிடும். சிங்களவர்கள் பாதகமாக நினைக்கும் ஒன்றை, அவர் தமிழர்களுக்காகச் செய்யமாட்டார்.

ஆகவே, அதிகாரப் பகிர்வு உரிய முறையில் அமைய வேண்டும் என்றால், நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டே ஆக வேண்டும். ஒரு தனி மனிதனின் கைகளில் அதிகாரம் குவிந்து கிடக்கும்போது, அது அதிகாரத்தைப் பகிர்வதற்குத் தடையாகவே இருக்கும். அதேபோல், அந்த அதிகாரத்தை நாடாளுமன்றத்தில் குவித்தாலும், அது சிக்கலான விடயமே. அதுவும் அதிகாரப் பகிர்வுக்கு உதவாது. ஓரிடத்தில் அதிகாரம் குவிந்து கிடப்பதும், அதிகாரப் பகிர்வு ஆகாது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு முழுமையான தடையாக இருப்பது ஒற்றையாட்சி முறைமைதான்.

ஒற்றையாட்சி முறைமை மற்றும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை போன்றவை நீக்கப்பட்டு முழுமையான சமஷ்டி முறைமையின் கீழ் வழங்கப்படும் அதிகாரப் பகிர்வுதான் அர்த்தமுள்ள தீர்வாக அமையும் – என்றார். (த–வ–5)

## மரங்கள்

காணப்படுகிறது.

கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய வெப்பநிலையாக 35.7 பாகை செல்சியஸ் ஆக மட்டுமே காணப்பட்டது. ஆனால் இந்த வருடம் 36 பாகை செல்சியஸ் ஆக உயர்ந்துள்ளது. இது கடந்த வருடத்தை விடவும் 0.6 பாகை செல்சியஸ் அதிகரித்த நிலையாகும். இது சிறியளவான அதிகரிப்பு என்றபோதும், வெப்பத்தின் தன்மை மோசமாகவே அனைவராலும் உணரப்படுகிறது.

இவ்வாறு வெப்பம் அதிகரிப்பதற்கு, மரங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்படுகின்றமையும் வாகனங்களின் அதிகரித்த பாவனையுமே காரணமாகும்.

இடைநிலை பருவப்பெயர்ச்சிக் காலம் தொடங்குவதனால், தொடர் வெப்பநிலை காணப்படுவதுடன், மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றது – என்றார்.

இதேவேளை, வெப்பநிலை அதிகரித்தபோதும் நேற்று வரை வெப்பத்தின் சுட்டெரிக்கும் தன்மையை உணரவே முடிகிறது. அது குறையவேயில்லை என்று பொதுமக்கள் கூறுகின்றனர். (த–வ–4–101)

## ஏற்றுமதித்

இணக்கம் எட்டப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகளை கண்காணிப்பதற்கும் தடுப்பதற்குமான ஏற்பாடுகளை இலங்கை கடைப்பிடிக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியே, கடந்த 2012 ஆம் ஆண்டில் இலங்கைக்கு மஞ்சள் அட்டை எனப்படுகின்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர், 2015 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இலங்கை தற்போது அதன் சட்ட ஏற்பாடுகளை திருத்திக் கொண்டுள்ளதாகவும், மீன்பிடி படகுகளை கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளையும் முன்னேற்றியுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் திருப்தியடைந்துள்ளது. இதனால், விதிக்கப்பட்ட தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (த–வ–5)

## மரண அறிவித்தல்

### விநாசித்தம்பி சச்சிதானந்தம்



யாழ்ப்பாணம், யாதம்பை, மாதகலைப் பிறப்பிடமாகவும், இல.40, 6C பண்ணை, கனகபுரம், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற மலேரியா தடுப்பு இயக்கப் பணியாளர் வினாசித்தம்பி சச்சிதானந்தம் 19.04.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி – லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா – தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும், அருந்தவத்தின் (கிளி) அன்புக் கணவரும், திலகவதி, கடம்பமலர், கங்காதேவி, சேராதா, ஸ்ரீ முருகன், பிரணவசோதி, சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தசாமி, இராசரட்ணம், பரராஜசிங்கன், செல்வராணி, கமலாதேவி, செல்லையா, பாலசிங்கம், வேல்விழி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நேசகுமாரின் சகலனும், குகன், வேல்கௌரி (சுவிஸ்), ஞானப் பரவை (சுவீடன்), காலஞ்சென்றவர்களான லகன், லக்ஷ் மிஷலா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலச்சந்திரன் (சுவிஸ்), கந்தசாமி (சுவீடன்), சந்திராம்பாள் (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், லக்ஷிகா, இலக்கியா, இலக்கணா, லக்ஷலா, கஜன், பவின், சஜன், ஹரிஷ், ஹரிஷா ஆகியோரின் அம்மையாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனகபுரம் இந்து மயானத்துக்கு (கந்தன்குளம்) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகபுரம். (கே/21)(11.18) **குடும்பத்தினர்.**

## கண்ணீர்அஞ்சலி



எமது சக ஆசிரியை **திருமதி கோணேஸ்வரி நித்தியபவன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பகவதியம்மா சச்சிதானந்தமுதலி**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வரதராணி பூரணேஸ்வரன்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதராணி பூரணேஸ்வரன் 20.04.2016 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கப்பிள்ளையார் – தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பூரணேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தியாகராசா – பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், ரஞ்சினியின் (ஜேர்மனி) பாசமிகு சகோதரியும், றஜீத்தன் (கஜன் – சிங்கப் பூர்), பூரண்யா (பூஜா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஜீவின் அன்பு மாமியாரும், துவாரகன் (ஜேர்மனி), கஸ்தூரி (ஜேர்மனி), கார்த்தீகன் (ஜேர்மனி) ஆகியோரின் ஆசைப் பெரிய தாயாரும், அதிஸ்ரா, அதிசயன், ஹரிஷ் (ஜேர்மனி), அமீரா (ஜேர்மனி), ஆதீஷ் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.04.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தற்காலிக முகவரி**
29/25, உடையார் ஒழுங்கை,
ஐயனார் கோவிலடி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

(ஜே/544) (11.18)

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 165 1711**

### யோசவ் அல்பிறட் (ராசு)

தோற்றம் 08 . 10 . 1929



மறைவு 13 . 04 . 2016

மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசவ் அல்பிறட் 13.04.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசவ் வெரோனிக்கா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து – விக்ரோறியா தம்பதியரின் பாசமிகு மருமகனும், மேரிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கிப்பொலிற்ற (தங்கமணி– ஓய்வுபெற்ற ஆசிரியர்), அன்ரன் கிறிஸ்ரியன் (துரைமணி – Research Scientist Norway) மரியஸ்றெலா (சரசு – நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், மதுரநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), லிலாணி, றெஜீமியஸ் (றெஜி) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோஷன், சுஜந்தா, ஜெகான் ஷெகாளினி, கெவின், றெக்ஸ், மாறியஸ், சுமங்கலா, குமார், தோமஸ், ஒல்கா ஆகியோரின் அன்புப் பேரனும், அலெக்சாண்டர், யோண், லான்ா, அக்கீல், நவீன், நோவா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (23.04.2016) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து இரங்கல் திருப்பலிக்காக புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

53/1, மவுண்கார்மல் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**மதுரநாயகம் குடும்பத்தினர்.**
**077 880 6945, 021 222 2959**

# சட்டவிரோத தங்கம் கடத்தலை உடனடியாகத் தடுத்து நிறுத்தவும்

## ஜனாதிபதி மைத்திரிபால உத்தரவு

கொழும்பு, ஏப்.22

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் சட்டவிரோதமாகத் தங்கம் கடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குத் தங்கம் எடுத்துச் செல்லப்படுவதை முறியடிப்பது தொடர்பான விசேட கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

அரச மற்றும் தனியார் வங்கிகளின் தங்க ஏல விற்பனையின் போது கொள்வனவு செய்யப்படும் தங்கம் சட்ட விரோதமாகப் பெரியளவில் வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவதாக முப்படையினர் மற்றும் பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தக் கடத்தலை முறியடிப்பதற்காக மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகள் பற்றி இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இதனைத் தடுப்பதற்குத் துரித மற்றும் திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

வங்கி ஏல விற்பனைகள் தொடர்பான ஆவணங்களை முறையாகத் தயாரித்துவழங்குவதற்கு மத்தியவங்கிக்கும், அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கும் ஜனாதிபதி அறிவுரை வழங்கியதுடன், சட்டமா அதிபர் திணைக்களம், முப்படைகள், பொலிஸ் ஆகியவற்றின் பங்களிப்புடன் இந்தக் கடத்தலை முறியடிப்பதற்குத் தேவையான சட்ட ரீதியான மற்றும் பிரயோக ரீதியான வேலைத்திட்டத்தை வகுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

(ற-ஐ-5)

**வேலை ஆள்கள் தேவை**

யாழ் நகரை அண்மித்த பகுதியிலுள்ள சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலை ஆள்கள் தேவை.

01. சப்ளையர்

02. சமையலாளர்

076 769 8093

**வேலையாள்கள் தேவை**

* சமையல் செய்பவர் (பெண்)
* சமையலறை உதவியாளர் (பெண்/ஆண்)
* உணவு பொதிசெய்பவர்கள் (பெண்/ஆண்)
* உணவுப்பொதி விநியோகிப்பவர் (ஆண்)

மானிப்பாய் மற்றும் மானிப்பாயை அண்டிய பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- 077 240 3801

**கண்ணீர் அஞ்சலி**



யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவரும் ஸ்ரீசுபா பேக்கரி உரிமையாளருமாகிய
**இ.பேரின்பநாயகம்**
அவர்களின் அன்பு மாமனார்
**சின்னப்பு வேலாயுதப்பிள்ளை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர்,அங்கத்தவர்கள், பணியாளர்கள்.
**யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**
559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## தொடர்ச்சிகள்...

### இலங்கையின்

களில் மனித உரிமை நிலைவரத்தை முன்னேற்றுவதற்கான ஆக்கபூர்வமான ஈடுபாட்டைக் கொண்டுள்ள 30 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

இந்த அறிக்கை 2015இல் இலங்கையில் மனித உரிமை நிலைவரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பாராட்டும் அதேவேளை, சில மனித உரிமை நிலைவரங்களில் முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது.

கருத்துச் சுதந்திரம், நடமாட்ட சுதந்திரம், சமூகங்களுக்கிடையில் பதற்றங்களைக் குறைத்தல், மனித உரிமை ஆணைக்குழு போன்றவற்றின் சுதந்திரத்தை ஏற்படுத்தல் போன்ற 2015இல் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட சாதகமான நடவடிக்கைகளை பிரிட்டன் பாராட்டுகின்றது.

சர்வதேச சமூகத்துடன் அரசு இணைந்து செயற்படுகின்றமையையும், ஜெனிவாவில் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியமையையும் பிரிட்டன் வரவேற்றுள்ளது.

இந்த விடயங்களுக்குத் தீர்வைக் காண்பதற்கு அரசு தயாராகவுள்ளதை இந்த அறிக்கை பாராட்டும் அதேவேளை, வடக்கு, கிழக்கில் சாதகமான மாற்றங்கள் தென்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

2015ஆம் ஆண்டிலும் மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ந்தும் துன்புறுத்தல்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கின்றனர். சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் போன்றனவும் தொடர்கின்றன என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-வ-சி)

### புலிகளின்

ஸார், கைபேசியை வாங்கிப் பார்த்துவிட்டு, அவரைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர் யாழ். நீதிவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்தியபோது, குறித்த இளைஞரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த-வ-106)

### பயங்கரவாதச்

சட்டத்தை விட வலுவானது.

புதிய சட்டத்தை வரையும் பணியில், சட்ட நிபுணர்கள் பலர் ஈடுபட்டுள்ளனர். இணையக் குற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு வகைகளிலான குற்றச் செயல்களை உள்ளடக்குவது தொடர்பாக இதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (த-வ-5)

**விண்ணக வாழ்வில்**

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

மண்ணிலே மலர்ந்தது
03 . 10 . 1931

விண்ணிலே கலந்தது
23 . 03 . 2016



**அமரர் குருசுமுத்து ஜஸ்ரின்**

"நீ இன்று என்னோடு வான் வீட்டில் பிரவேசிப்பாய்"

இன்று (22.04.2016) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் தேவர்கட்டு, திருஇருதயநாதர் ஆலயத்தில் இடம்பெறும் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

**சின்னப்பு வேலாயுதபிள்ளை**



சுதுமலை வடக்கு, ஈஞ்சடி, மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு வேலாயுதபிள்ளை நேற்று (21.04.2016) வியாழக்கிழமை தனது 94 ஆவது வயதில் அவரது இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமக னும்; தையல்நாயகி, சிவபாக்கியம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சரோஜினி, கமலாசினி, அழகம்மா, அழகுராணி (ஆசிரியை, யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), பிறேமானந்தன் (உரிமையாளர், அம்பாள் ஸ்ரோர்ஸ், சுதுமலை), சுமதி, பிரபானந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் தெய்வேந்திரம், பேரின்பநாயகம் (உரிமையாளர், ஸ்ரீ சுபா பேக்கரி, சுதுமலை), சிவானந்தம் (உரிமையாளர், அம்பாள் அரைக்கும் ஆலை), ஜெயந்தி, இராஜேந்திரகுமார், திகழ்ஜோதி (ஆசிரியை, யா/ இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், ராஜிதா-பாஸ்கரன், ரஞ்சித் (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்)-ரூபினி, ரஜீத், றஜீபன்-நவரூபி, றஜீகரன், தர்சிகா-கஜீபன், சந்துரு, சுபாகர் (யாழ். பல்கலைக் கழகம் -விஞ்ஞானபீடம்), சுகுணன், கௌசிகா-கிருபாகரன், கிருஷாந், யதுர்சனா, இனுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும், மகிஷா,சாருஜா, டிலக்சிகா, அக்ஷயன், நிதுஷன், கபிஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04. 2016)வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும் இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்

தகவல்:
ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு குற்றச்செயல்களுக்கு ரூபா 3 லட்சம் அபராதம் விதிப்பு

சாவகச்சேரி,ஏப்.22

நீதிமன்ற பருவகால விடுமுறை யின் பின்னர் கடந்த செவ்வாய்க் கிழமை சாவகச்சேரி பொலிஸா ரால் தாக்கல் செய்யப்பட்ட வழக் குகளில் சட்டத்துக்கு விரோதமாகச் செயற்பட்டவர்களுக்கு நீதி மன்றால் 3 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை அபராதமாக விதிக்கப்பட்டது.

கடந்த நான்காம் திகதி பருவகால விடுமுறைக்காக நீதிமன்றம் மூடப்பட்டு கடந்த திங்கட் கிழமை மீண்டும் ஆரம்பமானது.

இதன் போது சாவகச்சேரி பொலிஸாரால் பெருமளவு வழக் குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகளை விசாரித்த நீதிவான் 3 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சம் ரூபா வரை அபராதம் விதித்தார்.

கசிப்பு வைத்திருந்த சாவகச்சேரி–கனகன்புளியடி வாசிக்கு ஒரு லட்சம் ரூபாவும், கேரதீவு–சங்குப்பிட்டிப் பகுதியில் கசிப்பு வைத்திருந்த மூவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது ஒருவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் 50 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. ஏனைய இரு வரும் சுற்றவாளி எனக்கூறியதால் இருவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் , வாகன வரிப்பத்திரம் ஆகியவை இன்றி வாகனங்கள் செலுத்திய இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், இதே குற்றச்சாட் டுக்களுடன் பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை செய்தபோது வாகனத்தை நிறுத்தாமல் சென்ற சாரதிக்கு 26 ஆயிரத்து 500 ரூபாவும் , காப்புறுதிப் பத்திரமின்றி லொறியைச் செலுத்திச் சென்ற சாரதிக்கு 25 ஆயிரம் ரூபாவும், அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற வாகனச் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

மிருகங்களைச் சித்திரவதைப் படுத்தும் வகையில் வாகனத்தில் ஏற்றிச் சென்ற சாரதிக்கு 10 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் அபரா தம் விதிக்கப்பட்டது.

இரவு வேளையில் வெளிச்சம் குறைக்காது வாகனம் செலுத்தி யமை,அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலாக ஆள்களை ஏற்றிச் சென்றமை, பாதசாரிகள் கடவையில் பொதுமக்கள் செல்கை யில் வாகனத்தை நிறுத்தாமல் சென்றமை, ஆபத்தான முறை யில் வாகனத்தைச்செலுத்தியமை, விபத்தை ஏற்படுத்தும் வகை யில் வாகனத்தை செலுத்தியமை, பிரேக் வெளிச்சமின்றி வாகனம் செலுத்தியமை, வாகன வரிப்பத்திரம் காப்பு றுதிப்பத்திரம் இன்மை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை போன்ற குற்றங்களுக்காக 11 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது.

(ற-ஜ-9)

## விபத்தை ஏற்படுத்திய நபருக்குப் பிணை

சாவகச்சேரி, ஏப்.22

வீதியில் சென்றவரைக்காரால் மோதிக் காயப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட வைத்திய அதிகாரியை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்று கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதித்தது.

கடந்த இரண்டாம் திகதி சாவகச்சேரி–டச்சு வீதியில் சென்ற 34 வயது குடும்பஸ்தரை அந்த வழியே வந்த வைத்திய அதிகாரி யின் கார் மோதிக்காயத்தை ஏற்படுத்தித்து என்று பொலிஸாரி னால் தெரிவிக்கப்பட்டிருந்தது. காயமடைந்தவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். சாவகச்சேரி வைத்தியசாலை பொலிஸாரின் தகவல் பிரகாரம் குறித்த வைத்திய அதிகாரிக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் வைத்திய அதிகாரியை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல அனுமதித்து வழக்கை ஜுன் மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ற-9)

## வீடு புகுந்த இனந்தெரியாதோர் உரிமையாளர் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஏப்.22

உடுவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நுழைந்த மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் நால்வர், வீட்டு உரிமையாளரைத் தாக்கியதோடு, வாளால் வெட்டிப் படு காயப்படுத்தி விட்டுத் தப்பித்துள்ளனர்.

நேற்றிரவு 8 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் உடுவில் தெற்கைச் சேர்ந்த தியாகராஜா சுசிலன் (வயது - 28) என்பவரே தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

தாக்குதலுக்கு உள்ளானவரின் வீட்டுக்கு, இரு மோட்டார் சைக் கிள்களில் தமது முகம்களை மறைத்தவாறு இரவு நேரம் சென்ற நால்வர், குறித்த நபர் மீது பலமாகத் தாக்கியுள்ளனர்.

இவ்வாறு தாக்குதல் மேற்கொண்ட சமயம் வீட்டார் எழுப்பிய சத் தத்தினையடுத்து, தாக்குதல்தாரிகள் வாளினால் வெட்டிக் காயப் படுத்தி விட்டுத்தப்பித்துள்ளனர்.

இந்த நிலையில் படுகாயமடைந்தவர் தெல்லிப்பழை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ -101)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சிவகுரு

(ஓய்வுநிலை ஆசிரியர் - யா/பெரியபுலம் மகாவித்தியாலயம், முன்னாள் தலைவர் - வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப்பிள்ளையார் ஆலயம், ஸ்தாபகர் - ஐங்கரன் சனசமூக நிலையம்)



பாலாவி தெற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவகுரு நேற்று (21.04.2016) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும், பவானி, இளங்கோ (அதிபர் - யா/வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்), அருள்நந்தி (உரிமையாளர் - அருள் நகையகம் - யாழ்ப்பாணம்), அருட்செல்வன் (உரிமையாளர்,செல்வா களஞ்சியம்), காலஞ்சென்ற கலைச்செல்வி மற்றும் கலைவாணி (ஜேர்மனி),சிவரஞ்சினி (முகாமைத்துவ உதவியாளர் - பாண்டியன்குளம் உதவி அரச அதிபர் அலுவலகம்) ஆகி யோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (ஜே/553) (11,17,18)

தகவல்:
**திரு.சி.இளங்கோ**
(அதிபர், யா/ வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம், காரைநகர்)

முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,,
யாழ்ப்பாணம்.

### திருமதி தயாவதி நவகுமாரன்



சரசாலை தெற்கைப்பிறப்பிடமாகவும், உசன் மற்றும் 17/45, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாவதி நவகுமாரன் நேற்று (21.04.2016) காலமாகிவிட்டார் .

அன்னார் காலஞ்சென்ற இந்துபோர்ட் (Hindu Board) சு. இராஜரட்ணத்தின் அன்புப் பேர்தியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன் (முன்னாள் அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), யோகாம்பாள் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், உசனைச் சேர்ந்த காலஞ் சென்ற நவரத்தினம் மற்றும் உமாமகேஸ்வரி தம்பதிய ரின் அன்பு மருமகளும், நவகுமாரின் (ஓய்வு நிலை வங்கி உத்தியோகத்தர், Commercial Bank, Jaffna) அன்பு மனைவியும், மாதங்கி (யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட மூன்றாம் வருட மாணவி), கிருத்திகன் (Sam path Bank, Kayts), தாரங்கி (G.C.E. A/L 2016 Batch, மாணவி, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாட சாலை) தனுரங்கி (தரம் 10 மாணவி, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், யாசோதாவின் அன்புச் சகோதரியும், கிருஸ்ணமூர்த்தி, சறோஜினி, சாந்தினி, சிவகுமார், ரவிக்குமார், றஜனி, நளாயினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (24.04.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் சரசாலை தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணியள வில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
ந. நவகுமாரன்
(Rtd Banker, Commercial Bank, Jaffna).

பருத்தித்துறை வீதி,
(சரஸ்வதி வித்தியாலயம் அருகில்)
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னம்மா காசிப்பிள்ளை



புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் அச்செழு மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா காசிப்பிள்ளை நேற்று (21.04. 2016) பிற்பகல் ஒரு மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் மனைவியும், பாலசுந்தரம், பாஸ்கரன் (ஜேர்மனி), குணசேகரம், மஞ்சலிங்கம், சீதாலட் சுமி, சுகந்தினி ஆகியோரின் தாயாரும், உதயரேகா (ஜேர்மனி), யோகரஞ்சினி, நாகரூபன், கஜந்தன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற நாகம்மா மற்றும் நடராஜா (கனடா), காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும், கஜானி, கயூரன், ஜதுசன், சிவதுதி, துதிகரன், தர்சனன், லக்சனா, சர்மிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22.04. 2016 மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அச்செழு மத்தி, நீர்வேலி. தகவல்: குடும்பத்தினர்.

### சின்னத்தம்பி குமரேசன்



வரணி தம்பாளையைப் பிறப்பிடமாகவும் மாசேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குமரேசன் நேற்று (21.04. 2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலாசியின் அன்புக் கண வரும், காலஞ்சென்ற வர்களான கணபதி, சின்னப்பிள்ளை, கந்தசாமி, இராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதய குமார் (நோர்வே), உதயகுமாரி, இராஜ்குமார் (ராஜ் பிரிண்டிங்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகதர்சினி (நோர்வே), கலாநிதி விஜயகுமார் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்), சுமதி ஆகியோரின் பாசமிகு மாமனும், டிலக்ஷன், அபிசன், லக்ஷிகா, கரிஷ்ராஜ், சாருதன், தீபிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04. 2016) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு திருநெல்வேலி அரசடி வீதியில் உள்ள அவரது மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 668 0013**

**25/18, அரசடி வீதி,**
**கேணியடி, திருநெல்வேலி.**

### செல்லையா இராமலிங்கம்



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிட மாகவும் கொண்ட செல்லையா இராமலிங்கம் நேற்று (21.04. 2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சுந்தரேஸ்வரியின் அன்புக் கணவரும், திருச்செல்வம் (சவுதி), ரதி (ஆசிரியை, நவாலி மகாவித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும், சரஸ்வதி, காலஞ் சென்ற வேலாயுதம் ஆகி யோரின் அன்புச் சகோதரரும், சைனி, ஈஸ்வரன் (துபாலதிபர், சுழி புரம்) ஆகியோரின் மாமனும், ராஜா, ரவி, சதுர்ஜா ஆகியோரின் பாச மிகு பேரனும் ஆவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04. 2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு ஆரியப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
ஈஸ்வரன்
(மருமகன்)

நவாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் வலைப் பந்தாட்டத்தில் வென்றது சங்கிலியன் இ.கழகம்

யாழ்ப்பாணம், ஏப். 22
நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்த இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் நல்லூர் சங்கிலியன் இளைஞர் கழக அணி சம்பியனானது.
நல்லூர் சங்கிலியன் இளைஞர் கழக அணியை எதிர்த்து அரியாலை சரஸ்வதி இளைஞர் கழக அணி மோதிய இந்த இறுதியாட்டம் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
இதில் நல்லூர் சங்கி லியன் இளைஞர் கழக அணி 37:31 என்ற புள்ளிகளின் அடிப் படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## மன்னார், மாந்தை பிரதேசங்கள் பூப்பந்தில் கிண்ணம் வென்றன

யாழ்ப்பாணம், ஏப். 22
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை மன்னார் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை மாந்தை மேற்கு பிரதேச செயலக அணியும் தமதாக்கின.
ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை மாந்தை மேற்கு பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை நானாட்டான் பிரதேச செயலக அணியும் தமதாக்கின. (ம-23)

## புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி இலங்கை – இங்கிலாந்து தொடரில்





இங்கிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்குமிடையில் இடம்பெறவுள்ள தொடரின் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்கு, புள்ளிகளைப் பயன்படுத்தும் திட்டத்தை, இங்கிலாந்து கிரிக்கெட் சபை பரிந்துரைத்துள்ளது.
இந்த இரு அணிகளுக்கும் இடையே 3 டெஸ்ட், 5 ஒருநாள், ஓர் ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடர் அடுத்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் புள்ளிகளின் அடிப்படையில் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை பரிந்துரைத்துள்ளது.
டெஸ்ட் ஆட்டமொன்றின் வெற்றிக்கு 4 புள்ளிகளும் சமநிலைக்கு இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகளும் வழங்கப்படும். ஒருநாள், ரி-20 ஆட்டங்களின் வெற்றிக்கு 2 புள்ளிகள் கிடைக்கும். இதன்படி, ஓர் அணி, 3 டெஸ்ட் ஆட்டங்களிலும் வெற்றிபெற்றால், 12 புள்ளிகளைப் பெற, அந்தத் தொடரில் காணப்படும் 5 ஒருநாள் ஆட்டங்களையும், ரி-20 ஆட்டத்திலும் வெற்றிபெறும் அணியும் 12 புள்ளிகளையே பெறும்.
எனவே, ஒரு வகையான ஆட்டத்தில் மாத்திரம் சிறப்பான திறமைகளைக் கொண்ட அணி, ஒட்டுமொத்தத் தொடரை வெற்றி கொள்ள முடியாது போகும் என்பது குறிப்பிடத்தக்கது. புள்ளிகளின் அடிப்படையில் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் முறை, பெண்கள் ஆஷஸ் தொடரில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இருப்பினும் இலங்கைக் கிரிக்கெட் சபை இந்த முறைமைக்கு தனது இறுதி முடிவை அறிவிக்கவில்லை. (ம)

## கரப்பந்தாட்டத்தில் சாதித்தது சரஸ்வதி இளைஞர் கழகம்

யாழ்ப்பாணம், ஏப். 22
நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்த இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் சரஸ்வதி இளைஞர் கழக அணி சம்பியனானது.
அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் அரியாலை சரஸ்வதி இளைஞர் கழக அணியை எதிர்த்து அரியாலை காந்தி இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. இதில் அரியாலை சரஸ்வதி இளைஞர் கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## சம்பியனானது நியூவொரியஸ்



யாழ்ப்பாணம், ஏப். 22
உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தில் பதிவு செய்த கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மல்லாகம் நியூவொரியஸ் இளைஞர் கழகமும் பெண்கள் பிரிவில் சுன்னாகம் அம்பாள் இளைஞர் கழகமும் சம்பியனாகின.
மல்லாகம் நியூவொரியஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மல்லாகம் நியூவொரியஸ் இளைஞர் கழக அணியை எதிர்த்து இணுவில் கலையொளி அணி மோதியது. இதில் மல்லாகம் நியூவொரியஸ் இளைஞர் கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சுன்னாகம் அம்பாள் இளைஞர் கழக அணியை எதிர்த்து சுன்னாகம் சிவன் இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. இதில் சுன்னாகம் அம்பாள் இளைஞர் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

## நியூவொரியஸ், சுன்னாகம் சிவன் அணிகள் உடுவில் பிரதேச எல்லேயில் சம்பியனாகின

யாழ்ப்பாணம், ஏப். 22
உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்த இளைஞர் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடரில் ஆண்கள் பிரிவில் மல்லாகம் நியூவொரியஸ் இளைஞர் கழக அணியும் பெண்கள் பிரிவில் சுன்னாகம் சிவன் இளைஞர் கழக அணியும் சம்பியனாகின.
ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் குப்பிளான் விக்னேஸ்வரா இளைஞர் கழக அணியை எதிர்த்து மல்லாகம் நியூவொரியஸ் இளைஞர் கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் நியூவொரியஸ் அணி 30 பந்துகளில் 9 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய குப்பிளான் விக்னேஸ்வரா இளைஞர் கழக அணியால் 3 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. இதனையடுத்து மல்லாகம் நியூவொரியஸ் இளைஞர் கழக அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சுன்னாகம் சிவன் இளைஞர்கழக அணியை எதிர்த்து மல்லாகம் நியூவொரியஸ் இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் நியூவொரியஸ் இளைஞர் கழக அணி 30 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற, பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் சிவன் இளைஞர் கழக அணி 9 பந்துகளில் இலக்கை அடைந்து வெற்றிபெற்றது. (ம-23)

## யங்ஹென்றிஸ், சென்.அன்ரனிஸ் அணிகள் முன்னேற்றம்

கரணவாய், ஏப். 22
திக்கம் இளைஞர் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**யங்ஹென்றிஸ் - சிறிவிக்னேஸ்வரா**
யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடர் திக்கம் இளைஞர் வி.கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளை யாட்டுக் கழகமும் புத்தூர் சிறிவிக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின.
இரு அணிகளதும் விடாப் போராட்டத்துக்கு ஏற்ப கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கிட்டத்தட்ட அதேநிலை காணப்பட்டாலும் 11 ஆவது நிமிடத்தில் ஹென்றிஸ் அணியின் முன்கள வீரர் தனேஸ் தனது அணியின் சார்பாக கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார்.
பழிதீர்க்க வேண்டிய கட்டாயத்தில் படாதபாடுபட்ட விக்னேஸ்வராவின் எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை. ஆட்டம் நிறைவடையும் தறுவாயில் தனேஸிடமிருந்து மற்றுமொரு கோல் பதிவானது. இதனால் யங்ஹென்றிஸின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. வேறெந்த மாற்றமும் ஏற்படாத நிலையில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம்.

**சென்.அன்ரனிஸ் - இருதயராஜா**
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியும் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் அன்ரனிஸ் பெரும் ஆதிக்கம் செலுத்தியது.
இருதயராஜா ஆட்டத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் முனைப்பில் அவ்வப்பொழுது சில கோல்களைப் பதிவுசெய்த போதிலும் முடிவில் 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி. (ம-108)

## கிண்ணங்களை வழித்துத் துடைத்தன கே.ஸி.ஸி.ஸி. இளைஞர் கழக அணிகள்

யாழ்ப்பாணம், ஏப். 22
நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்த இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்ட தொடரில் இரு பிரிவிலும் கே.ஸி.ஸி.ஸி. அணி சம்பியனானது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைபந்தாட்டத்திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆண் களுக்கான இறுதியாட்டத்தில் நல்லூர் சங்கிலியன் இளைஞர் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. இளைஞர் கழக அணி மோதியது. இதில் கே.ஸி. ஸி.ஸி. இளைஞர் கழக அணி 87:70 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.
கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் நல்லூர் சங்கிலியன் இளைஞர் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. இளைஞர் கழக அணி மோதிக் கொண் டது. இதில் கே.ஸி.ஸி.ஸி. இளைஞர் கழக அணி 47:46 என்ற புள்ளி களின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பியாவில் நேற்று எரிந்தது ஒலிம்பிக் தொடருக்கான தீபம்



நடப்பு வருடத்துக்கான ஒலிம்பிக் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி கோலாகலமாக தொடங்குகிறது. ரியோ நகரில் 17 நாள்கள் நடைபெறும் இந்த ஒலிம்பிக் 21ஆம் திகதி நிறைவடையும். இந்த நிலையில் ஒலிம்பிக் தொடருக்கான கவுன்டவுன், ஒலிம்பிக்கின் தாயகமான கிரீஸ்நாட்டின் ஒலிம்பியா நகரில் ஒலிம்பிக் தீபம் ஏற்றத்துடன் நேற்று ஆரம்பமாகியது. இந்தத் தீபமானது 329 நகரங்கள் வழியாக பயணம் செய்து ஒலிம்பிக் தொடர்நடைபெறும்பிரேசில்நாட்டை மே 3ஆம் திகதி சென்றடைகிறது. இதன் பின்னர் பிரேசிலியாவில் கொண்டாட்டங்கள் தொடங்கும். ஒலிம்பிக் தீபமானது பிரேசில் நாட்டின் 26 மாநில தலை நகரங்களிலும் பயணம் செய்கிறது. நாட்டு மக்களில் 90 சதவீதம் பேர் ஒலிம்பிக் தீபத்தைக் கண்டுகளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

பிரேசில் நாட்டுக்குள் நுழையும் தீபமானது அடர்ந்த காடுகள், வெற்று நிலம், நீர்சூழ்ந்த அருவிகள் வழியாகவும் பயணிக்கிறது. தீப ஓட்டத்தில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்கள் பங்கேற்க உள்ளனர். ஒவ்வொருவரும் தீபத்தை 200 மீற்றர் வரை எடுத்துச் செல்வார்கள். ஒலிம்பிக் தீபத்தை கைகளில் ஏந்திச் செல்லும் வாய்ப்பை இந்தமுறை அகதிகளும் பெற்றுள்ளனர். ஏதென்ஸ் அருகில் உள்ள இலினோஸ் முகாமை ஒலிம்பிக் தீபம் கடந்து செல்லும் போது அங்கு தங்கியிருக்கும் அகதிகள் தீப ஓட்டத்தில் பங்கேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் ஆப்கானிஸ்தான், ஈரானைச் சேர்ந்தவர்களே அதிக அளவில் அகதிகளாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக் தீபமானது சிறப்பான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 5 நிறங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு நிறமும் பிரேசில் நாட்டின் இயற்கை வளத்தை குறிப்பதாக உள்ளது. தீபத்தின் மேல் பகுதி தங்க நிறத்தில் காணப்படுகிறது. இது வானத்தையும், சூரியனையும் குறிக்கிறது. இரண்டாவதாக பச்சை நிறம்.

இது ரியோ நகரின் மலை வளத்தை குறிப்பதாக உள்ளது. மூன்றாவது நீல நிறம். இது கடல்வளத்தை குறிக்கிறது. அடுத்தது கருநீலம். இது மைதானத்தையும், ரியோ நகரம் மற்றும் பிரேசில் நாட்டின் நிலத்தையும் குறிப்பதாக அமைந்துள்ளது. (ம)

## இன்றைய மோதல்கள்

***விக்ரோறி வி.கழகத் தொடர்***

மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் அமரர் ராகவன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஏ பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் இரவு 7 மணிக்கு சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியை எதிர்த்து இளவாலை மத்திய அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி யுத் அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதவுள்ளது.

***அறிவொளி வி.கழகத் தொடர்***

பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

***அல்ஹிஜிரா வி.கழகத் தொடர்***

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக் கழகம்வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத்தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத் தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதவுள்ளது.

***இமையாணன் மத்திய வி.கழகத் தொடர்***

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற் பகல் 3.30 மணி முதல் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம் பெறவுள்ளன. இந்தத் தொடரில் இன்று இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கரவெட்டி கரவைச் சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத் தலைவர் சி.வசந்தகுமார் தலைமையில் இடம்பெறும் ஆரம்பநாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், சு.சுகிர்தன், க.தர்மலிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் சி.அகிலதாஸ், கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சிவசிறி உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-108)

## நானாட்டான், மன்னார் பிரதேசங்கள் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 22

மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான மேசைப் பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை நானாட்டான் பிரதேச செயலக அணியும் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை மன்னார் பிரதேச செயலக அணியும் தமதாக்கின. ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை மன்னார் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை மாந்தை மேற்கு பிரதேச செயலக அணியும் கைப்பற்றின. (ம-23)

## திருநெல்வேலி வி.கழகம் இறுதிக்குத் தகுதி பெற்றது

யாழ்ப்பாணம், ஏப். 22

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் திருநெல்வேலி விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் பரிஸ் அணியை எதிர்த்து திருநெல்வேலி அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிதர்சன் 36 ஓட்டங்களையும் ஆன்சிலின் 55 ஓட்டங்களையும் சயிந் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் திருநெல்வேலி விளையாட்டுக் கழக அணியின் சார்பில் சுரேன் 3 இலக்குகளையும், சுரேஸ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

209 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி விளையாட்டுக் கழக அணி 27 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக அசோக் 50 ஓட்டங்களையும், ராஜ் 39 ஓட்டங்களையும், சுரேஸ் 34 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மானிப்பாய் பரிஸ் அணியின் சார்பில் கோபிராஜ் 3 இலக்குகளையும் உமாசங்கர், நிதர்சன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம-23-422)

## போராடி வென்றது அல்மதார் அணி

யாழ்ப்பாணம், ஏப். 22

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அல்மதார் அணி வெற்றிபெற்றுள்ளது.

ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஏ.பி.சி. அணியை எதிர்த்து அல்மதார் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஓர் கோலினைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் கிண்ணம் தீர்மானமாகவேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் அல்மதார் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## அரையிறுதியில் கலைமகள்

யாழ்ப்பாணம், ஏப். 22

மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் அமரர் ராகவன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் கரப்பந்தாட்டத் தொடரில் கலைமகள் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

தொடரின் ஆட்டங்கள் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற பி பிரிவு அணிகளுக்கு இடையிலான காலிறுதியாட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து மல்லாகம் நியூவொரியஸ் அணி மோதிக் கொண்டது. இதில் அச்சுவேலி கலைமகள் அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்குத்தகுதி பெற்றது. (ம-23)

## ஐ.பி.எல். கிண்ணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோர்ணர், தவான் ஆட்டத்தால் குஜராத்தை வென்றது ஹைதராபாத்

## காணி உடன் தேவை

25 ஏக்கரிற்கும் அதிகமான பரப்பளவுள்ள உறுதிக்காணி உடனடிக் கொள்வனவிற்குத் தேவை. வடமாகாணத்தில் எப்பகுதியிலும் இருக்கலாம்.

078 284 5000

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

எமது நிறுவனத்தில் கடமை புரிவதற்கு முன் அனுபவம் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உடனடியாக தேவை. விருப்பம் உள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்

வயதெல்லை 20 - 40வரை

கிறீன் கிறாஸ் ஹோட்டல்
No 33, ஆசீர்வாதம் லேன்,
வைத்தியசாலை வீதி
யாழ்ப்பாணம்.
0217201194, 0777803874



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஹைதராபாத்-குஜராத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 10 இலக்குகளால் அபார வெற்றிபெற்றது ஹைதராபாத்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத்துக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார் பின்ஞ். ஒவ்வொரு பந்தையும் பவுண்டரிக்கு அனுப்பும் நோக்கத்துடன் துடுப்பெடுத்தாடும் மக்கலம் நேற்று கொஞ்சம் நிதானித்தார். 18 ஓட்டங்களுடன் மக்கலம் ஆட்டமிழக்க ஓர் முனையில் ஆறுதல் கொடுத்தார் ரெய்னா. இருப்பினும் மறுமுனை பவலீனமாகவே உணரப்பட்டது. ஜடேயாவைத் தவிர வேறு எவரும் இரட்டை இலக்கத்தை எட்டவில்லை. ஜடேயாவால் முடிந்ததும் 14 ஓட்டங்களே. 34 பந்துகளில் அரைச்சதம் கடந்து 75 ஓட்டங்களுடன் இறுதிப்பந்துப்பரிமாற்றத்தில் ஆட்டமிழந்தார் ரெய்னா. முடிவில் குஜராத் 135-8.

பந்துவீச்சில் ஹைதராபாத் சார்பாக புவனேஸ்குமார் 4 இலக்குகளையும், சரண், ரகுமான், கூடா, விபுல் சர்மா நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

120 பந்துகளில் 136 ஓட்டங்கள். இது ஒரு இலக்கேயல்ல. இலகுவாக ஊதித்தள்ளி விடலாம். ஆரம்ப வீரர்களாக தவான் மற்றும் வோர்ணர். ஆரம்பமே வெற்றிக்குரிய நம்பிக்கையைத் தந்தது. தவான் ஓர் முனையில் நிலைத்தாலும் மறுமுனையில் வோர்ணர் அமர்க்களப் படுத்தினார். 29 பந்துகளில் வோர்ணரின் அரைச்சதம் பதிவானது. பத்துப் பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் இலக்கை இழக்காமல் 90 ஓட்டங்களை எட்டியது ஹைதராபாத். அடுத்தடுத்து மூன்று பவுண்டரிகளை விளாசி போர்முக்குத் திரும்பியதை உறுதிசெய்தார் தவான். இணைப்பாட்டம் தொடர்ந்தும் நிலைபெற இலக்கை இழக்காமல் 31 பந்துகள் மீதமிருக்க வெற்றியை எட்டியது ஹைதராபாத். வோர்ணர் 74 ஓட்டங்களுடனும் தவான் 53 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர். (ம)

## கே.ஸி.ஸி.ஸி. இறுதியில்

யாழ்ப்பாணம், ஏப். 22

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் கே.ஸி.ஸி.ஸி. அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. அணி 30 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 276 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக யனுதாஸ் 62 ஓட்டங்களையும், ஆதித்தன் 55 ஓட்டங்களையும் ஜெயறுபன் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணியின் சார்பில் வதுசன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

277 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 261 ஓட்டங்களையே பெற, கே.ஸி.ஸி.ஸி. அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. அதிகபட்சமாக செல்ரன் 52 ஓட்டங்களையும், ஜனோசன் 41 ஓட்டங்களையும், வினோத்குமார் 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கே.ஸி.ஸி.ஸி. அணியின் சார்பில் உத்தமன் 3 இலக்குகளையும், ராகுலன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23-422)

## ஞாபகங்களின் வலி

ஒளிப்படப்போட்டி





படங்கள் உங்களுடையவை என்பதை உறுதிப்படுத்தும் கையால் எழுதப்பட்ட உறுதிமொழிக் கடிதம்.

ஒருவர் எத்தனை படங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். அனைத்தும் தலைப்பைப் பிரதிபலிப்பவையாக இருக்கவேண்டும்.

ஏற்கனவே போட்டிகளுக்கு அனுப்பப்பட்ட படங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

படங்கள் கடந்த 6 வருடகாலங்களுக்குள் எடுக்கப்பட்டவையாக இருக்கவேண்டும்.

அனுப்பப்படும் படங்களுடன் அது பற்றிய 100 சொற்களுக்கு அதிகரிக்காத விளக்கமும் சேர்க்கப்படவேண்டும். (எப்போது, எங்கு, எந்தச் சூழலில் எடுக்கப்பட்டது. பயன்படுத்தப்பட்ட கமெரா போன்ற விவரங்கள் உள்ளடக்கப்படுவது அவசியம்)

தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படவேண்டும்.

தொடர்பு இலக்கம் அத்தியாவசியமானது.

ஒளிப் படங்கள் A3 தாள் அளவில் பிரிண்ட் எடுக்கப்பட்டிருக்கவேண்டும்.

### பரிசுகள்

30,000/-
10,000/-
10,000/-

சிறந்த ஒளிப்படங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும். அவற்றிலிருந்து நடுவர்களால் தெரிந்தெடுக்கப்படும் படங்களுக்குப் பரிசு வழங்கப்படும்.
(நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது)

கால எல்லை
27.04.2016

போட்டியாளர்களால் வழங்கப்பட்ட தகவல்கள் தவறானவை என்பது கண்டறியப்பட்டால் அது ஊடகங்கள் மூலம் பகிரங்கப்படுத்தப்படுவதுடன் பரிசு மீளப்பெறப்படும்.

ஊடக சுதந்திர
தினம் மே 2
யாழ்ப்பாணம்

ஒளிப்படங்களை அனுப்ப வேண்டிய முகவரி 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.